

கல்கி

KALKI 2-11-1975 75 காசு


அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!




EP-RASI-106

காயங்கள் வெவ்வேறு உருவங்களிலும் அளவுகளிலும் ஏற்படுகின்றன.

ஆகையால் அவற்றுக்கேற்ப வருகின்றன, புதிய பாண்டு-எய்ட்* டிரஸ்ஸிங்குகள்.





காயங்களால் தொற்று நோய் பரவக்கூடும். எனவே, புதிய பாண்டு-எய்ட்* டிரஸ்ஸிங் பயன்படுத்தி, அவற்றைப் பாதுகாருங்கள். இப்போது அவை வெவ்வேறு உருவங்களிலும் அளவுகளிலும் கிடைக்கின்றன 5 எண்ணிக்கை கொண்ட ஸ்ட்ரிப்புகளில் வசதியாக வருகின்றன.

பாண்டு-எய்ட்* டிரஸ்ஸிங்கைப் பயன்படுத்தி முன் ஜாக்கிரதையுடன் இருங்கள். எப்பொழுதும் சில டிரஸ்ஸிங்குகள் கைவசமிருக்கட்டும்.

எப்பொழுதும்
பாண்டு-எய்ட்*
டிரஸ்ஸிங்கின்
பெயரைக் கேளுங்கள்.
இதற்குப் பதிலாக வேறு எதையும்
ஏற்காதீர்கள்.

Johnson & Johnson

* Trademark © J&J 75

OBM-4533 TM




கல்கி

ராக்ஷஸ
ஐப்பசி 16

நவம்பர் 2
1975


"கல்கி" யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

உங்களால் முடியுமா ?



எலும்பைத் தனதாக்கிக்கொள்ள நாய் துடியாக இருக்கிறது. மூன்று கயிறுகள் இருக்கின்றன. எந்தக் கயிற்றைப் பிடித்து இழுத்தால் அதற்கு எலும்பு விருந்து கிடைக்குமென்று கூறுங்களேன். (விடை: 2)

புள்ளி வைத்துள்ள பகுதிகளை வண்ணப் பென்சிலால் நிரப்புங்கள். உங்களுக்கு ஒர் உருவம் கிடைக்கும்.




கண்ணைக்கவரும் வண்ணமய ரகங்களிலிருந்து
உங்களுக்கு தேவையானதை தேர்ந்தெடுங்கள்
லக்ஷ்மியின்
ப்ரீதி
செமி ஃபுல்
வாயில் புடவைகள்
உயர்ந்த ரக பருத்தியால்
தயாரிக்கப்பட்டவை
லக்ஷ்மியின் ப்ரீதி புடவைகள்
உங்களை அழகாக
தோற்றமளிக்கச் செய்யும்.
தேர்ந்தெடுக்க பல ரகங்கள்
ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும்,
விசேஷ சந்தர்ப்பத்திற்கும்
மிக ஏற்றவை.
ஸ்ரீ
லக்ஷ்மி
மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்
உயர்ந்த துணிகளின்
உன்னத சின்னம்

எம். எஸ்.

கல்கி

மலர் 35

இதழ் 14

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடீ பாப்பா -- பாரதியார்

எம். எஸ். என்ற எழுத்துக்கள் இன்று ஜகத்பிரசித்தி பெற்றுவிட்டன. உலகப் பிரசித்திபெறுவது பெரிய காரியமல்ல. எந்தவிதமாகப் பெற்ற பிராபல்யம் என்பதிலேதான் சிறப்புக்கள் அடங்கியுள்ளன.

அவ்விதம் நோக்கும்போது எம். எஸ். என்ற எழுத்துக்கள் ஒரு நபரைக் குறிப்பிடுவது மட்டுமல்ல, பல உயர்ந்த குண நலன்களின் ஒட்டுமொத்த உருவத்தைச் சுட்டுவனவாகவே அமைந்துவிட்டிருப்பதைக் காண்கிறோம்.

பக்தி, கலை ஞானம், அடக்கம், ஈகை, விருந்தோம்பல், நட்புறவு பேணல் போன்ற பல உன்னதப் பண்புகளைக் கொண்டவர் ஸ்ரீமதி எம். எஸ்.

இவையெல்லாவற்றையும் ஒருசேர ஒரே சொல்லில் அடக்குவதென்றால் டி. கே. சி. கண்டுபிடித்துத் தந்த பண்பாடு என்ற வார்த்தையைத்தான் உபயோகிக்க வேண்டும்.

ஆக தமிழர் பண்பாட்டின் முழு உருவம், பாரதப் பண்பாட்டின் உறைவிடம் ஸ்ரீமதி எம். எஸ். என்று கூறலாம்.

ஸ்ரீமதி எம். எஸ். மலேஷியா செல்கிறார் என்றால் பாரதப் பண்பாடும் தமிழரின் தனிப் பண்பாடும் மலேஷியா செல்வதாக அர்த்தம். மலேஷியாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே நட்புறவு பெருகவும் இரு நாட்டு மக்களுக்குமிடையே நல்லெண்ணம் வளரவும் ஸ்ரீமதி எம். எஸ். அவர்களைவிடச் சிறந்த ஒரு கலாதூதரை நாம் அனுப்ப முடியாது.

ஸ்ரீமதி எம். எஸ். அவர்களிடம் உள்ள சிறந்த குணாதிசயங்களுள் மக்களை வெகுவாகக் கவர்ந்தது அவரது அடக்கம் என்றே எண்ணத் தோன்றுகிறது. இல்லாத போனால் எம். எஸ். எஸ். என்பதைச் சுருக்கி வழக்கில் எம். எஸ். என்றே அவரது ரசிகர்கள் பேசுவார்களா? மதுரையையும் சண்முகவடிவையும் குறிப்பிட்டால் போதும், சுப்புலக்ஷ்மி அதற்குள் அடக்கம் என்று எண்ணிவிட்டார்கள்!

கர்நாடக இசை உலகில் இன்று தம்நிகரற்று விளங்கும் ஸ்ரீமதி எம். எஸ்., இன்னமும் தம்மை ஒரு மாணவியாகவே கருதிக் கொள்கிறார் என்றால் அது அவரது அடக்கம். ஆனால் முதல்தர மாணவியாகவும் திகழ்கிறாரே அது அவரது அபார ஞானம். கர்நாடக இசையில் புதிதாக ஒரு பாட்டைக் கவனம் செய்வதாயினும் சரி, பாரத நாட்டின் வேறு எந்த ஒரு மொழியிலும் மரபிலும் அமைந்த பாட்டாயினும் சரி ஒரு முறை கேட்ட மாத்திரத்தில் அந்த இசையின் நெளிவுசுளிவுகளையும் பாடலின் பக்தி பாவங்களையும் அப்படியே கிரகித்துக் கொண்டு மேலும் மெருகேற்றிப் பாடிக் கற்றுக் கொடுக்க நினைத்தவருக்கே பிரமிப்பை ஏற்படுத்திவிடுவது அவருக்கு வழக்கமாகிவிட்ட வித்தை!

எம். எஸ்ஸின் ஞானமும் அடக்கமும் உடன் பிறந்தவை என்றால் ஈகை, விருந்தோம்பல், நட்புறவு பேணல், சுற்றம் காத்தல் போன்ற பல பண்புகள் அவர் தமது கணவர் ஸ்ரீ சதாசிவம் அவர்களிடம் கற்றவை. வழங்குவதையே வாழ்க்கை நெறியாகக் கொண்ட ஸ்ரீ சதாசிவம் சிங்கப்பூர் மலேஷியப் பயணத்தை மேற்

கொள்ளு முன்னரே இந்தக் கச்சேரிகளுக்காகக் கிடைக்கப் போகிற விசேஷ சன்மானத்தைக் காஞ்சி காமகோடி மடத்துக்குக் காணிக்கையாக்கி விட்டிருக்கிறார். பெரியவாளின் அருளாசி பெற்று இந்த ஆதர்ச தம்பதி புறப்பட இருக்கின்றனர்.

ஸ்ரீமதி எம். எஸ்ஸின் சிறப்புக்களிலெல்லாம் மகுடம் வைத்தாற் போன்ற தனிச் சிறப்பு, பக்தியால் அவரது இசை வளர்வதும் இசையால் அவர் பக்தி வளர்ப்பதும் ஆகும். ஸ்ரீ சதாசிவம் நண்பர்களிடையே உரையாடும் போது ஒரு சமயம் குறிப்பிட்டார்:

''பன்னிரண்டாவது வயது முதல் மேடை ஏறிப் பாடி வரும் குஞ்சம்மாவுக்கு ஓய்வு தர வேண்டும் என்று அண்மைக் காலமாக நான் நினைக்கிறேன். ஆனால் அவள் கச்சேரி செய்யும்போது என் உள்ளத்தைப் போலவே ரசிகர்களின் மனங்களும் கரைந்து உருகுவதை உணரும்போது இந்தப் பாட்டுக்கு ஓய்வு தர எண்ணியது சரியல்ல என்றும் எனக்குத் தோன்றுகிறது. கடவுள் சித்தம் எப்படியோ அப்படி நடக்கட்டும் என்று சும்மா இருந்து விடுகிறேன்.''

கடவுள் சித்தம், ஸ்ரீமதி எம். எஸ். இன்னும் நீண்ட காலம் ஆரோக்கியத்துடன் ஆனந்தமாகப் பாடிக் கொண்டிருந்து நம்மையெல்லாம் பக்தி பரவசத்தில் ஆழ்த்த வேண்டும் என்பதாகத்தான் இருக்கும். சதாசிவம் தம்பதியருக்குக் கண் கண்ட தெய்வமாகத் திகழும் காஞ்சி முனிவரது அருளாணையும் அதுவாகவேதான் இருக்க முடியும்.

சிங்கப்பூர், மலேஷியாவுக்குத் திக்விஜயம் புறப்படும் கலைத் தூதரை, 'சென்று வாருங்கள், வென்று திரும்புங்கள்' என்று தமிழ்ப் பெரு மக்கள் சார்பில் வாழ்த்தி வழியனுப்புகிறோம்.

தீபாவளித் திருநாளையொட்டி வெளியாகும் இவ்விதழ் மேலட்டையில் தீபமேற்றிப் பாடுவது போன்ற அவரது படத்தைப் பிரசுரிப்பதை மங்களகரமான வாய்ப்பாகக் கருதி மகிழ்கிறோம்.

வண்ணப்படம்: **ரவீந்திரபல்லா**

பயனுள்ள செலவு!

அறிஞர் அண்ணாவின் பெயரால் மதுரை மாநகராட்சிக்கு அழகு மாளிகை உருவாகியுள்ளது.

இதில் பாராட்டுக்குரிய ஓர் அம்சம் அறுபது லட்சத்துக்குத் திட்டமிட்டு ஐம்பத்தைந்து லட்சத்தில் கட்டடத்தை முடித்ததே. இத்துடன் பொதுப்பணித் துறைக்கு மாநகராட்சி தர வேண்டிய ஸெண்டேஜ் தொகையும் சேர்த்தால் பதினைந்து லட்சம் லாபம்.

மிச்சமான பத்து லட்சத்தை நகரசுத்திகரிப்பாளருக்கு வீடு கட்டித் தரப் பயன்படுத்தப் போவதாக முதல்வர் அறிவித்திருக்கிறார்.

மதுரை மாநகராட்சிக்குக் கட்டடம் எழுப்பியதைப் பயனற்றது என்று நாம் சொல்லவில்லை. அது அத்தியாவசியப் பணியாகக்கூட இருக்கலாம். ஆனால் அந்த ஐம்பத்தைந்து லட்சத்தைக் காட்டிலும் பயனுள்ள செலவு பத்து லட்சத்தில் நகர சுத்திகரிப்பாளருக்கு வீடு கட்டித் தருவது. இதையும்விடப் பயனுள்ள செலவு ஆறு லட்சத்தில் ஆயிரம் தையல் இயந்திரங்கள் வாங்கித் தையல் பயிற்சி பெற்ற ஆதரவற்ற கைம்பெண்களுக்குத் தமிழக அரசு வழங்கி விருப்பது. எளிய தொழிலாளனுக்கும் உற்பத்திக்கு உதவுவது அல்லவா?

ராஜாஜி சிந்தனை

விட்டுக் கொடுப்பதே வழி!

விலைவாசி உயர்வுக்குக் காரணமான அமைப்பு அரசாங்க அலுவலகங்களில் உள்ளது. இங்கேதான் நேர்முக மறைமுக வரிகள் உருவாகின்றன. பற்றுக்குறை பட்ஜெட்டை ஈடுகட்ட வரி விதிக்கும் உத்தரவுகள் பிறக்கின்றன. மாநில அரசுகள் முன்போலன்றி இன்று கவலைகளையெல்லாம் விட்டொழித்துவிட்டு எல்லாவற்றுக்கும் மத்திய அரசு தரும் மானியத்தை எதிர்பார்த்து நிற்கின்றன. கடைகளிலும் ஹோட்டல்களிலும் விலைகள் உயர இந்தச் சூழலே மறுக்கமுடியாத காரணம். குதர்க்கமான விவாதங்களால் பயனில்லை. தவறான கொள்கைகளை விட்டுக் கொடுப்பதே வழி. வெளித் தோற்றத்துக்குப் பார்வையாக இருக்கும் பிரும்மாண்ட அமைப்புக்கள் கண்காட்சியாகவே விளங்கும். உற்பத்திக்கு உதவும் நாணயமான சுதந்திரப் பொருளாதாரமே முன்னேற்றத்துக்கும் சுபிட்சத்துக்கும் வழி. அரசாங்கம் பின்னணிக்குப் போய் மக்களின் சக்தியை விடுவித்து முழுமையாகச் செயல்பட அனுமதிக்க வேண்டும். சகலத்திலும் அரசு தலையிட்டு இந்தச் சக்தியை அடக்கித் திக்குமுக்காடச் செய்துவிடக் கூடாது.


— சுயராஜ்யா


என்னுங்க, ராப்பகலா இப்படியே நிக்கறீங்க?
எங்கேயாவது திடும்னு தேர்தல் வந்துடுச்சின்னா......



CHAITRA BLS19 TAM Rev.

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்



உங்கள் குறைவும் என் நிறைவும்

பிரார்த்தனை செய்து, பிரயத்தனமும் செய்து நான்தான் சுத்தப்பட வேண்டும் என்பதில்லை. நம்மில் யாராவது ஒருத்தர் அப்படிப் பூரணமாகி விட்டால் போதும். இன்றைக்கோ என்றைக்கோ, எனக்கோ நம்மில் வேறு யாருக்கோ பகவத் அநுக்கிரகம் கிடைத்துத் தங்கள் ஆத்மாவைச் சரியாகச் சேர்ப்படுத்திக் கொண்டு விட்டார்களானால் அப்போது சட்டென்று நாம் இத்தனை பேருமே சரியாகி விடுவோம். லோகம் முழுக்கச் சரியாகிவிடும். அப்படிப் பூரணமாகச் சுத்தி ஆவது முடிகிற காரியமா என்று விசாரமாக இருக்கிறது. பயப்பட்டு விசாரப்பட்டுப் பயனில்லை. சரி, நாம் இப்போதுள்ள ஸ்திதியில் எது சாத்தியமாகத் தோன்றுகிறதோ, அதைச் செய்யலாமே? புத்தியினாலாவது எது நல்லது என்று ஆலோசித்து அதிலேயே ஒரு தெளிவு காண்பதற்கு இப்போதுள்ள நிலையிலும் நம்மால் முடிகிறது. இந்த நினைப்பை நீங்கள் முடிந்த மட்டும் உண்டாக்கிக் கொண்டீர்களானால் அதுவே எனக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கும்.

நடந்த மட்டும் எல்லாம் நல்லதுதான். இனி மேல் நான் என்ன செய்ய வேண்டும் ? நீங்கள் என்ன செய்ய வேண்டும் ? எனக்கு அநுஷ்டானம் பண்ணுகிற சக்தி வந்து சுத்தியாக வேண்டும் என்று நான் பகவானைக் கேட்டுக்கொள்ள வேண்டும். அது என் காரியம். அதை நான் பார்த்துக் கொள்கிறேன். பார்த்துக் கொள்கிறேனோ இல்லையோ அது நான்தான் செய்ய வேண்டியது. நீங்கள் அதில் ஒன்றும் செய்வதற்கில்லை. உங்கள் காரியம், நம்முடைய தார்மிக வழியையும் இப்போது நாம் இருக்கிற வழியையும் பற்றி அடிக்கடி ஆலோசனை செய்து பார்த்துக் கொண்டு, சாஸ்திர வழிதான் நல்லது என்ற எண்ணத்தை முடிந்தவரை ஏற்படுத்திக் கொள்வதுதான். வெறுமனே நினைத்து விட்டால் போதுமா என்று எண்ண வேண்டாம். நல்ல விஷயத்தில் நினைப்பு இருப்பதே உங்களுக்குப் பெரிய க்ஷேமம், லோகத்துக்கே க்ஷேமம்.

உங்களுக்காக நான் பிரார்த்திப்பது, எனக்காகவே நான் பிரார்த்தித்துக் கொள்வது எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். நீங்கள், நான் எல்லோரும் சேர்ந்து பிரார்த்திக்க வேண்டியது லோக க்ஷேமம்தான்.

லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து!
வையமும் துயர் தீர்கவே!

சமஸ்த லோகங்களிலும் இருக்கப்பட்ட அத்தனை பிராணிகளும் க்ஷேமமாக இருக்க வேண்டும் என்ற பிரார்த்தனை நமக்குப் பொதுவானது. 'உலகமெல்லாம் க்ஷேமமாக இருக்கட்டும்' என்று நாம் நினைப்பதும் எண்ணம்தான். எண்ணம் என்பதால் உபயோகமில்லை என்று அர்த்தமாகாது. லோக க்ஷேமத்தை நினைக்கத்தான் நம்மால் முடியும். அதற்கே ஒரு பலன் உண்டு. 'சும்மா நினைத்து விட்டால் போதாது. நானே லோக க்ஷேமத்தை உண்டாக்குவேன்' என்று கிளம்பினால் அது வெறும் புரளிதான். வீருதாப் பேச்சுத்தான். பிரார்த்தனையோடு கலந்த எண்ணம் இருந்தால் அதுவே நமக்கும் க்ஷேமம், லோகத்துக்கும் க்ஷேமம். எண்ணமும் பிரார்த்தனையும் நமக்கு இருந்துவிட்டால் அவை எத்தனைக்கெத்தனை சத்தியமாக இருக்கின்றனவோ, அத்தனைக்கத்தனை ஸ்வாமியே எந்த முறையில், யாரைக் கொண்டு லோக க்ஷேமத்தை ஏற்படுத்த முடியுமோ அப்படிச் செய்து கொள்வார். நமக்கு வேண்டியது 'லோக க்ஷேமம்' என்கிற நீங்காத நினைப்புத்தான். காரியம் செய்வதில்தான் பல தினுசான கஷ்டங்கள், இடைஞ்சல்கள். அதனால் நல்லதில் எண்ணமாவது நமக்கு இருக்க வேண்டும்.

லோகத்துக்குப் பொதுவாக இந்தப் பிரார்த்தனை. அதோடு என்னை நம்பிக்கொண்டிருக்கிற உங்களுக்காக உங்கள் பொருட்டாக எனக்கும் பிரார்த்தித்துக் கொள்கிறேன். பகவான் என்னைச் சுத்தப்படுத்தி, மற்றவர்களுக்கு அநுக்கிரகம் பண்ணும்படியான சக்தி ஏதாவது எனக்குக் கொடுத்தாரானால், உங்கள் எல்லோருக்கும் நிறைய அநுக்கிரகம் செய்கிறேன். "நீங்கள் எல்லோரும் எப்போதும் நல்ல சித்த விருத்தியோடு இருக்க வேண்டும். உத்தமமான ஸத்கதியில் சேர வேண்டும்; உங்களுக்கு ஒரு குறைவும் இருக்கப்படாது; இகலோகத்திலேயும் கூட நீங்கள் எல்லோரும் ஒரு சுதிபாதையில்லாமல் க்ஷேமமாக இருக்க வேண்டும். பிராசீனமாக நமக்கு வந்திருக்கிற தர்ம மார்க்கத்தில் உங்கள் மனசு இருக்க வேண்டும். இதேபோல் உங்களுக்கு 'நம்முடைய சந்ததிகளும் அநாதி காலமாக வந்து கொண்டிருக்கும் இந்த நல்ல வழியில் வர வேண்டும்' என்ற எண்ணம் இருக்க வேண்டும்" என்றெல்லாம் பிரார்த்தனை பண்ணுகிறேன். அநுக்கிரக சக்தி கிடைத்தால் அநுக்கிரகம் பண்ணுகிறேன்.

எத்தனையோ ஆயிரம் காலமாக நம் தேசத்தை லோகம் முழுக்கக் கொண்டாடும்படியாக வைத்திருந்த தர்ம வழியில் எண்ணம் வேண்டும்; வம்ச பரம்பரையாக நம் குழந்தைகளுக்கும் அந்த எண்ணம் இருக்கும்படி செய்ய வேண்டும்; எண்ணமாவது நம்மை விட்டுப் போகாமல் இருக்க வேண்டும் — என்கிற ஒன்றைத்தான் உங்களிடமெல்லாம் நான் சொல்ல ஆசைப்பட்டது. முடிந்த மட்டும் இந்த எண்ணத்தை வளர்த்

1959ல் சென்னை பிரவசனத்தில் அருளிய உரை.



ஸர்வமே ஆசிரமம்தான்

ஸ்ரீ ரங்கசாமி



தீபாவளிக்குக் கங்கா ஸ்நானம் விசேஷம். அருள் கங்கையான காஞ்சிப் பெரியவாளைக் கங்காதீரத்தில் காட்டுகிறது இக்கட்டுரை.

நாற்பத்தியொரு வருஷங்களுக்கு முன் பழைய பெரியவாள் காசியில் ஆறு மாதம் தங்கியிருந்தபோது கங்கைக் கரையில் நான் வசித்து வரும் கங்கா மகாலில் என் பிக்ஷா வந்தனத்தை ஏற்க வந்திருந்தார்கள். என்னிடம் கொண்ட பரம கருணையால் ஒரு நாளைக்குப் பதிலாக மூன்று நாட்கள் அங்கு தங்கினார்கள். வருணாசங்கமத்துக்கும் திரிலோசன கட்டத்துக்கும் தன்னை அழைத்துப் போகச் சொன்னார்கள். என்னிடமிருந்த ஆதி சங்கராச்சாரியாளின் பெரிய வர்ணப் படத்தைத் தரச் சொல்லி அதை யானை மேல் ஊர்வலத்துடன் விஸ்வேஸ்வரர் கோயிலில் வைக்கச் செய்தார்கள். இப்பவும் கோயில் நுழைவாயில் உட்பக்கத்தை அப்படம் அலங்கரிக்கிறது. சங்கர ஜயந்தியில் அதற்கு ஸ்ரீமடம் மூலம் பூஜை நடக்கிறது.

பெரியவாள் இங்கிருந்தபோது அவர்களிடம் பாஷ்ய பாடம் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. பெரியவாள் காசிக்கு வருமுன், பாக்ய வசத்தால் என்னுடன் சில நாட்கள் தங்கியிருந்த அநந்தராம பிரம்மச்சாரிகளைப் பற்றி விசாரித்தார்கள். முக்தி நிலை எய்திய இந்தப் பிரம்மச்சாரி சென்னை ராமகிருஷ்ண மடத்தில் பி.ஏ. வரை படித்து, பராசக்தியின் பக்தி மேலிட்டால் வைராக்யம் வரப்பெற்று, அத்யயனம் செய்து, வேதாந்தம் படித்து, சதா ஆத்ம சிந்தனையிலேயே இருந்து வந்ததால், பெரியவாள் ஆக்ஞையின்படி கும்பகோணம் ஸ்ரீமடத்திலிருந்து அவர் தாயாருக்கு உதவி வழங்கப்பட்டு வந்தது.

பெரியவாளுடன் இங்கு வந்தவர்களில் ராமன் என்ற இள வயது பிரம்மசாரி இருந்தார். ஆசிரமம் வாங்கிக் கொள்ளும் நோக்கத்துடன் இங்கேயே இருக்க அவர் விரும்பியதால் அவரைக் கவனித்துக் கொள்ளும்படி பெரியவாள் என்னை ஆக்ஞாபித்தார்கள். ராம பிரம்மசாரி அவர்கள் என் மேற்பார்வையில் என் பக்கத்தில் உள்ள போஸ்லா கட்டத்தில் மிக்க நியமத்துடன் வசித்து வந்தார். சில மாதங்களுக்குப் பிறகு அனுமான் கட்டத்தில் சுகதேவ மடத்தில் சில நாட்களிருந்து இடீரென்று காலமானார். அவருடைய சந்நியாச அவா நிறைவேறாமல் போய்விட்டாரென்று நான் பெரியவாளுக் கெழுதியபோது அவர்களின் பதில் எனக்கு மனச் சாந்தியைக் கொடுத்தது — ஆசிரமம் வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற தீவிர அவாவே ஆச்ரமம் வாங்கிக்கொள்வதற்குச் சமானம்தானென்று.

துக்கொள்ளப் பாருங்கள். ஆனால் நான் சொல்லி உங்களால் முடியவில்லை என்றால், எனக்குக் கைம்மாறு செய்யவில்லை, செய்யாதது பாபம் என்கிற எண்ணமெல்லாம் உங்களுக்கு வேண்டாம். ''பெரியவாள் சொன்னதில் கொஞ்சமாவது நாம் செய்யாதது ரொம்பக் குறையாக இருக்கிறது'' என்று இப்போது சொன்னீர்களே, அந்த வார்த்தை இனி வரக்கூடாது.

உங்களுக்காக நான் பிரார்த்திப்பது பற்றி (ராஜகோபாலாச்சாரியார்) சொன்னார். 'இல்லை; அவர் அப்படிச் சொன்னாலும் எனக்காகவே நான் பிரார்த்தித்துக் கொள்ளவேண்டும் என்றுதான் அர்த்தமாகிறது' என்று நான் சொன்னேன். பேசப் பேச, தானே விஷயங்கள் தெளிவுபடுகின்றன என்று நான் சொன்ன மாதிரி, இப்போது பார்க்கிறபோது அவர் சொன்னதும் இல்லை, நான் சொன்னதும் இல்லை என்றுதான் தெரிகிறது. 'உங்களுக்காக', 'எனக்காக' என்று பிரித்துப் பிரார்த்திக்கிறதற்கே இல்லை என்று தெரிகிறது.

எனக்காகவென்று நான் வேண்டிக்கொண்டாலும், அது உங்களுக்காக, உலகத்துக்காக, எல்லோருக்குமாகச் சேர்த்து வேண்டிக்கொள்வதுதான்.

நீங்கள் வேறே நான் வேறே இல்லை.

எல்லோரும் சேர்ந்துதான் நான்.

ஆகையினால், எனக்காகப் பிரார்த்தித்துக் கொண்டால் அது உங்களுக்காகப் பிரார்த்தித்துக்கொண்டதுதான்.

கடைசியில் எல்லாம் அத்வைதம். வேறே வேறே இல்லை. பேதமில்லை. அதே மாதிரி நான் — நீங்கள் பேதமில்லை என்று அபேத புத்தியுடன் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

நம: பார்வதீ பதயே

ஹர ஹர மஹாதேவா

குவாலியர் ரேயானின் மகத்தான 26 ஆண்டு காலப் பணி



தன்வலிமை பெறும் கனவை நனவாக்கி வரும் பணி.

ரேயான் துணிகள், ஸ்டேபிள் இழை, ரேயான்-கிரேடு பல்ப் (கூழ்), ரேயான் ஸ்டேபிள் நூலிழைத் தொழிற்சாலைகளுக்கான எந்திர சாதனங்கள் ஆகிய எல்லாவற்றையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கென குவாலியர் ரேயான் செய்துவரும் முயற்சிகள், நாடு சுதந்திரம் எய்திய நாளிலேயே தொடங்கிவிட்டன.

மூங்கில் மற்றும் இதர கெட்டி மரங்களிலிருந்து கரை திறனுள்ள ரேயான்-ரகக் கூழ் தயாரிப்பு, மற்றும் ரேயான், இவை சார்ந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான நுட்பமிகைமான எந்திர சாதனங்களின் உற்பத்தி முதலியவற்றிலே குவாலியர் ரேயான் முன்னோடியாக விளங்குவதனால், ரேயான் தொழிலிலே நம் நாடு தன்வலிமை பெற வழியமைத்துள்ளது.

இன்று, குவாலியர் ரேயானின் ஸ்டேபிள் நூலிழை உற்பத்தியளவு, 520 லட்சம் பேருக்கு ஆடை வழங்கப் போதுமானதாக உள்ளது. மரக் கூழ் உற்பத்தியோ, ஆண்டு தோறும் ஒரு லட்சம் டன்களுக்கு மேல்; இது செல்லுலோஸ் இழையளவிலே கணக்கிட்டால், 5.2 லட்சம் பருத்தி பேல்களுக்கு ஈடாகும்.

கடந்த பத்தாண்டுகளில், குவாலியர் ரேயான் நம் நாட்டின் பொக்கிஷத்திற்கு, வரிகளும் தீர்வைகளுமாக ரூ. 90 கோடி செலுத்தியுள்ளதோடு, அதே காலத்தில் ரூ. 360 கோடி அந்நிய செலாவணியை மிச்சப்படுத்தியுள்ளது; இதை நோக்கும்போது, தன்வலிமை வாய்ந்த பொருளாதார அமைப்புக்கு குவாலியர் ரேயான் செலுத்திவரும் மகத்தான பணியின் பெருமை தெளிவாக விளங்கும்.

குவாலியர் ரேயான்—
தேச முன்னேற்றமே முதன்மை எனக் கருதுவோர்.

தி குவாலியர் ரேயான் ஸில்க் மானுபாக் (வீவிங்.) கோ. லிட்., பிர்லாகிராம், நாக்தா (ம.பி.)

Sobhagya GR 74-2-Tam.



பரோடா நகர்வலம்

பரோடாவைக் கண்டுபிடித்து விட்டேன்!

''இது என்ன கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தது போல் அல்லவா சொல்கிறீர்கள்!'' என்று கேலியாகக் கேட்பது என் காதில் விழாமல் இல்லை.

அதிசயத்தைக் கேளுங்கள்!

பம்பாயிலிருந்து அஹமதாபாத் போகிற வழியில் பரோடா இருக்கிறதென்று தெரியும். ஆனால் இப்போது ரயில்வே கால அட்டவணைப் புஸ்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு பார்க்கிறேன்: பார்க்கிறேன் — கிடைக்கவில்லை. யாரையாகிலும் ''பம்பாய் அகமதாபாத் வழியில் முன்னால் பரோடா இருந்ததே இப்போது அந்தப் பரோடா எங்கே ஸார் போய்விட்டது?'' என்று கேட்கலாம் என்றால் கூச்சம் பிடுங்கித் தின்கிறது.

ரயில்வே கால அட்டவணைப் புத்தகத்தில் காணவில்லையே தவிர பரோடா குஜராத் மாநில மக்கள் அனைவர் நாவிலும் புழங்குகிறது. ஆகவே எப்படியோ விசாரித்துக் கொண்டு போய் விட்டேன்.

மறு நாள் பரோடா நகர்வலம் தொடங்குவதற்கு முன்னால் பரோடாவில் உள்ள பிரசித்தி பெற்ற எம். எஸ். சர்வகலாசாலையில் புதைபொருள் ஆராய்ச்சித் துறைத் தலைவரான டாக்டர் ஆர். என். மேத்தா அவர்களைச் சந்தித்தேன்.


அவர், ஆதிநாட்களில் நமது நகரங்கள் ஆற்றங்கரைகளிலேயே தோன்றின. அதே போல் இந்தப் பரோடாவும் விச்வாமித்ரி நதிக் கரையில் ஆலமரங்கள் சூழ்ந்த இடத்தில் தோன்றியிருக்கிறது. ஆதி நாட்களில் இதற்கு ''வடபத்ரிகா'' என்று பெயர் இருந்திருக்கிறது. பிறகு மக்கள் வழக்கில் வடோதரா என்று மருவி வந்திருக்கிறது. 'வட' என்றால் ஆலமரம். ஆலமரத்தையொட்டிய மக்கள் குடியிருப்பு என்ற பொருளில் வடோதரா நிலைத்தது. பிறகு இதுவே நாளடைவில் பரோடாவாயிற்று'' என்றார். இப்பொழுது மீண்டும் 'வடோதரா' என்ற பெயருக்குப் போகப் பார்க்கிறார்கள். அதன் விளைவுதான் ரயில்வே கால அட்டவணையில் பரோடாவுக்குப் பதில் வடோதரா தோன்றி நம்மைக் குழப்புவது.

புதைபொருள் ஆராய்ச்சியாளர்களும் சரித்திர ஆராய்ச்சியாளர்களும் பரோடாவின் வரலாறு கிறிஸ்து சகாப்தத்துக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும் என்று கூறுகிறார்கள். எனினும் இன்றைய பரோடாவை உருவாக்கியவர் ஸயாஜிராவ் மகாராஜா தான் என்று பெருமிதத்துடன் கூறுவார்கள்.


குஜராத் மாநிலத்தில் எங்கே போனாலும், ''பணம் புழங்குமிடம் ஆமதாபாத்; கலை, பண்பாடு புழங்குமிடம் பரோடா!'' என்பார்கள். அவ்வளவு கலை அழகோடுகூடிய நகரம் பரோடா! இதற்குக் காரணம் பரோடா சுதேச சமஸ்தானமாக விளங்கியது தான். அது மட்டுமல்ல. அதன் மன்னராக இருந்த ஸயாஜிராவ் III கலைப் போஷகராக, அறிவாளிகளைப் போற்றுபவராக, சிறந்த ரஸிகராக, செயல் திறனுள்ளவராக இருந்திருக்கிறார். மகான் அரவிந்தர், படிப்பை இங்கிலாந்தில் முடித்துக் கொண்டு, இந்தியாவுக்கு வந்ததும், அவர் மேதாவிலாசத்தை உணர்ந்து அவரைத் தமது கல்லூரியில் பேராசிரியராக நியமித்தார். அத்துடன்

எஸ்.வி.எஸ்.









மகாராஜா அவருடன் மிக நெருங்கிய நண்பரைப் போல் பழகி வந்திருக்கிறார்.

மகாராஜா ஸயாஜிராவ், அவர்கள் நிகழ்த்தும் பிரசங்கங்கள் யாவும், அரவிந்தர் எழுதித் தந்தவையே என்பது அந்நாட்களில் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கும் உள்ளூர்ப் பிரமுகர்களுக்கும் தெரியும்.


ஆகவே, ஒருநாள், மகாராஜா ஸயாஜிராவும், அரவிந்தரும் சேர்ந்து உலாவிக் கொண்டிருந்தபோது, மகாராஜா அரவிந்தரிடம், ''நாளை நான் நிகழ்த்த வேண்டிய பிரசங்கத்தைப் படித்துப் பார்த்தேன். பிரிட்டிஷாரை ரொம்பவும் கடுமையாகத் தாக்கி யிருக்கிறாற் போல் தொனிக்கிறது. கொஞ்சம் அதன் கடுமையைக் குறைத்துக் கொடுங்கள்!'' என்றாராம்.

அதற்கு அரவிந்தர், ''நான் எப்படிஎழுதிக்கொடுத்தாலும் மகாராஜாதாமே சுயமாக எழுதியதாக யாரும் சொல்லப் போவதில்லை. ஆக, அப்படியேதான் இருந்துவிட்டுப் போகட்டுமே!'' என்றாராம்.

பரோடாவில் நம்மைக் கவருவது அதன் விசாலமான அழகிய சாலைகள். அப்பெரும் சாலைகளின் இருபுறமும் உள்ள கண்ணைக் கவரும் அழகுமிக்க கட்டடங்கள்.

பாரத நாட்டின் அற்புத சிற்பங்கள், சித்திரங்கள், நாணயங்கள் மட்டுமின்றி உலகம் எங்கிலுமிருந்து அற்புத வண்ண ஓவியங்களை அரும் பாடு பட்டு நமது மியூஸியத்தில் ஸயாஜிராவ் சேர்த்திருக்கிறார்.

ஸயாஜிராவ் பாரதப் பண்பாட்டில் ஊறிய வராயினும் ஐரோப்பியக் கலைகளின் உயர்வையும் நன்கு உணர்ந்திருந்தார். ஆகவே, இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின், பிரிட்டன் முதலிய பல நாடுகளில் கிடைக்கும் சிறந்த ஓவியங்களை ஏராளமான பொருள் கொடுத்து வாங்கிச் சேகரித்தார். அவற்றை இந்தியாவுக்குக் கொண்டு வரும் வேளையில் முதல் மகாயுத்தம் மூண்டுவிட்டது. எனவே, அந்த நான்கு ஆண்டுகளும் (1914–1918) இங்கிலாந்திலே அவற்றைப் பத்திரமாகப் பாதுகாக்க ஏற்பாடு செய்து 1919ல் இந்தியாவுக்குத் தருவித்தார்.



- நவீன பரோடாவை உருவாக்கிய ஸயாஜிராவ்
- ஞான தட்சிணா மூர்த்தி
- பூவிட் மந்திர்
- சூர்சாகர் கரையில் நியாய மந்திர் (நீதி மன்றம்)
- ஸயாஜி பூங்காவில் சிறுத்தை
- ஜுபிலி பூங்காவில் புத்தர்



இதைத் தவிர அரச குடும்பத்தினர் வசிக்கும் லட்சுமி விலாஸ் அரண்மனையில் மகாராஜா பதேசிங் மியூஸியம் இருக்கிறது. இங்கு பலப் பல வண்ண ஓவியங்கள், பழங்காலப் பொருட்கள் இருக்கின்றன எனினும் நம் உள்ளத்தைப் பெரிதும் கொள்ளை கொள்வது, ரவிவர்மாவின் அற்புத ஓவியங்கள்.

ரவிவர்மா மேற்கத்திய பாணியை மேற்கொண்டார் என்றும், ரவிவர்மாவின் லட்சுமியும் தமயந்தியும் இந்தியப் புடவைகளைக் கட்டிக்கொண்ட மேற்கத்திய பெண்டிரே தவிர அவற்றில் கலை அம்சம் ஒன்றும் கிடையாது என்றும் அபாண்டமான ஒரு விமரிசனம் அவரைப் பற்றிச் சிலர் செய்வதுண்டு. இப்படிப்பட்ட அபிப்பிராயம் கொண்டவர்கள் ஒரு முறை பரோடாவுக்கு விஜயம் செய்து, ரவிவர்மாவின் மூலப் படங்களைப் பார்க்குமாறு வேண்டிக் கொள்ளத் தோன்றுகிறது. ஒரிஜினல் படத்தில் கொப்பளிக்கும் பாவத்தில் நூற்றில் பத்துசத விகிதம்கூட ரவிவர்மா படங்களைப் போட்டோ எடுப்பதில் வருவதில்லை. ஒவ்வொரு படமும் பதினைந்தடி உயரத்துக்கும், எட்டு அடி அகலத்துக்கும் தயாரிக்கப்பட்ட பிரும்மாண்டமான ஓவியங்கள். கங்கையும் சந்தனுவும், ராதையும் கண்ணனும், நளனும் தமயந்தியும், அர்ஜுனனும் சுபத்ராவும், சந்தனுவும் மத்ஸ்யகந்தாவும், விச்வாமித்திரரும் மேனகாவும் — இப்படிப் பல தலைப்புக்களில் ஓவியங்கள் வரைந்திருக்கிறார். ஒவ்வொரு கோணத்திலிருந்து பார்க்கையில் அவை வெளிப்படுத்தும் பாவங்கள், பிரமிக்க வைக்கின்றன.

ஸாயாஜி ராவின் முன்னோர்கள் பத்துப் பன்னிரண்டு பேர். அவர்கள் ஓவியங்களையெல்லாம் வரையச் செய்து, ஒவ்வொருவருக்கும் ஒரு சிறு அறை அமைத்து மத்தியில் ஒரு பெரிய சலவைக் கல் அமைந்த ஒரு கட்டடம் உள்ளது. இதற்குக் கீர்த்தி மந்திர் என்று பெயர். அரச குடும்பத்தினர் பஜனை செய்யவும் பிரார்த்தனை செய்யவும் அமைந்த இடம் போலும். அந்தக் கீர்த்தி மந்திரத்தில் நடுக் கூடத்தைச் சுற்றி நான்கு சுவர்களிலும் பத்தடி உயரத்துக்கு பகவத்கீதை — மகா பாரதக் காட்சிகளை வங்க நாட்டுப் பிரசித்தி பெற்ற ஓவியர் நந்தலால் போஸ் சுவர்ச்சித்திரமாக-ஃப்ரெஸ்கோ (Fresco)வாக அமைத்திருக்கிறார். ஓவியர் நந்தலால் போஸ் சித்திரக் கலையில் புது வழியைக் கண்டவர். அப்பாணியைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் சிலர் "இவையென்ன கேலிச் சித்திரங்கள் (கார்ட்டூன்) போல் இருக்கின்றனவே!" என்று எண்ணுவர். ஆனால் இங்கு நந்தலால் போஸின் ஒரிஜினல் சித்திரங்களைப் பார்க்கும்போது அவர் பாணி, சொல்ல வரும் கருத்துக்கும் பாவத்துக்கும் எவ்வளவு உதவுபடியாக விளங்குகிறது என்பது புரிகிறது. நந்தலால் போஸ் இப்படி ஒரு வேலை செய்து முடிக்க எத்தனை ஆண்டுகள் மன்னரின் பராமரிப்பில் இருந்திருக்க வேண்டும் என்று எண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை.

நிக்கோலஸ் ரொய்ரிச் — என்பவர் ருஷ்யர். இந்தியாவைத் தாயகமாக ஏற்றுக் கொண்டவர். இயற்கை வனப்புக்களைத் தமது தூரிகையின் மூலம் திரையில் அப்படியே தத்ரூபமாகக் கொண்டு வரும் அரிய ஆற்றல் பெற்றவர். பாரத நாட்டு இமயமலைச் சாரல் அளித்த அழகழகான இயற்கைக் காட்சிகளில் ஈடுபாடு கொண்டவர். அவர் வரைந்த பல அரிய ஓவியங்களையும் மியூஸியத்தில் காணலாம்.

இப்பரந்த மனப்பான்மை ஓவியக் கலையுடன் மட்டும் நின்று விடவில்லை. சங்கீதக் கலைக்கும் படர்ந்தது. 1912ம் ஆண்டு ஸயாஜி ராவ், உஸ்தாத் பயஸ்கானை, ஆக்ராவிலிருந்து வரவழைத்துத் தமது ஆஸ்தான வித்வானாக நியமித்தார். உஸ்தாத் பயஸ்கான் பரோடா வந்த பிறகு அவர் புகழ் மேலும் பரவிப் படர்ந்தது!


பரோடா மற்றொரு விஷயத்துக்கும் புகழ் பெற்றது. சம்ஸ்கிருத ஆராய்ச்சிகள் புரிந்து அரிய நூல்களை வெளியிடும் ஓரியண்டல் இன்ஸ்டிட்யூட் 1893ம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகம் கிடைத்தற்கரிய பல வடமொழி நூல்களை வெளியிட்டிருக்கிறது. மிக முக்கியமான பணி வால்மீகி ராமாயணத்தின் சுத்தமான — திருத்தப் பதிப்பு வெளியிட்டது தான். அதேபோல் இப்பொழுது விஷ்ணு புராணம் வெளியிட இருக்கிறார்கள்.

"பரோடா நகர்வலம் என்று ஆரம்பித்து அங்குள்ள மியூஸியங்களைப் பற்றியும், கலை, கல்வியைப் பற்றியும்தானே சொல்கிறீர்கள். மக்களைப் பற்றி ஒன்றையும் காணோமே!" என்று குறைப்படுவது தெரிகிறது.

இந்தக் கலைச் செல்வங்களின் மத்தியில் வாழும் மக்கள் எப்படி இருப்பார்கள் என்று ஊகிப்பதில் சிரமமில்லை அல்லவா?

ராணுவப் பள்ளிக்கூடம் ஒன்று பரோடாவிலிருக்கிறது. யுத்தப் பயிற்சி அளிக்க ஏற்பட்டது அல்ல. யுத்தம் புரிவது தவிர ராணுவத்தினர் மேற்கொள்ள வேண்டிய எத்தனையோ பல பணிகள் உண்டல்லவா? அவற்றில் பயிற்சி அளிக்கும் பள்ளி இது. இதற்கு "ஈ. எம். ஈ. ஸ்கூல்" என்று பெயர். இப்பள்ளிக்கு முதல் தலைவராக 1963ம் ஆண்டு பிரிகேடியர் ஏ. எப். யூஜின் என்பவர் நியமிக்கப்பட்டார். இவர் தமிழ் நாட்டுக்காரர் என்றும் சிலர் சொல்லுகிறார்கள். இவரை எப்படியோ மேலே குறிப்பிட்ட பரோடாவின் சூழல் பற்றிக் கொண்டது. விளைவு என்ன என்கிறீர்களா? பழைய ஞான தட்சிணாமூர்த்தி போன்ற சிலை மாதிரி செய்து, எல்லாச் சமயத்தாரும் வணங்கும் கோயில் அமைத்து விட்டார். கோயிலின் புறத் தோற்றம் நவீன என்ஜினீரிங் சாமர்த்தியத்தைப் புலப்படுத்தும் "டோம்" அமைப்பில் இருக்கிறது. இதற்கு "யூனிட் மந்திர்" என்று பெயர். இந்தக் கோயிலைச் சுற்றித் தோட்டத்தில் அழகழகான புராதனச் சிற்பங்கள் சுமார் எண்பது இருக்கின்றன. இதுவே ஒரு கலைக் கண்காட்சியாக இருக்கிறது. இந்த யூனிட் மந்திர், பரோடா நகரின் பிரதான பகுதியிலிருந்து நான்கு மைல் தள்ளியிருந்தாலும் நாள்தோறும் நானூறு பேருக்கு மேல் தரிசிக்க வருகிறார்கள். பரோடாவாசிகள், அயலூர்க்காரரை முதலில் கேட்பது, "யூனிட் மந்திரைப் பார்த்தீர்களா?" என்ற கேள்வி வைத்தான்.

இப்படிப் பரோடா நம்மைக் கலைப் பைத்தியங்களாக்கும் அம்சங்களையும் சூழ்நிலை



"கத்தை கத்தையா சலவை ரூபாய் நோட்டுகளாக அடுக்கி வைச்சிருக்கீங்களே! உங்களுக்கு என்ன சார் தொழில்?"
"டிரை கிளீனிங் பிஸினெஸ் சார்!"
— தாஜு



கோல மயில் அழகிற்கு
"ஸ்பாஷினா"
கொஞ்சும் கிளி அழகிற்கு
"நிரஞ்ஜனி"
குதூகலமான தோற்றத்திற்கு
"ஸஜ்னி"
10%
தீபாவளி விசேஷ தள்ளுபடி பட்டுப் புடவைகளுக்கும் மற்ற எல்லா ரகங்களுக்கும் உண்டு.
சாரதா’ஸ்
(பட்டுப்புடவைகளில் புதிய டிசைன்களுக்கு முன்னோடிகள்)
தன் பில்டிங், மவுண்ட்ரோடு சென்னை-2 போன் : 87177
N.S.B. ரோடு, திருச்சி-2 போன் : 7077
தீபாவளி முடிய ஞாயிற்றுக்கிழமை விற்பனை உண்டு

தாய்மார்களே!
டாக்டர்கள் குழந்தை உணவில் எதை எதிர்பார்க்கிறார்களோ, அது அமுல்ஸ்ப்ரேயில் உள்ளது.

அமுல்ஸ்ப்ரேயில் உங்கள் குழந்தை ஆரோக்கியமாகவும், வலுவுடனும் வளருவதற்குத் தேவையான வைட்டமின்கள், கனிஜப் பொருட்கள் மற்றும் புரதங்கள் அடங்கியுள்ளன.

வைட்டமின்கள்—நோய்த்தொற்றை எதிர்க்க, நன்றாக பசி எடுக்க, ஆரோக்கியமான நரம்புகள், ஈறுகள், கண்கள் மற்றும் பற்களுக்கு.

நியாஸின்—சீரண சக்தியை வளர்க்க, உடல் உறிஞ்சிக் கொள்ள, ஆரோக்கியமான சருமத்துக்கு. கால்ஷியம், பாஸ்பரஸ் போன்ற கனிஜங்கள் எலும்புகள் சீராக அமைய. இரும்புச் சத்து, ரத்த அமைப்புக்கு.
புரதம், செல் அமைப்புக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையானது. அமுல்ஸ்ப்ரேயில் தரமுயர்ந்த புரதங்கள் அடங்கியுள்ளன.

அமுல்ஸ்ப்ரேயை, பிறந்து சில நாட்களான குழந்தைகள் கூட சீரணிக்க முடியும்.
ஒவ்வொரு சொட்டுப் பாலும் மிக நுண்ணிய பவுடராக மாற்றப்படுகிறது. கொழுப்பும் அவ்வாறே மாற்றப்படுகிறது. இதனால் குழந்தை இதை எளிதில் சீரணிக்க முடிகிறது.

அமுல்ஸ்ப்ரே விரைவில் எளிதாகத் தயாரிக்கவல்லது.
ஸ்ப்ரே-ட்ரை முறையில் தயாரிக்கப்படும் நுண்ணிய பவுடரான அமுல்ஸ்ப்ரே எளிதில் விரைவில் கரைகிறது. ஆகையால் அது பாட்டிலின் நிப்பிள் துவாரத்தில் அடைத்துக் கொள்வதில்லை. எனவே, குழந்தை அதிக காற்றை விழுங்குவதில்லை.

பாலஅமுல் மற்றும் வளரும் குழந்தை
3-வது மாதத்தில் உங்கள் குழந்தைக்கு, அமுல்ஸ்ப்ரேயைத் தவிர, பாலஅமுல் தானிய உணவு தரத் தொடங்குங்கள்.

அதிக விவரங்கட்கு இலவசமாக அமுல் குழந்தைப் புத்தகம்.
அமுல் குழந்தைப் புத்தகத்தை இலவசமாகப் பெற த.பெ. 10124, பம்பாய் 400 001 என்னும் முகவரிக்கு எழுதுக. 50 பைசா தபால் தலையுடன் உங்கள் முழு முகவரியையும் அனுப்புக.



அமுல்ஸ்ப்ரே
தாய்ப்பாலுக்குப் பதிலாகப் புகட்டச் சிறந்தது.

Indian Standards Institution

விற்பனைக்கு விடுப்போர்: குஜராத் கோ-ஆப்பரேட்டிவ் மில்க் மார்க்கெட்டிங் பெடரேஷன் லிமிடெட், ஆனந்த்.

ASP-AS-26

யையும் பெற்றிருக்கிறது என்றாலும் நகரம் போகிற போக்கைப் பார்த்தால், தனது இந்தப் புகழைச் சீக்கிரமே இழந்து தொழில் நகரமாகிவிடும் போல் இருக்கிறது. எங்கே பார்த்தாலும் பெரிய பெரிய தொழிற் சாலைகள் — பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் ஏற்பட்டுள்ளன.

குஜராத்தில் எண்ணெய் கிடைக்கத் தொடங்கியதிலிருந்து பரோடாவில் சுத்தி கரிப்பு ஆலையும், ரஸாயன எரு உற்பத்திச் சாலையும் ஏற்படலாயின.

பரோடா மருந்து உற்பத்தியில் முன்னணி யில் இருப்பது. ஸாராபாய், அலெம்பிக் ஆகிய இரண்டு பெரிய நிறுவனத்தார் பல வகையான மருந்துகளைச் செய்கிறார்கள்..... மருந்து தயாரிப்பதுடன் ஸாராபாய் ஆராய்ச்சிக் கேந்திரமும் உருவாக்கியுள்ளது சிறப்பு.

பரோடாவில் மற்றொரு முக்கிய விஷயம்— எம். எஸ். சர்வகலாசாலை. பல்கலைக் கழகமாக விளங்கும் இந்தக் கல்லூரியில் பரத நாட்டியம், கதக், வட இந்திய சங்கீதம், ஓவியம் வரைதல் ஆகியவற்றிலும் பயிற்சி அளிக்கிறார்கள். பரதநாட்டியத்தைக் குஜராத்திப் பெண்கள் எப்படிப் பயில்கிறார்கள் என்பதை அறியும் ஆவலுடன் சென்றேன்.

''இவர்தான் பரதநாட்டிய புரொபசர்— டான்ஜுனர்கர்!'' என்றார், என்னை உடன் அழைத்துச் சென்ற நண்பர்.

''வடக்கத்திக்காரரோ!'' என்று வினவினேன்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. இவர் அசல் தஞ்சாவூர்க்காரர். பரதநாட்டியத்தைக் குலத் தொழிலாகப் பெற்ற பெரிய ஆசிரியர் பரம்பரையைச் சேர்ந்தவர். பரோடாவில் உள்ள தமிழ், ஆந்திர, கன்னடப் பெண்களும் குஜராத்திப் பெண்களும் இவரிடம் பரதநாட்டியம் பயில்கின்றனர். டான்ஜுனர்கரின் அசல் பெயர் தஞ்சாவூர் குபேரப் பிள்ளை என்பது!

''என் வகுப்பில்லை ஆயினும் கதக் வகுப்பைப் பாருங்கள்'' என்று அழைத்துச் சென்றார் டான்ஜுனர்கர். கதக் ஆசிரியர், ஜெயப்பூரைச் சேர்ந்த பிரபல நடன விற்பன்னர். அவர், ''கதக் நடனமாடுபவர், ஒவ்வொரு காலிலும் நூற்றுக் கணக்கில் சதங்கை கட்டிக் கொண்டிருப்பார். தாளத்துக்கேற்பவும் பாவத்துக்கு ஏற்பவும் சதங்கை ஒலிகளை எழுப்ப வேண்டும். ஒரே ஒரு மணி தனித்து ஆடும்படிக்கூடச் செய்யவேண்டும். இதற்கெல்லாம் கால் நரம்புகள் அந்த அளவுக்கு நடனமாடுபவரிடம் வசப்பட்டிருக்க வேண்டும்'' என்றார்.

பரோடா ஆறு லட்சம் மக்கள் வாழும் நகரம். அதன் நிர்வாகத்திலும், பெரிய பெரிய தொழிற்சாலைகளின் நிர்வாகத்திலும் பல தமிழர்கள் நல்ல பணியாற்றி வருகிறார்கள். மிகவும் சந்தோஷமாகக் குஜராத்தி மக்களோடு ஒன்றிப் பிணைந்து, அவர்களின் பெரு மதிப்பையும் பாராட்டுதல்களையும் பெற்றிருப்பதைக் காண மனத்துக்கு மகிழ்ச்சியாக இருந்தது!



''இந்த வருடம் இரண்டே இரண்டு தீபாவளி மலர்தான் படித்தேன்.''

''ஏன், நேரமில்லாததாலா?''

''இல்லே, அவ்வளவுதான் பக்கத்து வீட்டில் வாங்கிறாங்கள்!''

★

தலை தீபாவளிக்காக வந்து ஒரு வருடம் தள்ளிவிட்ட மாப்பிள்ளையிடம் மாமனார் சாமர்த்தியமாகச் சொன்னார்:, ''மாப்பிள்ளே, நீங்கள் வந்து நூறு நாள் ஓடிவிட்டது பார்த்தீர்களா?''

''அதெதற்கென்ன இப்போது? சாக்லெட் வேண்டுமா?'' என்று கேட்டார் மாப்பிள்ளை.




''என்னடா இது இத்தனை பெரிய சத்தம்? என்ன வெடி அது, சமையலறையில் போய் வெடிக்கிறீர்கள்?''

''வெடி ஒன்றுமில்லே. அம்மா செய்த மைசூர்ப் பாக்கில் ஒன்று கீழே விழுந்து உடைந்திருக்கிறது. அவ்வளவுதான்!''


கூண்டில் நின்றிருந்த குற்றவாளியை நீதிபதி கேட்டார்: ''தீபாவளி சமயத்தில் ஒரே கடையில் நீ இரண்டு தரம் அடுத்தடுத்த நாளில் திருடியிருக்கிறாயே ஏன்?''

குற்றவாளி சொன்னான்: ''முதலில் நான் எடுத்து வந்த புடவை என் மனைவிக்குப் பிடிக்கவில்லை!''




தமாஷ் வெடிகள்!

'கேஷியம்'



மனித குலத்தை மிகப் பரவலாகப் பாதிக்கும் நோயால் பீடிக்கப்பட்டுள்ளவர்களில் நீங்களும் ஒருவராக இருக்கலாம்...




உங்களுக்கே தெரியாத நிலையில்!

நூற்றுக்கு 95 பேர்கள் பற்சிதைவால் பாதிக்கப்படுகிறார்கள். எனினும் அதிக அக்கறை காட்டாத இந் நோய், காலப் போக்கில் வலிதரும் சொத்தையாக மாறி உங்களைப் பெரும் அவதிக்கு உள்ளாக்கி விடும். எனவேதான் உங்கள் பற்களுக்கு இடைவிடாத பாதுகாப்பு தேவைப்படுகிறது.

பினாகா ஃப்ளோரைட் பற்சிதைவுக்கு எதிராக நீடித்த பாதுகாப்பளிக்கிறது

பற்சிதைவை 50 சதவிகிதம் வரை ஃப்ளோரைட் குறைக்கிறது என விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஆகவே தவறாமல் பினாகா ஃப்ளோரைடினால், நாள்தோறும் காலையிலும், படுக்கை வேளையிலும் பல் துலக்குங்கள். இதன் தனிப்பட்ட, நீடித்து நிற்கும் ஆற்றல் பல் எனாமலைப் பலப்படுத்துகிறது. பற்களைச் சிதைக்கும் கிருமிகளின் வளர்ச்சியையும் வலிதரும் சொத்தையையும் தடுக்கிறது.



U-BF/115 TAM

பல்லுக்கு உறுதி, பற்சிதைவுக்கு எதிரி—

பினாகா ஃப்ளோரைட்

தானத்திலே சிறந்த தானம்

பாரதீய வித்யாபவன் அக்டோபர் முதல் நாளன்று ஒரே கலகலப்பாக இருந்தது. 'அப்படி என்ன விசேஷம் ?' என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைகையில் ஒரு குரல் மருத்துவத்தில் உள்ள 'பாயிண்டுகளை' அடுக்கிக் கொண்டிருந்தது.



''ரத்தத்தில் ஹீமோகுளோபின் என்னும் உயிர்ச் சத்து இருக்கிறது. இந்தச்சத்துதான் ஆக்ஸிஜனைப் பயன்படுத்த உதவுகிறது.. நம்மில் எல்லோருக்கும் ஒரே மாதிரி ரத்தம் கிடையாது.... ரத்தத்தை ஏ. பி, ஏபி, ஓ என்று வகைப்படுத்துகிறார்கள்..''

''நம் உடலிலுள்ள ரத்தத்தில் பத்தில் ஒரு பங்கை நாம் தானம் செய்யலாம். அவ்வாறு செய்வதால் எந்தக் கெடுதலும் இல்லை........''

— குரலுக்குரியவர் தமிழக ஆளுநர் திரு கே. கே. ஷா. அவர்கள்.

'மெட்ராஸ் வாலண்டரி பிளட் பேங்க்' என்னும் சமூக சேவையைத் தொடங்கி வைத்துப்பேசிக்கொண்டிருந்த கவர்னர் 'பழையஜோக்' ஒன்று சொல்லி நகைத்தார்: ''எமன், டாக்டர், இருவரில் யார் நல்லவர்? எமன்தான்! ஏன்? எமன் உயிரைமட்டும்தான் எடுத்துக் கொள்கிறான். ஆனால்.... டாக்டரோ, உயிரோடு பணத்தையும் அல்லவா எடுத்துக் கொள்கிறார்!'' வாலண்டரி பிளட் பேங்கினுடைய முக்கியத்துவத்தை அதன்செயலாளர் ஸ்ரீமதி சாந்தி ரங்கநாதனும், ஸ்ரீமதி பிரபா ராமகிருஷ்ணனும் நிருபர்களிடம் விளக்கினார்கள்: ''இப்போது அரசினர் ஆஸ்பத்திரிகளில் ரத்த தானம் செய்பவர்கள் பெரும்பாலும் ஏழைகள்தான். பணம் கிடைப்பதால்தான் அவர்களும் ரத்தம் கொடுக்கிறார்கள். சராசரி உணவு கூடச் சாப்பிடாத அவர்களுடைய ரத்தம் அப்படிக் கிடைத்தாலும் ஆரோக்கியமானது என்று சொல்ல முடியாது.... நடுத்தர உயர்வகுப்பு மக்களும் தாங்களாகவே விரும்பி ரத்ததானம் செய்ய வேண்டும். நாங்கள் பெரிய தொழிற்சாலைகள், ஆபீஸ்களுக்குச் சென்று அங்கே ரத்ததானம் செய்ய விரும்புகிறவர்கள் பெயர்களைக் குறித்து வருகிறோம்.. குறிப்பிட்ட நாளில் அவர்களுடைய அலுவலகங்களுக்குச் சென்று, ரத்தத்தைக் 'குரூப்' செய்த பிறகு, டாக்டர்கள் ரத்த தானம் பெற்றுக் கொள்கிறார்கள்.''



சென்ற ஆண்டு ரத்ததானம் செய்தவர்களில் அதிகமாக ரத்த தானம் செய்திருந்தவர்கள் 'ஹிந்து' பத்திரிகை அலுவலகத்தினர்தான். அதற்காகச் சுழற்கேடயம் ஒன்றை 'ஹிந்து' பத்திரிகை மானேஜர் மாதவனிடம் வழங்கிய டாக்டர் விசாலாட்சி நெடுஞ்செழியன், ''இத்தகைய சேவை கிராமப்புற மக்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

மறு நாள்...... ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் பல்வேறு தரப்பினரும் பேசினார்கள்.

''தஞ்சாவூரில் உள்ள எல்லாக் கல்லூரி மாணவர்களுடைய ரத்தத்தையும் 'குரூப்' செய்து டாக்டர்கள் பட்டியல் தயாரிக்கிறார்கள். ஆஸ்பத்திரிக்கு ஆபத்தான நிலையில் கொண்டு வரப்பட்ட நோயாளி யாருக்காவது அவசரமாக ரத்தம் தேவைப்பட்டால், அந்த நோயாளியினுடைய குரூப் ரத்தத்தைக் கொண்ட மாணவர்களை உடனடியாக அழைப்பார்கள்....... மாணவர்களும் விரும்பி ரத்தத்தைத் தருவார்கள்...தாராள சிந்தையும், சிந்தித்துப் பார்க்கக் கூடிய திறனும் உள்ள மாணவர்கள் இம்மாதிரி சேவைகளுக்கு எப்போதும் உதவுவார்கள். அதோடு, அவர்களைக் கண்டுபிடித்து உதவி கேட்பதும் வெகு சுலபம்..... ஆகவே, சென்னையிலுள்ள கல்லூரி மாணவர்களை 'வாலண்டரி பிளட்பேங்க்' இவ்வழியில் உதவச் செய்ய வேண்டும்.......'' என்று தஞ்சாவூரில் படித்த இளம் டாக்டர் ஒருவர் அருமையான யோசனையைக் கருத்தரங்கில் வெளியிட்டார்.

இனிமேல், 'தானத்திலே சிறந்த தானம் என்ன ?' என்று கேட்டால், 'ரத்த தானம்' என்றுதான் சொல்ல வேண்டும்.

— இ. எஸ். எஸ். இராமன்

படங்கள் : மேலே : செயலாளர்கள். கீழே : 'ஹிந்து'வுக்குக் கேடயம்.

சிவகாமியின் சபதம்

நாற்பதாம் அத்தியாயம்

கொந்தளிப்பு

பல்லவ சேனா வீரர்கள் வாதாபிக் கோட்டையைச் சூழ்ந்து கொண்ட நாளிலிருந்து சிவகாமியின் உள்ளம் எரிமலையின் கர்ப்பப் பிரதேசத்தைப் போல் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருந்தது.


கோட்டைச் சுவருக்கு அப்பால் வெகு சமீபத்தில் மாமல்லரும் ஆயனரும் இருந்தபோதிலும் அவர்களைத் தான் பார்க்க முடியவில்லையே என்ற ஆத்திரமும், யுத்தத்தின் விளைவாக என்ன ஏற்படுமோ என்ற கவலையும், எல்லாம் நன்றாக முடிந்து மாமல்லரைத் தான் சந்திக்கும் போது அவரிடம் என்ன பேசுவது, எப்படி நடந்து கொள்வது என்ற சிந்தனையும் அவளை வாட்டிக் கொண்டிருந்தன.

வாதாபிக்கு வட திசையில் நடந்த பெரும் போரில் பல்லவ சைனியம் வெற்றியடைந்து புலிகேசி மாண்ட செய்தி சிவகாமியின் காதுக்கு எட்டிய போது, அவளுடைய இருதயம் பெருமையினால் வெடித்துப் போய் விடும் போலிருந்தது. அதோடு அந்த வெற்றியின் காரணமாகத் தன்னுடைய நிலைமையில் என்ன மாறுதல் ஏற்படுமோ என்ற கவலையும் உண்டாயிற்று.

கோட்டைத் தளபதி பீமசேனன் அவளிடம் வந்து மாமல்லருக்கு ஓலை எழுதித் தரும்படி கேட்ட போது சிவகாமி தன்னுடைய வாழ்க்கையில் என்றும் அடையாத பெருமிதத்தை அடைந்தாள். அவ்விதமே சேனாபதிக்கு ஓலையும் எழுதித் தந்தாள். அதிலே தன்னுடைய அறிவினால் சிந்தித்து என்ன முடிவுகளுக்கு வந்திருந்தாளோ அந்த முடிவுகளையெல்லாம் எழுதியிருந்தாள். அவற்றையொட்டி வேண்டுகோளும் செய்திருந்தாள்.

ஆனால், அவளுடைய இதய அந்தரங்கத்தில் குடிகொண்டிருந்த உணர்ச்சியை அந்த ஓலை பிரதிபலித்ததாகச் சொல்ல முடியாது. தன்னையும் தன் கலையையும் அவமதித்து அவமானப்





அமரர் கல்கி

படுத்திய அந்த நகரத்து மக்கள் மீது பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்னும் ஆசை அவளுடைய உள்ளத்தின் அடிவாரத்தில் இன்னும் இருக்கத்தான் செய்தது. எனவே, ஓலை எழுதி அனுப்பிய பிறகு சிவகாமி ஒவ்வொரு சமயம், 'ஏன் அந்த ஓலையை எழுதி அனுப்பினோம்? அவ்வாறு எழுதி அனுப்ப நமக்கு என்ன உரிமை? இவ்வளவு பெரும் பிரயத்தனங்களுடனே படையெடுத்து வந்திருக்கும் மாமல்லரும் சேனாபதியும் அதைக் குறித்து என்ன எண்ணுவார்களோ? பெண் புத்தியின் பேதைமையைக் குறித்துப் பரிகசித்து இகழ்வார்களோ? ஒருவேளை அதை ஒப்புக் கொண்டு காரியம் நடத்திய பிறகு என்னை ஏசிக் காட்டுவார்களோ?' என்றெல்லாம் எண்ணமிட்டாள்.

அவ்விதம் தான் ஓலை எழுதி அனுப்பியது குறித்து அவளைப் பச்சாத்தாபம் கொள்ளச் செய்த சம்பவங்கள் சிலவும் பிற்பாடு ஏற்பட்டன. கோட்டைத் தளபதி சிவகாமியின் மாளிகைக்கு வந்துவிட்டுப் போனதிலிருந்து அவளுடைய மாளிகை வாசலில் அடிக்கடி கூட்டம் சேர ஆரம்பித்தது. அநேகமாகச் சிவகாமியை மறந்துவிட்டிருந்த வாதாபி மக்கள் அப்போது தங்களுக்கு நேர்ந்திருக்கும் பெரும் விபத்துக்குக் காரணம் சிவகாமிதான் என்பதை நினைவு கூர்ந்து அவள் வசித்த வீதியில் கூட்டம் போடவும், அவளைப் பற்றி இகழ்ந்துபேசவும் ஏசவும் ஆரம்பித்தார்கள். கூட்டத்தின் இரைச்சலைக் கேட்டுச் சிவகாமி அதன் காரணத்தை அறிந்து கொள்ளுவதற்காகப் பலகணியின் வழியாக எட்டிப் பார்த்தபோது அந்த ஜனங்கள், 'ஓஹோ' என்று சத்தமிட்டும் சிரித்தும் கோரணி காட்டியும் ஏளனம் செய்தார்கள்.

விஷயம் இன்னதென்பதை ஏற்கனவேயே அறிந்திருந்த சிவகாமியின் தோழிப் பெண் அவளைப் பலகணியின் பக்கத்திலிருந்து பலாத்காரமாக இழுத்துச் சென்றாள். அப்போது மறுபடியும் அந்த ஜனக் கூட்டம் விகாரமாகக் கூச்சவிட்டுக் கேலிச் சிரிப்பு சிரித்த சத்தம் சிவகாமியின் காதில் விழுந்தது. அவளுடைய இருதயத்தில் வெகுகாலத்துக்கு முன்பு எரிந்து அடங்கி மேலே சாம்பல் பூத்துக் கிடந்த குரோதத் தீயானது அந்த நிமிஷத்தில் மறுபடியும் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. 'மாமல்லர் மட்டும் உண்மையான வீரமுள்ள ஆண் மகனாயிருந்தால் நான் பேதைமையினால் எழுதிய ஓலையைக் கிழித்து எறிந்துவிட்டு இந்த நகரத்துக்குள்ளே படையுடன் பிரவேசிப்பார். என்னுடைய பழைய சபதத்தை நிறைவேற்றுவார். இந்த நகரத்தை நரகமாக்கி நாகரிகம் சிறிதுமற்ற மிருகப்



பிராயமான இந்த மக்கள் ஓலமிட்டு அலறி ஓடும்படி செய்வார். அந்தக் காட்சியைப் பார்த்தால்தான் என் உள்ளம் குளிரும்!' என்று எண்ணிக் கொண்டாள். அந்தக் காட்சியைத் தன் மானசிக திருஷ்டியில் பார்த்து மகிழவும் தொடங்கினாள்.

நேரமாக ஆகத் தெருவில் கூட்டமும் கூச்சலும் அதிகமாகிக் கொண்டு வந்தன. கூட்டத்திலே இருந்த சில உற்சாக புருஷர்கள் வீட்டின் கூரை மீதும் வாசற் கதவின் மீதும் கல்லை விட்டு எறிந்தார்கள். கல், கதவின் மேல் விழுந்து படார் என்று சத்தம் உண்டாகிய போது, கூட்டத்தில் கேலிச் சிரிப்பு பீறிட்டு எழுந்தது.


அன்று மாலை திடீரென்று அப்பெருங் கூட்டத்தில் ஒரு கணம் நிச்சப்தம் ஏற்பட்டது. அந்த நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு பறை கொட்டும் சத்தம் கேட்டது. பறைச் சத்தம் நின்றதும் இடி முழக்கம் போன்ற ஒரு குரல், "சக்கரவர்த்தி கோட்டைக்குள் வந்து விட்டார்! பல்லவர் படையைத் துவம்ஸம் செய்து வெற்றிக்கொடி நாட்டப் போகிறார். எல்லாரும் அவரவர் வீட்டுக்குப் போங்கள். ஆயுதம் எடுக்கத் தெரிந்த ஆண் பிள்ளைகள் அனைவரும் அரண்மனை வாசலுக்கு வந்து சேருங்கள்!" என்று முழங்கிற்று.

உடனே அந்த ஜனக் கூட்டத்தில், "வாதாபிச் சக்கரவர்த்தி வாழ்க! பல்லவ மாமன்னன் நாசமடைக!" என்று குதூகல கோஷம் எழுந்தது. கொம்மாளமாக இரைச்சல் போட்டுக் கொண்டு ஜனங்கள் கலைய ஆரம்பித்தார்கள். ஏதோ இந்திர ஜாலத்தினால் நடந்ததுபோல் கண் மூடித் திறக்கும் நேரத்தில் சிவகாமியின் மாளிகை வாசலில் ஒருவரும் இல்லாமல் போயினர். அவ்விதம்* வெறுமையான இடத்தில் சிறிது நேரத்துக்கெல்லாம் சளுக்க வீரர்கள் இருபது பேர் வந்து நின்றார்கள். சிவகாமியின் மாளிகை வாசலையும் வீதியின் இருபுறங்களையும் அவர்கள்காவல் புரியத் தொடங்கினார்கள்.

சிவகாமி தன்னுடைய தோழிப் பெண்ணின் மூலம் மேற்கூறிய



சம்பவங்களுக்குக் காரணங்களை அறிந்த போது அவளுடைய மனம் ஒருவாறு நிம்மதி அடைந்தது. புலிகேசி உயிர் பிழைத்துக் கோட்டைக்குள் வந்து விட்டபடியால், இனி யுத்தந்தான்; சந்தேகமில்லை. தன்னுடைய சபதம் நிறைவேறும் காட்சியைக் கண்ணால் பார்த்தால் போதும்; மற்றப்படி எது எப்படியானாலும் ஆகிவிட்டுப் போகட்டும். மூர்க்க வாதாபி ஜனங்களாலோ ராட்சஸப் புலிகேசியினாலோ தனக்கு ஏதாவது அபாயம் நேரக் கூடும். நேர்ந்தால் நேரட்டும். அதை எதிர்பார்த்துச் சிவகாமி கையில் கத்தி ஒன்றை ஆயத்தமாக வைத்திருந்தாள். தன்னுடைய கற்புக்குப் பங்கம் வரும்படியான காரியம் ஏற்படுவதாயிருந்தால் பிராணத் தியாகம் செய்து கொள்வது என்று வெகு காலமாக அவள் உறுதி கொண்டிருந்தாள். கையிலே கத்தி



இருக்கிறது; கொல்லைப்புறக் கிணறு இருக்கவே இருக்கிறது!

பல்லவ சைனியம் வாதாபிக் கோட்டையைத் தாக்க ஆரம்பித்த அன்று சாயங்காலம், அந்த நகருக்குள் சூறைக் காற்றும் பெரு மழையும் சேர்ந்து அடிக்கும் போது நடுக் கடலில் என்னவிதமான பயங்கர ஓசை எழுமோ அம்மாதிரி ஓசை எழுந்தது. நூற்றுக் கணக்கான யுத்த பேரிகைகளின் முழக்கம், ஆயிரக்கணக்கான தாரை, தப்பட்டை சங்கம் முதலியவைகளின் ஒலி, பதினாயிரக்கணக்கான வீரர்களின் ஜய கோஷம், இலட்சக்கணக்கான மக்களின் ஆரவார இரைச்சல்; இந்த ஓசைகளெல்லாம் கோட்டை மதில்களிலும் மண்டபங்கள் கோபுரங்களிலும் மோதும்போது எழுந்த பிரதித்வனி எல்லாம் சேர்ந்து இன்னதென்று விவரித்துச் சொல்லமுடியாத பேரொலியாகத் திரண்டு எழுந்து கேட்போரின் உடல் நரம்புகளையெல்லாம் முறுக்கி விட்டு உள்ளங்களை வெறி கொள்ளச் செய்தன.

அன்று சூரியாஸ்தமன நேரத்தில் அந்த மாநகரில் வாழ்ந்த பத்து இலட்சம் ஜனங்களும் ஏறக்குறைய பித்துப் பிடித்தவர்கள் போலாகித் தாம் செய்யும் காரியம் இன்னதென்று தெரியாமல் செய்கிறவர்களும், தாம் பேசுவது இன்னதென்று தெரியாமல் பேசுகிறவர்களுமாக ஆனார்கள்.

இத்தகைய வெறி சிவகாமியையும் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாகவே ஆட்கொண்டது. ஒரு கண நேரமாவது அவளால் ஓரிடத்தில் உட்கார்ந்திருக்க முடியவில்லை. ஆனால், வீட்டைவிட்டு வெளியே போவது என்பது அவளுக்கு இயலாத காரியம். சிறிது நேரம் வீட்டுக்குள்ளேயே அங்குமிங்கும் நடந்தாள். பிறகு பலகணியின் வழியாக வாசலில் எட்டிப் பார்த்தாள். ஜனங்கள் தலைதெறிக்கக் கிழக்கேயிருந்து மேற்கேயும் மேற்கேயிருந்து கிழக்கேயும் ஓடிக் கொண்டிருந்தார்கள். வீட்டின் மேல் மச்சில் ஏறிப் பார்த்தாள். நகரின் அலங்கோலக் காட்சி இன்னும் கொஞ்சம் அதிகமாகத் தெரிந்தது. அவளுடைய மாளிகையின் பின்புறத்தில் கோட்டை மதில் வெகு சமீபத்தில் இருந்தபடியால் அதன்மீது ஏறிப் போருக்கு ஆயத்தமாக நின்ற வீரர்களின் காட்சியை நன்றாகப் பார்க்க முடிந்தது. மற்றும் வீதிகளில் அணிவகுத்துச் சென்று கொண்டிருந்த போர்வீரர் படைகளையும் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்த ஜனங்களின் காட்சியையும் பார்க்க முடிந்தது.

மறுபடியும் கீழிறங்கி அவளுடைய தோழிப் பெண்ணைத் தெரு வாசலில் போய் விவரம் அறிந்து கொண்டு வரும்படி ஏவினாள். அவ்விதமே தோழி வெளியே போய்விட்டு வந்து அன்றிரவு பல்லவர் கோட்டையைத் தாக்கப் போவதாகச் செய்தி கொண்டு வந்தாள். அது மட்டுமல்ல; தான் அன்றிரவு சிவகாமிக்குத் துணையாக இருக்க முடியாதென்றும், யுத்த நிலைமை என்ன ஆகுமோ என்ற பீதி ஏற்பட்டிருப்பதால் தன்னுடைய சொந்த வீட்டுக்குப் போய் உறவினரோடு இருக்க விரும்புவதாகவும் கூறினாள். சிவகாமி அவளை எவ்வளவு கேட்டுக் கொண்டும் பயனில்லை. மற்றொரு வேலைக்காரியையும் அழைத்துக் கொண்டு அவள் போய் விட்டாள். அவ்விருவரும் போகும் போது மாளிகையின் கதவு திறந்த சமயம், வாசலில் காவல் புரிந்த வீரர்கள் பொறுமை இழந்து தாங்கள்

எண்ணிய வண்ணம்

மதுரை துணிகளில் ஏனைய ஆலைகள் தர இயலாத 89 வகை நீல வண்ணங்களும் டிசைன்களும். உள்ளங் கவரும் 260 வகை வண்ணங்களின், டிசைன்களின் பேரணியிலே இது சிறு அணி. இதுவரை இதைப் போன்ற வண்ணவேலையின் கொஞ்சும் எழிலில் எந்த ஆலையும் மிஞ்சியதில்லை.



125-TAM

விநியோகஸ்தர்கள்:

மதுரை சவுத் இந்தியா கார்ப்பொரேஷன்(பிரைவேட்)லிட்., சென்னை-600 001 ◈ ஹாஜி P. சையத் முகமது, விருதுநகர்-626 001 ◈ T.M.'s டெக்ஸ்டைல்ஸ் மதுரை-625 001 ◈ V.V.C.R. முருகேச முதலியார் & சன்ஸ், சேலம்-636 002 ◈ V.V.C.R. முருகேச முதலியார் & சன்ஸ், ஈரோடு-638 001

சில்லறை விற்பனை ஷோரூம்கள்: டாலும் எண்டர்பிரைஸஸ், 40-41, மேல சித்திரை வீதி, மதுரை-625 001 ◈ செட்டிநாடு ஏஜென்சீஸ், 40, மவுண்ட் ரோடு, சென்னை-600 006 ◈ V.V.C.R. முருகேச முதலியார் & சன்ஸ், 139, ஒப்பணக்கார வீதி, கோயம்புத்தூர்-641 001 ◈ பாண்டியன் எண்டர்பிரைஸஸ், 35, சின்னகடைத் தெரு, திருச்சிராப்பள்ளி-620 002 ◈ செட்டிநாடு ஏஜென்சீஸ், C-7, யூனிட்டி பில்டிங், J. C. ரோடு, பெங்களூர்-560 002

மட்டும் எதற்காக அங்கு நின்று அந்த வீட்டைக் காவல் புரிய வேண்டும் என்று பேசிக் கொண்டிருந்தது சிவகாமியின் காதிலே விழுந்தது. கதவைக் கெட்டியாகச் சாத்தித் தாழ்கள் எல்லாவற்றையும் போட்டாள். அந்த மாளிகையின் வாசற் கதவுகள், கோபுர வாசல் கதவுகளைப் போன்ற பெரிய கதவுகள். ஒரு கதவில் திட்டி வாசல் ஒன்று இருந்தது. அதாவது ஒரு மனிதர் உள்ளே நுழையக் கூடிய அளவு துவாரமும் அதற்கு ஒரு தனிக் கதவும் தாழ்ப்பாளும் இருந்தன. தோழியும் வேலைக்காரியும் அந்தத் திட்டி வாசல் வழியாகத்தான் வெளியே சென்றார்கள்.

சிவகாமி வாதாபியில் வசித்த காலத்தில் சாதாரணமாகவே சொற்ப நேரந்தான் தூங்குவது வழக்கம். அன்றிரவு அவள் கண்ணை மூடவில்லை. 'வெளியே என்ன நடந்து கொண்டிருக்கிறது? என்ன நடக்கப் போகிறது?' என்று அறிந்து கொள்ள அவளுடைய உள்ளமும் உடம்பின் நரம்புகளும் துடித்துக் கொண்டிருந்தன. அடிக்கடி பெருமூச்சு எழுந்தது. நெஞ்சு தடக் தடக் என்று அடித்துக் கொண்டது. அடி வயிற்றை என்னவோ செய்தது.

நடுநிசி ஆனபோது, நகரில் பல இடங்களில் வீடுகள் தீப்பற்றி எரிய ஆரம்பித்ததைச் சிவகாமி தன் மாளிகையின் மேல் மாடியிலிருந்து பார்த்தாள். ஒன்பது வருஷங்களுக்கு முன்னால் தான் செய்த சபதம் நிறைவேற ஆரம்பித்து விட்டது என்பதைத் தெரிந்து கொண்டாள். அவளுடைய வாழ்க்கையில் அதுவரையில் அவள் அநுபவித்திராத திருப்தி அவள் மனத்தில் அப்போது ஏற்பட்டது. அதே சமயத்தில் காரணம் தெரியாத ஒருவித மன வேதனையும் உண்டாயிற்று.

நகரிலே நாற்புறமும் தீ பரவி வந்தது. அன்று சாயங்காலம் அந்நகரில் ஏற்பட்டிருந்த மகத்தான ஆரவாரம் இப்போது வேறு ஸ்வரூபத்தை அடைந்தது. குதூகலமான ஜயகோஷங்கள் அலறலும் ஓலமுமாக மாறின. மக்களின் பெருமித வீர நடையானது பயப்பிராந்தி கொண்ட ஓட்டமாக மாறியது. வர வர ஸ்திரீகள், குழந்தைகளின் ஓலமும் ஓட்டமும் அதிகமாகி வந்தன. இதையெல்லாம் பார்க்கச் சிவகாமியின் மனத்தில்திருப்தி மறைந்து வேதனை அதிகமாயிற்று. கடைசியில், அந்தக் கோரக் காட்சிகளைப் பார்க்கச் சகியாமல் மேல் மாடியிலிருந்து கீழே இறங்கினாள். 'ஆகா! இது என்ன நம்மால் விளைந்த விபரீதம்? இதன் முடிவுதான் என்ன? இந்தப் பெரிய நகரம் முழுவதும் உண்மையாகவே எரிந்து அழிந்துவிடப் போகிறதா? இதிலே வசிக்கும் இத்தனை இலட்சக் கணக்கான மக்களும் பெண்களும் குழந்தைகளும் செத்து மடியப் போகிறார்களா? ஐயோ! இது என்ன? என்னுடைய கதி என்ன ஆகப் போகிறது?' என்று அவள் உள்ளத்தில் ஆயிரக்கணக்கான சிந்தனை அலைகள் கொந்தளித்து எழுந்து உடனே மறைந்தன.

அப்புறம் மேல் மாடிக்கே போக மனம் இல்லாமல் வீட்டுக் கூடத்தில் நடந்து கொண்டிருந்தாள். அலைந்து அலைந்து கால்கள் களைத்து வலி எடுத்துப் போயின. வெறுந் தரையில் குப்புறப் படுத்துக் கொண்டாள். அழுகை வந்து கண்ணில் நீர் பெருகினால் தேவலை



யென்று தோன்றியது. ஆனால், அழுகையும் வரவில்லை. கண்ணீர் சுரக்கும் இடத்தில் ஏதோ அடைத்துக் கொண்டு கண்ணீர் வரவொட்டாமல் செய்துவிட்டது. பொழுது விடியும் சமயம் ஆயிற்று. முற்றத்தில் உதய நேரத்துக்குரிய மங்கலான வெளிச்சம் காணப்பட்டது. அச்சமயம் அந்த வீட்டு வாசலில் ஒரு பெரும் ஆரவாரம் கேட்டது.

சட்டென்று சிவகாமியின் மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது. ஒருவேளை மாமல்லர்தான் வருகிறாரோ? தன் சபதத்தை நிறைவேற்றித் தன்னை அழைத்துக் கொண்டு போவதற்காக வருகிறாரோ? அப்படியானால் ரொம்ப நல்லது. இந்த மாநகரின் படுநாசத்தை இப்போதாவது தடுக்கலாம். அவர்

காலில் விழுந்து, 'பிரபு! போதும்! நிறுத்துங்கள்!' என்று கெஞ்சலாம்.

இப்படி எண்ணியவளாய்ச் சிவகாமி பரபரவென்று எழுந்து ஓடினாள். கதவண்டை சென்றதும் மனம் தயங்கிற்று. எல்லாவற்றுக்கும் இட்டி வாசற்கதவைத் திறந்து பார்க்கலாம் என்று திறந்தாள். அங்கே தோன்றிய காட்சி அவளைத் திகைத்துப் பீதியடையச் செய்தது. மாமல்லரையோ பல்லவ வீரர்களையோ அங்கே காணவில்லை. கோபம் கொண்ட வாதாபி ஜனக் கூட்டந்தான் காணப்பட்டது. அந்தக் கூட்டத்தாரில் சிலர் வீட்டைக் காவல் புரிந்த சளுக்க வீரர்களுடன் ஏதோ வாதாடிக் கொண்டிருந்தார்கள்.

சிவகாமியின் முகம் இட்டி வாசலின் மூலம் தெரிந்ததும் அந்த ஜனக் கூட்டத்தில் பல நூறு சிறுத்தைப் புலிகளின் உறுமல் சத்தம் போன்ற ரோமம் சிலிர்க்கச் செய்யும் சத்தம் உண்டாயிற்று. கூட்டத்திலே பலர் காவல் புரிந்த வீரர்களைத் தள்ளிக் கொண்டு வீட்டு வாசற்படியை நோக்கிப் பாய்ந்து வந்தார்கள்.

சிவகாமிக்கு நிலைமை ஒருவாறு புலப்பட்டது. சட்டென்று இட்டி வாசலை மூடினாள். அவசரத்தினாலும் பயத்தினாலும் அதைத் தாழிட மறந்து போனாள். உடனே அங்கிருந்து மாளிகையின் பின்கட்டை நோக்கி விரைந்து சென்றாள். திட்டமான யோசனையுடன் செல்லவில்லை. அந்தச் சமயம் அந்த மூர்க்கங் கொண்ட ஜனங்களிடமிருந்து தப்ப வேண்டும் என்று இயற்கையாகத் தோன்றிய எண்ணம் அவளுடைய கால்களுக்குப் பலத்தை அளித்து வீட்டின் பின்கட்டை நோக்கி விரைந்து ஓடச் செய்தது.

வீட்டுப் பின்கட்டின் வாசற்படியைத் தாண்டித் தாழ்வாரத்தை அடைந்ததும், உதய நேரத்தின் மங்கிய வெளிச்சத்தில் அங்கு ஓர் உருவம் — கபாலங்களையும் எலும்புகளையும் மாலையாகப் பூண்ட கோரமான ஸ்திரீ உருவம் — நிற்பதைச் சிவகாமி பார்த்தாள். அவளுடைய உடம்பில் இரத்த ஓட்டம் ஒரு நிமிஷம் நின்றுவிட்டது. தேகமாத்தியந்தம் ரோமங்கள் குத்திட்டு நின்றன. சிவகாமியைப் பார்த்ததும் அந்தப் பெண் பேய் கலகலவென்று சிரித்தது. பிறகு, ''அடி அழகி சிவகாமி! கல்லாணி சிவகாமி! மாமல்லனையும் நாகநந்தியையும் மோக வலைக்கு உள்ளாக்கிய நீலி! உன் அழகெல்லாம் இப்போது என்ன செய்யும்? உன் கண் மயக்கும், முக மினுக்கும் உன்னை இப்போது காப்பாற்றுமா?'' என்று அந்தப் பெண் பேய் கேட்டுவிட்டு மறுபடியும் சிரித்தது.

'' அடி சிவகாமி! நானும் உன்னைப் போல் ஒரு சமயம் கண்டவர் மயங்கும் மோகினியாகத்தான் இருந்தேன். உன்னாலே இந்தக் கதிக்கு ஆளானேன். அதற்குப் பழி வாங்கும் சமயத்துக்காக இத்தனை காலம் காத்திருந்தேனடி!'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு கூறியவண்ணம் காபாலிகை தன் மடியில் செருகியிருந்த கத்தியைச் சட்டென்று எடுத்து ஓங்கினாள்.

சிவகாமிக்கு அப்போது சிந்தனை செய்யும் சக்தியோ, தப்பித்துக்கொள்ள யுக்தி செய்யும் சக்தியோ சிறிதும் இல்லை. அவள் உள்ளம் ஸ்தம்பித்துப் பிரமை கொண்டிருந்தது. எனினும், எத்தகைய ஆபத்திலிருந்தும் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு முயற்சி செய்யும் இயற்கைச் சுபாவத்தை ஒவ்வொரு ஜீவனுக்கும் இறைவன் அளித்திருக்கிறான் அல்லவா? அந்தச் சுபாவம் காரணமாகச் சிவகாமி ஓர் அடி பின்னால் நகர்ந்தாள்.

அந்தக் கணத்தில் காபாலிகைக்குப் பின்புறத்தில் அவள் அறியாமல் ஓர் உருவம் திடீரென்று தோன்றியது. பின் கட்டின் வாசற்படி வழியாக நுழைந்த அந்த உருவம் காபாலிகையின் கத்தி பிடித்த கையைச் சட்டென்று கெட்டியாகப் பிடித்துக் கொண்டது.

அந்தப் பிடியின் பலத்தினால் காபாலிகையின் கைவிரல்கள் விரிந்து கத்தி தரையில் விழுந்தது. அளவில்லாத குரோதத்துடன் காபாலிகை திரும்பிப் பார்த்தாள்.

''அட, பாவி! நல்ல சமயத்தில் வந்துவிட்டாயா?'' என்றாள்.

அப்படி அதிசயமாகத் திடீரென்று தோன்றித் தன் உயிரைக் காத்த உருவத்தைச் சிவகாமி அப்போது உற்றுப் பார்த்தாள்.


அந்த உருவம் வாதாபிச் சக்கரவர்த்தி புலிகேசிதான் என்று தெரிந்தபோது சிவகாமிக்கு உண்டான வியப்பும் திகைப்பும் எல்லையற்றவையாயின. ஆகா! சக்கரவர்த்தி செத்துப் போனதாகச் சொன்னார்களே! ஒருவேளை அவருடைய ஆவி வடிவமா? அல்லது, அல்லது..... முன்னொரு சமயம் செய்ததைப் போல் ஒருவேளை பிக்ஷுதான் சக்கரவர்த்தி வேஷம் பூண்டு வந்திருக்கிறாரோ?

(தொடரும்)



''எப்போதுமே குண்டாக இருப்பவர்கள் ஏன் நல்லவர்களாக இருக்கிறார்கள்?''
''அவர்களால் சண்டை போடவும் முடியாது, ஓடவும் முடியாது. அதனால்தான்!''
-சம்பத் குமாரி


சரித்திர காலத்தில் மகோன்னத கட்டம்
இலக்கியத் துறையில் மதிப்புள்ள பெயர்
பத்திரிகை உலகில் பெருமிதமிக்க இதழ்
மூன்றும் இணையும்போது பிறப்பது:
கண்ணதாசன் எழுதும்
சேரமான் காதலி
கல்கியில் விரைவில் ஆரம்பமாகிறது



இன்பத் தென்றல்

குல்ஷன் நந்தா

தமிழாக்கம்: ரா. வீழிநாதன்

6

அநூப் தன் ஸ்போர்ட்ஸ் காரை ரூபாவின் ஹாஸ்டலுக்கு வெளியே நிறுத்தினான்.

அப்பொழுது நள்ளிரவு கடந்திருந்தது. ரூபா பேசாமல் அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். அவள் அநூப்பினிடம் தன் நிலையை ஓரளவு விளக்கியிருந்தாள். கற்பனை உலகிலிருந்து வெளியேறி உண்மை உலகை எதிர்கொள்ள அவளுக்கு இப்பொழுது பயமாக இருந்தது.

''என்ன யோசிக்கிறீர்கள் நீங்கள்?'' அநூப் அவளது சிந்தனைத் தொடரைத் துண்டித்து விட்டான்.

''வாழ்க்கையோடு இப்படியெல்லாம் விளையாடக்கூடாது. அது எங்கே கொண்டுபோய் விடுமோ?''

''நான் பொய்யான பிரின்ஸ் என்று யாருக்குமே சந்தேகம் எழவில்லையே! வீணில் கவலைப்படுவானேன்?''

''ஆனால் இனி உண்மையை மறைப்பதும் அப்படியொன்றும் சுலபமல்லவே!''

''இதென்ன பெரிய காரியம்? உங்கள் உண்மையான பிரின்ஸ் வந்ததும் இந்தப் புதிரை உடைத்து விடுங்கள்! அது வரையில் நான் இருக்கிறேன்!'' சொல்லும் பொழுது அநூப்புக்குச் சிரிப்பு வந்தது.

''நீங்கள் ரொம்பச் சாது!''

''என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள்?''

''என் குழப்பத்தை உங்களால் புரிந்து கொள்ள முடியாது.''

''என்னால் முடியா விட்டாலும் நீங்கள் புரிய வைக்க முயலலாம் அல்லவா?''

ரூபா அவன் முகத்தை எடை போட்டாள். பிறகு தயங்கியவாறே, ''எனக்குக் கடந்த ஒரு மாதமாக இரண்டு நாள் வட்டம், மூன்று நாள் வட்டம் ஒரு நீல உறை தபாலில் வருகிறது!'' என்றாள்.

''பேஷ், பேஷ்! அப்படியென்றால் அது காதல் கடிதமாகத்தான் இருக்க வேண்டும்!''

''கரெக்ட்!''

''எழுதுகிறவர் பிரின்ஸாகத்தான் இருப்பார்!''

'' 'யூ ஆர். ரைட்!' இந்தக் காதல் கடிதங்கள் என் தோழிகளைத் தூங்க விடுவதில்லை. அவர்களது தூக்கத்துக்கு எமனாக முளைத்துள்ளன!''

''அப்படியானால் அவர்கள் எல்லோரும் உங்கள் காதல் கடிதங்களைப் படிக்கிறார்கள் என்று சொல்லுங்கள்!''

''ஆமாம்!'' ரூபா முறுவலித்தவாறே உதடுகளைக் கடித்துக் கொண்டாள்.

அநூப் வியப்புடன் ரூபாவின் மனத்துள் புகுந்து புறப்பட முயன்றான்.

ரூபாவும் சிறிது நேரம் அவனை, அவனைப் போலவே பார்த்துக்கொண்டிருந்தாள். பிறகு ''எல்லோரும் என் பிரின்ஸைக் காணத் துடியாய்த் துடித்தார்கள்!'' என்றாள்.

''அவனுக்குப் பதில் என்னைப் பார்த்ததில் அவர்களுக்கு ஏமாற்றமாகப் போயிருந்திருக்கும்!''

''இல்லவே இல்லை! நீங்களும்தான் ராஜா வாட்டம் இருக்கிறீர்களே! உங்களுக்கென்ன குறைச்சல்?'' என்ற ரூபாவுக்கு வெட்கமாகப் போய் விட்டது; தலையைக் குனிந்து கொண்டாள்.

''அப்படியா? மெத்த நன்றி!'' சங்கோசப்பட்டாலும் அநூப் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டான்.

ரூபா முகத்தைக் கம்பீரமாக வைத்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தாள். அவளுடைய உதடுகள் ஏதோ சொல்லத் துடித்தன. ஆயினும் அவள் மௌனத்தைக் கடைப்பிடித்தாள்.

அநூப் அந்த மௌனத்திடையேயும் அவளது உள்ளத்தில் அலைமோதும் உணர்வுகளைப் படிக்க முயன்றான். ''உங்கள் காதலைப் பற்றித்தான் கல்லூரி முழுவதற்கும் தெரியும் என்கிறீர்களே, அப்புறம் பயப்படுவானேன்?'' என்று கேட்டான்.

''எதற்காகப் பயப்படுகிறேன் என்றால்..'' ரூபாவினால் மேற்கொண்டு வாக்கியத்தை முடிக்க முடியவில்லை.

''என்ன, சொல்லுங்கள்!''

''ரகசியம் அம்பலமாகி விட்டால், அப்புறம் என்ன ஆகும்?''


''ரகசியமா?''

''ஆமாம். நான் கூறுகிற பிரின்ஸ் என் கனவுலகத்தில் தோன்றியவர். நான் சொல்கிற கடிதங்கள் எல்லாம் நானே எனக்கு எழுதிக் கொண்டவை!''

''என்ன?''

அநூப் ஒரு கணம் வாய் அடைத்துப்போய் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு, ''அப்படியானால் அது வெறும் கற்பனைக் காதல் கதைதானா?'' என்று கேட்டு, அவள் விழிக் கடலில் முக்குளித்து உண்மையையும் பொய்யையும் இனம் பிரித்துக் காண முயன்றான். ஆனால் ரூபாவின் இதயத்தில் சூதோ வாதோ இருந்தால் அல்லவா அது விழிகளின் வழியே தெரிவதற்கு? அவளது உணர்வுக்குப் பின் ஏதாவது பாவ நோக்கம் இருந்தால் அல்லவா முகத்தில் தெறிப்பதற்கு? அவள் மௌனமே உருவாகத் தண்டனையை எதிர் நோக்கினாள்.

திடீரென்று அவள் காரின் கதவைத் திறக்க முயலவே, அநூப் பாய்ந்து அவள் கரத்தைப் பற்றிக் கொண்டான். அவளை விழுங்கி



விடுபவன் போலப் பார்த்து, ''இதெல்லாம் மெய்தானா?'' என்று கேட்டான்.

ரூபா, ''ஆம்'' எனத் தலையசைத்தாள். தன் கையை விடுவித்துக் கொண்டு, இறங்குவதற்காகக் காரின் கதவை மீண்டும் திறக்கலானாள்.

''நான் ஒன்று சொல்லவா, ரூபா?'' அநூப் திடுதிப்பென்று கேட்டான்.

''சொல்லுங்கள்!''

''நேற்று வரை கற்பனையாக இருந்தது இன்று ஏன் மெய்யாகி விடக் கூடாது?''

''இட் இஸ் இம்பாஸிபிள்!'' நடுங்கும் குரலில் கூறியவாறே ரூபா காரின் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். அநூபைத் திரும்பிப் பார்க்கக் கூட அவளுக்குத் துணிவு ஏற்படவில்லை. அவனுக்கு அவள் நன்றி சொல்ல விரும்பினாள். ஆனால் என்ன முயன்றும் அவளால் எதுவுமே சொல்ல முடியவில்லை. அவள் உதடுகள் காய்ந்து காய்ந்து போயின.

கால்கள் கனக்க அவள் ஹாஸ்டலை நோக்கி நடந்தாள். அநூப், ''ரூபா, ரூபா, ரூபா!'' என்று அழைத்தான்.

அவன் அழைப்புக் குரலைக் கேட்டுத் தயங்கி நின்றாலும் அவளால் அவனைத் திரும்பிப் பார்க்க முடியவில்லை.

''மீண்டும் எப்பொழுது சந்திக்கலாம், ரூபா?''— அநூப் அவள் மௌனத்தைக் கலைக்கக் கேட்டான்.

''ஒரு பொழுதும் இல்லை!'' நடுங்கும் குரலில் கூறிய ரூபா அப்புறம் அங்கு நிற்கவில்லை; ஹாஸ்டலை நோக்கி விரைந்தோடி விட்டாள்.

காரில் உட்கார்ந்த வண்ணம் அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான் அநூப். சிறிது நேரத்தில் ஹாஸ்டல் வராந்தாவைத் தாண்டிக் கட்டடத்துக்குள் மறைந்துவிட்டாள் ரூபா.

ரூபா தன் அறைக் கதவைத் திறந்து கொண்டு வேகமாக உள்ளே நுழைந்தாள். பிறகு கதவைச் சாத்திவிட்டு, அதில் முதுகைச் சாய்த்துக் கொண்டு நின்றவாறே இளைப்பாறலானாள். ஏனோ, அவள் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டிருந்தது. சிறிது நேரத்துக்குப் பின் அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு கனத்து மூடிப்போன இமைகளைத் திறந்தாள். அவள் அறைத் தோழி அஞ்சு அந்த நேரம் வரை தூங்கவில்லை. மேஜை விளக்கின் மங்கிய ஒளியில் விழிகள் கிழிய ரூபாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ரூபாவின் பார்வையோடு பார்வை மோதியதும் அவள் முறுவலித்தாள். ஆனால் ரூபா அவளோடு பேசும் மனநிலையில் இல்லை. பேசாமல் கண்ணாடிக்கெதிரே போய் நின்று கொண்டு தலைப் பின்னலைப் பிரித்து விட்டுக் கொள்ளலானாள்.

அஞ்சு படுக்கையிலிருந்து எழுந்து அவள் அருகில் வந்து, ''யூ ஆர் எ டாம் லக்கி கேர்ல்!'' என்றாள்.

''அது எப்படிச் சொல்கிறாய்?''

''உன் பிரின்ஸைப் பார்த்துவிட்டு! என்ன பர்ஸனாலிடி! என்ன அழகு!''

''என்னைக் கேலி செய்கிறாயா, அஞ்சு?''

''இல்லை, ரூபா! நிஜமாகச் சொல்கிறேன் அவருடைய கடிதங்கள் அவருடைய உள்ளத்து அழகையும் அறிவாற்றலையும் அப்பொழுதே காட்டிக் கொடுத்தன. ஆனால் பார்ப்பதற்கும் இத்தனை அழகாயிருப்பார் என்று யாருமே அப்பொழுது நம்பவில்லை!'' என்றாள் அஞ்சு.

''ரஜியாவும் நிஷியும் என்ன நினைக்கின்றனர்?''

''பொறாமைப்படுகிறார்கள்!''

''நீ?''

''உண்மையைச் சொல்லட்டுமா?''

''உம்!''

''உன் பிரின்ஸைப் பார்த்ததிலிருந்து நான் மாய்ந்து போகிறேன்.''

''பொய்!''

''இல்லை, ரூபா! மெய்தான்!''

''உன் முகத்தைப் பார்த்தால் அப்படித் தோன்றவில்லையே!''

''எப்படித் தோன்றும்? எனக்கு உயிருட்டத்தான் ஒரு கடிதம் வந்து விட்டதே!'' என்ற அஞ்சு நீல நிற உறையொன்றை எடுத்துக் காட்டினாள்.

உறையைப் பார்த்ததும் ரூபா நடுங்கி விட்டாள், தன் இரட்டு வெளியாகிவிட்டாற் போன்ற அச்சத்தில்! ''இந்தக் கடிதம்...?'' என்று இழுத்தாள்.

''அடியே, எதற்காக இப்படிப் பயந்து சாகிறாய்? இது உன் கடிதம் அல்ல; என் கடிதம். உறையின் நிறம் மட்டும்தான் ஒன்று!''

''யார் எழுதி யிருக்கிறார்கள்? ரோமியோவா?''

''இல்லை, அப்பா!''

''என்ன எழுதியிருக்கிறார்?''

''வந்து....''

''எதற்கு மென்று விழுங்குகிறாய்? சொல்லக்கூடாத விஷயம் என்றால் சொல்ல வேண்டாம்!''

''உன்னிடம் சொல்வதற்கென்ன? அப்பா எனக்கு ஒரு வரன் பார்த்திருக்கிறாராம்!''

''புகைப்படம் – கிகைப்படம் அனுப்பியிருக்கிறாரா?''

''இல்லை! பையன் இங்குதான் இருக்கிறானாம்!''

''எங்கே?''

''சிம்லாவில்தான்!''

''என்ன செய்கிறானாம்?''

''சுற்றிப் பார்க்க வந்திருக்கிறானாம்!''

''உனக்கு அவனைத் தெரியுமா?''

''தெரியாது. ஆனால் நாளைக்குப் பார்க்கப் போகிறேன்!''

''நீயாக எப்படிப் போய்ப் பார்ப்பாய்?''

''அப்பா அந்தப் பையன் கையிலேயே சில கம்பளித் துணிகள் அனுப்பியிருக்கிறார். அவற்றை என்னையே போய் வாங்கிக்கொள்ளச் சொல்லியிருக்கிறார். அந்தச் சாக்கில்



லாகூர் குதிரைப் பந்தயத்தில் ஒரு குதிரை மீது, அது நிச்சயம் ஜெயித்து விடும் என்று நினைத்துப் பலர் பணம் கட்டினார்கள். ஆனால் அந்தக் குதிரை ஜெயிக்கவில்லை. அந்தக் குதிரையின் பெயர் - 'எக்ஸ்க்யூஸ் மீ'

'டெக்கான் ஹெரால்ட்' —பாலி

ஹோட்டல் கோகுலா

533, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை – 600 084

தொலைபேசி: 39082 (10 lines) தந்தி: ராதிகாஸ்

* விசாலமான 74 அறைகள் கொண்டது.
* சைவ உணவு — 'கோவர்த்தன்' *A/c. RESTAURANT.*
* அசைவ உணவு 'பாமாஸ்'. ஒவ்வொன்றிற்கும் தனித் தனி சமையல் அறைகள். தனித் தனி சமையல் பாத்திரங்கள்.
* கூட்டங்கள் திருமண நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான பெரிய ஹால். மாயா-மது மற்றும் குளிர் சாதன வசதியுள்ள 'ராதிகாஸ்'
* பிரதி ஞாயிறுதோறும் மாலை 3 மணி முதல் 9 மணி வரை "ஜாம் செஷன்" *(DANCE)*
* டிரைவ் - இன் - ரெஸ்ட்டாரண்ட், மற்றும் ரூஃப் கார்டன்.
* இரவு பகல் எந்நேரமும் திறந்திருக்கும் 'காபி ஷாப்.' *ROOM SERVICE, ROUND THE CLOCK.*

சென்னை – சென்ட்ரல், எழும்பூர் ரயில் நிலையங்களுக்கு மிக அருகாமையில் அமைந்துள்ள அழகிய ஹோட்டல்

Rotract S. திருஞானசம்பந்தன், B. A.,

31-5-1951   29-10-1974



எல்லோரிடமும் அன்புடன் பழகி
எங்களுக்குப் பெருமை தந்த
உனது அன்பு உருவம்
நினைந்து நினைந்து உருகும்

விவேகானந்தம் வாட்ச் கம்பெனி
Prop.: C. சேனாபதி
173, குமரன் ரோடு, திருப்பூர்-1

திருமுருகன் பேங்கர்ஸ்
வேலாயுதம்பாளையம்

M. N. சிதம்பரம் செட்டியார் & சன்ஸ்
ஜவுளி வியாபாரம்
திருப்பூர் - 4

மற்றும் உறவினர்களும், நண்பர்களும்


புதியவை! நுரை
வளம் கொழிக்கும் பாண்ட்ஸ் ஷாம்பூகள்
நீண்ட கூந்தலையும் நிஜமாகவே
சுத்தம் செய்கின்றன!
நீண்ட கூந்தலை சுத்தம் செய்வது பற்றிய கவலை இனி வேண்டாம்! புதிய பாண்ட்ஸ் ஷாம்பூகள் வளமான நுரை கொழிக்கும் வண்ணம் விசேஷ கலவை முறைப்படி செழுமையாக்கப்பட்டுள்ளன. இவற்றின் மென்மையான, குமிழ் பொங்கும் நுரை வேரூன்றிய மயிர்க்கால்களிலிருந்து கூந்தலின் முனைவரை விரைவாகவும், மிருதுவாகவும் செயல்படுகிறது! நீளமான மயிரிழைகள் முழுமையாக சுத்தமடைகின்றன; மெதுவாக இழுப்பின் மெல்லிசை பாடுகின்றன. உங்கள் கூந்தலின் தேவைக்கேற்ற பாண்ட்ஸ் ஷாம்பூ வகையைத் தேர்ந்தெடுங்கள்: பிசுக்குள்ள கேசத்திற்கு லெமன், ஊட்டம் தேவைப்படும் கேசத்திற்கு எக், மங்கலான, சோகை படிந்த கேசத்திற்கு டானிக் மற்றும் இயல்பான கேசத்திற்கு மெருகூட்ட ப்யூடி ஷாம்பூ. குளிக்கும் நீரின் தரம் எதுவாக இருப்பினும் செழுமையான நுரை பொங்குவதை உணருவீர்கள். பாண்ட்ஸ் ஷாம்பூ உபயோகித்துப் பட்டுப் போன்ற கேசத்தின் பகட்டைப் பறை சாற்றுங்கள். கேசத்தின் பேரன்புப் பராமரிப்பு பெண்மைக்குத் தருகிறது ஒரு தனி வனப்பு!
POND'S
Beauty Shampoo
For normal hair
ப்யூடி இயல்பான கேசத்திற்கு
எக் ஊட்டம் தேவைப்படும் கேசத்திற்கு
லெமன் பிசுக்குள்ள கேசத்திற்கு
டானிக் சோகை படிந்த கேசத்திற்கு
பாண்ட்ஸ் ஷாம்பூகள்...
பாண்ட்ஸ் அளிக்கும் புதிய சிறப்புத் தயாரிப்புகள்
சிஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யூ.எஸ்.ஏ.யில் இணைக்கப் பெற்றது)
HT-CP.8432

அவளைப் பார்த்தாற்போலாகி விடும் அல்லவா?''

''பெஸ்ட் ஆஃப் லக்!'' என்று கூறிய ரூபா அவனைப் பார்த்துக் கையைத் தூக்கி வெற்று முத்தம் கொடுத்து விட்டு உடை மாற்றிக் கொள்ளக்குளியலறையை நோக்கி நடந்தாள்.

அங்க அவளை வழி மறித்துக் குறும்பாக அவள் முகத்தில் விரலால் தட்டி, ''என்னிடம் என்னடி வெட்கம்?'' என்றான்.

''இல்லையே!''

''அப்போ உடை மாற்றிக் கொள்ளக் குளியலறைக்குப் போவானேன்? இங்கேயே மாற்றிக்கொள்ளேன்!''

''ஊஹூம்!''

ரூபா அவனைத் தாண்டிச் செல்ல முயன்றாள்.

''ஏன்?''

''நேற்றுவரை உங்களிடம் எனக்கு வெட்கமோ தயக்கமோ ஏற்படவில்லை. ஆனால் இன்றைக்கு என்னமோ....'' என்று இழுத்தவள் சட்டென்று குளியலறைக்குள் நுழைந்து விட்டாள். அங்க அவளைப் பின்னாலிருந்து தாவிப் பிடிக்க முயன்றான். ரூபா முந்திக் கொண்டு கதவைச் சாத்திக்கொண்டாள்.

''ஹௌ மீன்!'' அங்க கூச்சலிட்டாள். என்றாலும் வேறு வழியின்றி வெளியிலேயே நின்றான். 'இனி தன் அழகெல்லாம் பிரின்ஸ் ஒருவனது பார்வைக்கு மட்டுமே என்று தீர்மானித்து விட்டாளா இவள்? அப்படியானால் அது உண்மையிலேயே மிக ஆழ்ந்த காதல் தான்!'

சாய்வு நாற்காலியில் அமர்ந்து சிகரெட்டைப் புகைத்த வண்ணம், அநூப் கற்பனையில் ஆழ்ந்திருந்தான். அவன் விட்ட புகைச் சுழல் வட்டமடித்தாற் போலவே, அவன் கற்பனையும் வட்ட மடித்துச் சுழன்றது.

இரவு நேரம் இன்னும் முழு முறுக்கில் இருந்தது. மால் ரோடில் மக்கள் நடமாடும் அரவம் கேட்டுக் கொண்டிருந்தது. பக்கத்து வீட்டு ரேடியோவில் மேலை நாட்டு இசை ஒலித்துக் கொண்டிருந்தது. ஆனால் அநூப்பின் மனம் அந்த இசையோடு இசையாமல் வேறு எங்கோ லயித்திருந்தது. அவன் மனத்திரையில் ரூபாவின் ஓவியமே பூரித்து நின்றது. ரூபா திடீரென்று கனவு போல் அவன் வாழ்க்கையில் வந்தாள், என்றாலும் வேர் விட்டுக் கிளைத்து மனம் முழுவதையுமே அல்லவா நிறைத்து விட்டாள்! ஆனால் அவள் விதித்த நிபந்தனைதான் எத்தனை கொடியது? தானாகவே காதல் நாடகமாட வந்த ரூபா, தன் காரியம் முடிந்ததும் இனி ஒரு பொழுதும் சந்திக்கக் கூடாது என்றல்லவா உத்தரவு போட்டுவிட்டுப் போய் விட்டாள்!

''அப்பனே! என்ன யோசனை, சுழலில் சிக்கித் தவிப்பவனைப் போல?''

நண்பன் பிரபுவின் குரல் கேட்டு அநூப் துணுக்குற்றான். விரிப்பில் அமர்ந்து போதையில் மிதந்த பிரபுவுக்கு அநூப் அப்படி முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு மௌனமாக யோசனையில் ஆழ்ந்திருப்பது பிடிக்கவில்லை. ''டேய், நான் சொல்வதைக் கேளடா! என்னைப் பின்பற்றினால் உன் கவலையெல்லாம் மறந்து போகுமடா!'' என்றான்.



''பெரியார் காட்டிய பாதையில் அண்ணா. அண்ணா காட்டிய பாதையில் கருணாநிதி. கருணாநிதி காட்டிய பாதையில் யாரோ?''

''சரிதான்! மவுண்ட் ரோடில் இடமா இல்லே?''

''டேய், பேசாமல் இருக்க மாட்டாய்?''

''ஏழை சொல் அம்பலமேறாது என்பது எவ்வளவு உண்மை! என் பேச்சைக் கேட்கவில்லையானால் நீ இந்த டிஸம்பர்க் குளிரில் விறைத்துத்தான் போகப் போகிறாய்!''

''குடி போதையில் ஏதாவது தத்துப் பித்தென்று உளறாதே!''

''என் குடி போதை பொழுது விடிந்தால் இறங்கிவிடும். ஆனால் உன் குட்டி போதை மாதக் கணக்கானாலும் இறங்காது, தெரிந்து கொள்!''

''டேய், உனக்குத் தெரியாதடா அவள் குணம்!''

''எனக்கா, உனக்கா? உன்னை அவள் படு முட்டாளாக்கி விட்டுப் போய்விட்டாளடா!''

''நீ நினைக்கிறாற்போன்ற பெண் இல்லையடா அவள்!''

''பின்னே எப்படிப்பட்டவளாம்?''

''எளிமையும் எழிலும் இரண்டறக் கலந்த உருவம்! அவளைப் பார்த்தாலே போதும், மதி கிறங்கிப் போகும்!''

''அவள் என்ன, 'கால் கேர்லா'?''

''அவள் கல்லூரி மாணவியடா!''

''இருக்கட்டுமே! கல்லூரி மாணவிகளுக்கு இந்தத் தொழில் தெரியாதா?''

''ஷட் அப்!''

அநூப் போட்ட கூச்சலில் பிரபு வாயடைத்துப் போய் விட்டான். அநூப்புக்கோ ஆத்திரமான ஆத்திரம்! பிரபுவின் குறுக்கீட்டால் அவனது காதல் கனவுகள் அல்லவா கலைந்து போயின! ஆத்திரத்தைக் கைவிரல்கள் மீது காட்டி நெட்டி முறித்துக் கொண்டான்.

''என் மேல் கோபமா?'' பிரபு அவன் கால்களைப் பிடித்துக் கொண்டு கெஞ்சாத தோஷமாகக் கேட்டான். அநூப் அவன் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. விருட்டென்று எழுந்து தன் அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டான்.

''சரி, இனி கேட்கவில்லையடா! என்மேல் கோபப்படாதேயடா!'' என்று கூறிய வண்ணம் பிரபு அப்படியே படுத்துக் கண் அயர்ந்து விட்டான்.

(தொடரும்)

நடிப்பு மாத்திரம் அல்ல. திரைக்கதையும் அசடு வழிகிறது. இளம் டாக்டர் ஆனந்தின் காதல் மனைவி கர்ப்பமாயிருந்தபோது ஒரு பணக்காரரின் காரில் அடிபட்டுக் குழந்தை இறந்து பிறக்கிறது; அத்துடன் இனி அவள் மகப் பேறு அடைய முடியாது என்கிற நிலையும் ஏற்படுகிறது. இது வரையில் கிராமப் பகுதியில் ஆர்வத்தோடு டாக்டராகப் பணியாற்றி வந்த ஆனந்த் பட்டணத்துக்கு வந்து பணத்தாசை பிடித்து, ஏராளமாகப் பணம் சேர்க்கிறான். குடிப் பழக்கம் வந்து சேர்கிறது; நற்குணங்களெல்லாம் விடைபெற்றுக் கொண்டுவிடுகின்றன..... இப்படிக் கதை போகிறது. கடைசியில் சட்டென்று படம் முடிந்து சப்பென்று போய் விடுகிறது. குடிகாரனாயிருந்த கிராமத்து டாக்டர் வாசு நல்லவனாக மாறி, பொறுப்போடு பணியாற்றத் தொடங்கியபோது, அவனை நல் வழிப்படுத்திய டாக்டர் ஆனந்த் குடிகேடனாகவும், பேராசைக்காரனாகவும் ஆகிவிடுகிறான். (கதை என்னத்தைச் சொல்ல வருகிறதென்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம்!)

ஏ. எல். நாராயணனின் வசனம்தான் படத்துக்கு உயிர் ஊட்டுகிறது. தொய்ந்து போன கதைக்கு நல்ல மிடுக்கான வசனம். டைரக்ஷன், ஒளிப்பதிவு ஆகியவை பற்றிச் சொல்லும்படியாக எதுவும் இல்லை.

கிராமத்து டாக்டர் வாசுவாக வரும் எம். ஆர். ஆர். வாசுவின் நடிப்பு நன்றாயிருக்கிறது. நல்லவனாக மாறியபிறகு அமைதியாக நடிக்கிறார்.

கதாநாயகி லக்ஷ்மியாக வரும் சுபா சுகம், துக்கம் இரண்டு கட்டங்களிலும் சிறப்பாக நடித்துப் பெயரை நிலைநிறுத்திக் கொள்கிறார்.

கதாநாயகனின் பாத்திரப் படைப்பில் கவனம் செலுத்தப்படவில்லையாதலால், பொருளற்றதாகப் போய்விட்டது. அப்பாத்திரத்தின் திடீர் மாற்றத்துக்குச் சரியானபடி நியாயம் கற்பிக்கப்படவில்லை. பாவம், ஏவி. எம். ராஜன்! அவர் என்ன செய்வார்? பாண்டத்தின் வடிவில்தானே நீர் இருக்க முடியும்? அது இருக்கட்டும். அவர் குரல் ஏன் கிணற்றிலிருந்து பேசுவதுபோல் கேட்கிறது?


தங்கவேலு, மேஜர் சுந்தரராஜன், மனோரமா, எம். என். ராஜம் எல்லோரும் நடித்திருக்கின்றனர். ஆனால் என்ன பயன்? யாரையும் நினைவில் வைத்துக் கொள்ள முடியவில்லையே!

பணக்கார வீட்டுப் பெண்ணாக வந்து டாக்டர் ஆனந்தை விரும்பும் விதுபாலா (கதையோடு ஒட்டவில்லையானாலும்) தம் நடிப்பின் சிறப்பினால் சோபிக்க முயல்கிறார்.

செத்துப் பிறந்தது படத்தில் வரும் குழந்தை மட்டுமல்ல, படத்துக்கே அந்தக் கதிதான்!

— காந்தன்

எனக்கொரு மகன் பிறப்பான்



பொன்னியின் புதல்வர்



சுந்தா

5. ஆகஸ்டு புரட்சி

முடிவில்லா ஐயத்தாலும்
முடியாத முடக்கத்தாலும்
வெடித்தது அமைதிக் காப்பு
விடுதலைத் தாபம் முற்றி

"முதல் இரண்டு வருஷத்தில் 'கல்கி' பலமான வாதப் புயல்களில் பல முறை இறங்க வேண்டியிருந்தது" என்பதாக மூன்றும் ஆண்டுத் தொடக்க இதழில் அதன் ஆசிரியர் கூறினர். அதையே விரித்தும் விளக்கியும் நாலாவது ஆண்டு ஆரம்ப இதழில் அவர் சொன்னர்:

சென்ற மூன்று வருஷத்திலும் உங்கள் 'கல்கி' தீவிரமான விவாதங்களில் தலையிடும் படி நேர்ந்தது. ஒவ்வொரு விவாதத்திலும் பொதுநலம் ஒன்றையே கருதி, நாம் அறிந்த உண்மையை வெளியிட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடனேயே தலையிட்டோம். தமிழ் மக்கள் நம்மிடம் வைத்துள்ள பேரன்பை இழந்து, பத்திரிகையே வீழ்ந்து விடலாம் என்று தோன்றிய சமயங்களிலும், பெரிய இடத்து விரோதங்களை யெல்லாம் பொருட்படுத்தாமலும், நாம் கண்ட உண்மையை வற்புறுத்தி வந்திருக்கிறோம். அவ்விதம் நாம் தலையிட்ட விவாதம் ஒவ்வொன்றிலும் நமது கட்சியே சரியானது என்று பின்னல் தெரிய வந்திருக்கிறது.

இதன் தொடர்ச்சியில், தேசத்தில் பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்ட கொள்கைக்கு மாறாகத் தாம் எழுதிய சந்தர்ப்பங்களைக் கல்கி குறிப்பிட்டார். அவ்வித சந்தர்ப்பங்களில் முக்கியமானது 1942 ஆகஸ்டில் நிகழ்ந்த வன்முறைப் புரட்சி.

அந்த ஆகஸ்டுப் போராட்டத்தைப் பேச்சின் மூலம் ராஜாஜியும், எழுத்தின் மூலம் கல்கியும் கண்டித்தார்கள் என்பது உண்மையே. ஆனல் அவர்கள் கண்டித்தார்கள் என்பதை மட்டும் அல்லாமல், ஏன் கண்டித்தார்கள் என்பதையும் நினைத்துப் பார்க்க வேண்டும். அத்துடன், அந்தப் புரட்சியை மட்டும் அல்லாமல், அதற்குக் காரணமாய் இருந்த ஆட்சியாளர்களின் பிசகுகளையும் அவர்கள் கண்டித்தார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கல்கி எப்படி அந்த இரு திசைக் கண்டனத்தை வெளியிட்டார் என்பதைக் கவனிப்போம்.

அந்த ஆண்டு மத்தி வாக்கில், மகாத்மா காந்தி, "க்விட் இண்டியா" அதாவது, "இந்தியாவை விட்டு வெளியேறு" என்று பிரிட்டிஷ் ஆட்சியாளரை நோக்கி ஒரு கோரிக்கை விடுத்தார். அந்தக் கோரிக்கை ஓர் ஆவேச கோஷமாக நாடு முழுவதிலும் பரவி, மக்களின் நெஞ்சிலும், நாவிலும் ஒலித்தது.

அந்தக் கோஷத்துக்குக் காந்திஜி பின்னர் ஒரு விளக்கம் கொடுத்தார். அதாவது, தாம் வெளியேறச் சொல்வது பிரிட்டிஷ் சிவில் ஆட்சியை மட்டுந்தான்; இந்தியர்களிடம் அதை முழுதுமாய் ஒப்படைக்க வேண்டும் என்பது தான் அவருடைய கோரிக்கை. இந்தியாவின் எல்லையில் பதி போட்டுக்கொண்டிருந்த ஜப்பானியரை எதிர்ப்பதற்காக பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகள் தங்கியிருக்கலாம்.

இந்த விளக்கத்துடன் கூடிய மகாத்மாவின் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு, காங்கிரஸின் வெவ்வேறு கட்டத்துக் கூட்டங்களில் ஆலோசனை நடந்து. இறுதியில், ஆகஸ்டு 8ந்தேதியன்று பம்பாயில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ்

○ ஆகஸ்டில் நடந்த வன் முறைச் செயல்களை ராஜாஜியும் கல்கியும் கண்டித்த போதிலும் அவற்றில் ஈடுபட்டதால் தண்டனை அடைந்த காசிராஜன், ராஜகோபாலன் ஆகியோருக்கு உதவி செய்தார்கள்.



கமிட்டியில் ஒரு தீர்மானம் நிறைவேறியது. அந்தத் தீர்மானம் என்ன என்பதைத் தெளிவாய் எடுத்துச் சொல்லியும், அது நிறைவேறியதைத் தொடர்ந்து என்னென்ன விபரீதங்கள் நேர்ந்தன என்பதைக் கோவையாய்த் தெரிவித்தும், 14ந் தேதிய துணைக் கல்கியில் அதன் ஆசிரியர் எழுதினர்:

... கடைசியாக, பிரிட்டிஷார் மின்னல் தாக்குதல் முறையைக் கையாண்டே விட்டார்கள். ஜெர்மனியையும் ஜப்பானையும் எதிர்த்து அல்ல; இந்தியக் காங்கிரஸ் மகா சபையை எதிர்த்துத்தான். பம்பாயில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் முடிந்த அன்றிரவே, இந்தச் சர்க்கார் தங்கள் மின்னல் தாக்குதல் அறிக்கையை வெளியிட்டு விட்டார்கள்.

மறுநாள் அதிகாலையிலேயே பம்பாயில் மகாத்மா காந்தியும் மற்றக் காங்கிரஸ் காரியக் கமிட்டித் தலைவர்களும் கைது செய்யப்பட்டு வெவ்வேறு இடங்களுக்கு அழைத்துப் போகப்பட்டனர். பம்பாயிலிருந்து திரும்பிய அ. இ. கா. கமிட்டி அங்கத்தினர்கள் அவரவர் ஊர் போய்ச் சேர்ந்ததும் கைது செய்யப்பட்டார்கள் ...

மகாத்மாவையும் மற்றத் தலைவர்களையும் கைது செய்ததிலிருந்து நாடெங்கும் ஏற்பட்டிருக்கும் விபரீதங்களைப் பற்றிய செய்திகளைத் தினசரிப் பத்திரிகைகளில் படித்து வருகிறோம். வடநாட்டில், பம்பாய், பூனா, ஆமதாபாத், நாஸிக், பாட்னா, டில்லி, கான்பூர் முதலிய பல இடங்களிலும், தென்னாட்டில் மதுரையிலும் இராஜபாளையத்திலும் போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டி நேரிட்டிருக்கிறது. தடை உத்தரவுகள், தடியடி உற்சவங்கள் முதலிய நடவடிக்கைகளைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை. பம்பாயில் ராணுவத்தைக் கூப்பிட வேண்டிய அவசியமும், சவுக்கடிச் சட்டம் கொண்டு வர வேண்டிய அவசியமும்கூட ஏற்பட்டிருக்கின்றன ....

அ. இ. கா. கமிட்டியில் நிறைவேறிய தீர்மானத்தின் மேல், அதன் காரணமாக, இந்திய சர்க்கார் மேற்படி மின்னல் நடவடிக்கைகளை ஆரம்பித்தார்கள். அப்படி அந்தத் தீரமானத்தில் என்னதான் இருக்கிறது? — சற்று யோசிக்கலாம்.

''இந்தியாவின் பூரண ஆட்சிப் பொறுப்பையும் இந்தியர்களிடம் உடனே ஒப்புவித்து விட வேண்டும்'' என்று அத்தீர்மானம் கேட்கிறது.

இதில் ஒன்றும் தவறில்லையே? ''யுத்தம் முடிந்ததும் இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் கொடுத்து விடுகிறோம்'' என்று ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் மூலம் பிரிட்டிஷ் சர்க்காரே வாக்களித்தார்கள். ''யுத்தம் முடிந்ததும் செய்வதாய் நீங்களே சொல்லியிருப்பதை இப் இப்போதேசெய்யுங்கள்''என்றுதான் பம்பாய் தீர்மானம் கேட்கிறது — இது ஒரு குற்றமாகுமா?

மேலும், காங்கிரஸ், ''உடனே ஆட்சியை ஒப்புவியுங்கள்'' என்று கேட்கிறபோது, என்ன நோக்கத்துடன் கேட்கிறது என்பதையும் பார்க்க வேண்டும் அல்லவா? இதைத்தான் தீர்மானத்தின் இரண்டாவது பகுதியில் பார்க்கிறோம்.

''இந்தியாவில் சுதந்திர ஆட்சி ஏற்பட்டால், ஐக்கிய நாடுகளுடன் தோளோடு தோள் நின்று ஜப்பானையும் ஜெர்மனியையும் எதிர்த்துச் சகல விதங்களிலும் போராடத் தயார்'' என்று பம்பாய்த் தீர்மானம் அழுத்தமாய்ச் சொல்கிறது ...

ஐக்கிய நாடுகளுக்கு எவ்வளவு சாதகமான தீர்மானம் இது என்பதை இந்திய சர்க்கார் கவனித்தார்களா? இல்லை! அவர்கள் கவனித்ததெல்லாம் தீர்மானத்தின் கடைசிப் பகுதியைத்தான்.

''காங்கிரஸ் கோரிக்கைக்கு பிரிட்டிஷ் சர்க்கார் இணங்கா விட்டால் மகாத்மாவைப் பொதுஜன இயக்கத்தை ஆரம்பிக்கும்படி



○ ''..... மனப்பக்குவம் பெருத காரணத்தால் நான் காங்கிரஸ்காரர்களை வன்முறையில் ஈடுபடுத்தும் ஒரு இரகசியச் சுற்றறிக்கையை மூன்று மாவட்டங்களின் செயலாளர்களுக்குக் கொடுத்துவிட்டு வர இசைந்தேன்.....''

○ அரசியல் சிந்தனையாளர் என்ற முறையில் ஆகஸ்டு போராட்டத்தைக் கண்டித்த கல்கி, கதாசிரியர் என்ற முறையில் ஆகஸ்டு வீரனுக் கதாநாயகன் குமாரலிங்கத்தை அறிமுகப்படுத்தினர்.



கேட்டுக் கொள்கிறது'' என்று தீர்மானம் கடைசியாகக் கூறுகிறது.

தீர்மானத்தின் இக் கடைசிப் பகுதியை மட்டும்தான் இந்திய சர்க்கார் கவனித்திருக்கிறார்கள். இதை ஆதாரமாய் வைத்துக் கொண்டுதான் மின்னல் நடவடிக்கை ஆரம்பித்திருக்கிறார்கள் ...

இது வெளியானதற்கு நாலு நாட்களுக்குப் பிறகு (இந்தியா மந்திரி) ''அமெரி இட்ட தீ'' என்ற மகுடம் கொண்ட தலையங்கம் ஒன்று, 20ம் தேதிய பிரதான கல்கியில் வந்தது:

... ஆங்காங்கு ஜனங்கள் வெறி கொண்டவர்கள் போல் காரியம் செய்து வருகிறார்கள். தந்திக் கம்பிகள், டெலிபோன் கம்பிகள் அறுக்கப்படுகின்றன; ரயில் தண்டவாளங்கள் அகற்றப்படுகின்றன; ரயில் ஸ்டேஷன்களிலும் தபால் ஆபீஸ்களிலும் தீ வைக்கப்படுகிறது. ரயில் வண்டிகளும் சில இடங்களில் தீக்கிரையாக்கப்படுகின்றன.

இம்மாதிரி காரியங்களைத் தடுப்பதற்கும் அடக்குவதற்கும் சர்க்கார் அதிகாரிகள் ஆங்காங்கு வெகு திறமையான நடவடிக்கைகளைக் கையாளுகிறார்கள். எச்சரிக்கை, பிறகு தடியடி, பிறகு புகையடி, பின்னர் துப்பாக்கிப் பிரயோகம் – இவ்விதமாய்ப் படிப்படியாய் நடவடிக்கைகள் நடந்து வருகின்றன.

இன்னும் சில இடங்களில் வெறி கொண்ட ஜனக் கூட்டங்கள் கடைகளையும், தனிப்பட்டவர்களின் வீடுகளையும் கூடக் கொள்ளை அடித்திருக்கின்றன.

இதெல்லாம், நாட்டின் நிலைமையில் கவலையுள்ள எல்லாருடைய உள்ளத்தையும் புண்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை. சாதாரண காலத்திலேயே ஒரு தேசத்தில் இம்மாதிரி சம்பவங்கள் நடப்பது வருந்தத் தக்கதாகும். எல்லைப்புறத்தில் பலங் கொண்ட எதிரி வந்து நிற்கும் இச் சமயத்திலோ கேட்க வேண்டியதில்லை ...

(பம்பாயில்) தலைவர்களை அவசரமாகக் கைது செய்த அன்றைக்கே கர்னல் அமெரி அவசரமாக ஒரு ரேடியோப் பிரசங்கத்தைச் செய்தார். அதில் காங்கிரஸ் தலைவர்கள் இன்ன காரியத் திட்டம் போட்டிருந்தார்கள் என்பதை விவரமாகவும், விஸ்தாரமாகவும், வித்தியாசத்துடனும் எடுத்துச் சொல்லி இருக்கிறார் –

''கைத்தொழில்களிலும் வியாபாரங்களிலும் தொழிலாளர் வேலைநிறுத்தம், சர்க்கார் நிர்வாகத்திலும் பள்ளிக்கூடங்களிலும் வேலை நிறுத்தம், போக்குவரவு சாதனங்களைத் தடை செய்தல், தந்திக் கம்பிகளையும் டெலிபோன் கம்பிகளையும் அறுத்தல், துருப்புக்களையும் துருப்புக்கள் சேர்க்கும் இடங்களையும் மறியல் செய்தல் – இவை யெல்லாம் அடங்கியது காங்கிரஸ் திட்டம்'' என்று மாகானுபாவன் அமெரி தெரிவித்த விஷயம் இந்தியாவில் சகல பத்திரிகைகளிலும் மறுநாளே வெளியாயிற்று ...

கர்னல் அமெரி வெளியிட்டதுதான் காங்கிரஸ் தலைவர்கள் போட்டிருந்த வேலைத்திட்டம் என்று நாம் நம்புவதற்குத் தயாரில்லை. மகாத்மா காந்திஜி இரகசியத் திட்டம் ஒன்றும் உதவாது என்று இரண்டு வாரங்களுக்கு முன்புகூட ''ஹரிஜன்'' பத்திரிகையில் எழுதி இருந்தார். பண்டித ஜவாஹர்லால் நேரு, ''யுத்த முயற்சிக்குத் தடை செய்யக் கூடிய காரியம் எதையும் நாங்கள் செய்ய மாட்டோம்'' என்று ஒரு தடவைக்குப் பத்துத் தடவையாகச் சொல்லி யிருக்கிறார்.

அமெரி வெளியிட்டிருக்கும் திட்டத்தில் சில அம்சங்கள் யுத்த முயற்சிக்குத் தடை செய்யக் கூடியவை. இரகசியமாகத்தான் நிறைவேற்றக் கூடியவை. இப்பேர்ப்பட்ட திட்டத்தை மகாத்மாவும் மற்றக் காங்கிரஸ் தலைவர்களும் போட்டிருப்பார்கள் என்று நாம் எப்படி நம்புவது?

அப்படியே அவர்கள் இத்தகைய திட்டத்தைப் போட்டிருந்த போதிலும், அந்த இரகசிய வேலைத் திட்டத்தை அமெரி எதற்காக அவ்வளவு அவசரமாக வெளிப்படுத்தினார்? இந்திய ஜனங்கள் திட்டம் இல்லாமல் தவிக்கப் போகிறார்களே என்பதற்காகவா? அல்லது ஜனங்களுடைய காங்கிரஸ் பக்தியைச் சோதிப்பதற்காகவா?

மறுபடியும், அடுத்த மாதம் முதல் தேதிய கல்கி இதழில்:

யாருக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும், உண்மை என்று நாம் நிச்சயமாக அறிந்ததைச் சொல்லியே தீர வேண்டும். தந்திக் கம்பியை அறுத்தல், தண்டவாளத்தைப் பெயர்த்தல் முதலிய காரியங்களினால் இந்தியா ஒருநாளும் சுதந்திரம் அடையாது. பலாத்காரம் என்று ஏற்படும்போது, கட்டுப்பாடில்லாத ஜனங்களின் பலாத்காரமானது, கட்டுப்பாட்டுடன் அமைந்த சர்க்காரின் பலாத்காரத்தின் முன்னால் தோல்வி அடைந்தே தீரும்....

தற்சமயம் இந்தியாவில் நடக்கும் அல்லோல கல்லோலத்தைக் ஜப்பான்காரன் எட்டிப் பார்த்து நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு மகிழ்கிறான் என்பதில் சந்தேகமில்லை. அவனுடைய சௌகரியத்துக்காகவே நடப்பது போல்தான் இப்போது இந்தியாவில் காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

தேசம் நெடுகிலும் நடந்த புரட்சி, மாபெரும் அளவிலான உயிர்ச் சேதம், பொருட் சேதத்துடனும், பல்லாயிரக் கணக்கான பேர்களின் சிறைவாசத் தவிப்புடனும் ஒருவாறு ஓய்ந்தது.

ஆகஸ்டு பத்தாம் தேதியன்று திடீரெனச் சிறைப்பட்ட காந்திஜி, என்ன குற்றத்துக்காக தமக்கு அந்தத் தண்டனை என்பதை அறிந்தும் அதை மறுப்பதற்கு உரிமை கோரினார். நாட்



''சாண்அகல சரிகைக்கரை போட்ட வேஷ்டி, புதிசெல்லாம் வாங்கிக் கொடுத்தும் ஏன் இப்படி மாப்பிள்ளை மூஞ்சியைத் தூக்கி வைச்சிண்டிருக்கார்?''
''தீபாவளி அன்று கோவிச்சுக்கிறதுக்கு, சான்சே கொடுக்கல்லேன்னு அவருக்கு ரொம்பக் கோபம்.''
- நிர்மல்


"இப்போது எனக்கு
மிகப்பிடித்த
லக்ஸினுள்
மெய்மறக்கும் ஒரு
புதிய நறுமணம்
அடங்கியுள்ளது!"
என்கிறார் மஞ்சுளா
மனமகிழ்ச்சியூட்டும் புதிய நறுமணம் அடங்கிய மென்மையான லக்ஸை நீங்களும் விரும்புவீர்கள். அது சுத்தமானது. மிருதுவானது. உங்கள் மேனியை வழவழப்பாகவும் வனப்புடனும் வைக்கிறது—ஆம் மஞ்சுளாவைப் போன்றே.
LUX
PINK
லக்ஸ் சினிமா நடிகையரின் பரிசுத்தமான, மென்மை தரும் சோப்பு
இந்துஸ்தான் லீவரின் நயமான தயாரிப்பு
HT-HLL-8495

புதிய அனுபவம், பேரானந்தம்





ADROIT/925

செஞ்சுரி
பருத்தித் துணிகள்


செஞ்சுரி -100% பருத்தித் துணிகள்

தி செஞ்சுரி ஸ்பின். அண்டு மான்யு.
கம். லிமிடெட், பம்பாய்-400 025

ஒருத்தி: ஏண்டி உனக்குப் ''பாமா''ன்னு பேர் வைச்சாங்க?''

மற்றொருத்தி: எங்க அப்பா ஒரு பெயரையும் எங்கம்மா ஒரு பெயரையும் வைக்கணும்னு கூறிச் சண்டை போட்டாங்களாம். பிறகு அப்பாங்கிறதிலே உள்ள 'பா'வையும் அம்மாங்கிறதுலே உள்ள 'மா'வையும் சேர்த்துப் ''பாமா''ன்னு வைச்சுட்டாங்களாம்!

- ஆண்டாள்



டில் நடந்து கொண்டிருந்த வன்முறைச் செயல்களுக்குத் தாமோ காங்கிரஸோ பொறுப்பல்ல என்பதை நிரூபிப்பதற்குத் தமக்கு வாய்ப்பு அளிக்கும்படி, அதற்கெனத் தம்மை விடுதலை செய்யும்படி வைஸ்ராய்க்கு விண்ணப்பித்துக் கொண்டார். அதற்கு வைஸ்ராய் இணங்காததைக் கண்ட மகாத்மா தமது கோரிக்கையை வற்புறுத்துவதற்காக, பிப்ரவரி மாத மத்தியில், இருபத்தொரு நாள் உண்ணா நோன்பு ஒன்றை மேற்கொண்டார். அதைப் பொருட்படுத்தாமலும், அவர் உயிரிழந்தால் தேசத்தில் மீண்டும் நேரக் கூடிய கொந்தளிப்பை எண்ணிப் பாராமலும், அவரை அரசாங்கம் விடுதலை செய்ய மறுத்தது. நல்ல வேளையாய் நோன்பு நாட்கள் முழுவதையும் மகாத்மா கடந்து உயிர் பிழைத்தார்.

''இந்தத் துர்ப்பாக்கிய தேசத்தின்மீது பகவான் இன்னும் சிறிது கருணை வைத்திருக்கிறார் என்றே தெரிகிறது; கடவுளின் கருணையினாலும், நமது முன்னோர்களின் தவப் பயனாலும் மகாத்மா காந்தி உயிர் பிழைத்தார்'' என்று தலையங்கம் ஒன்றில் கல்கி எழுதினார். அதிலேயே ''தந்தியறுத்தல் முதலிய பலாத்காரச் செயல்கள் காங்கிரஸ் திட்டம் அல்ல என்றும், மகாத்மா காந்தி அச்செயல்களை விரும்ப மாட்டார் என்றும் நமது தலைவர் ராஜாஜி அப்போதே எடுத்துக் கூறினார்'' என்பதையும் அவர் நினைவூட்டினார்.

கல்கியும் அவ்விதமே பிரசாரம் செய்தார் என்பது, அந்த வாக்கியத்தில் தொக்கி நிற்கிறது. அவர்கள் இருவரும் அந்தக் கருத்தைப் பிரசாரம் செய்தபோது, எவ்வளவோ நிந்தைக்கு இலக்கானார்கள். அவர்களுக்குத் தேச பக்தியே கிடையாது என்றுகூடச் சிலர் பழித்துச் சொன்னார்கள்.

மகாத்மாவைச் சத்தியசீலராகப் போற்றும் நன்மக்கள் யாவரும், ''நிரூபிக்கிறேன்'' என்று அவர் சொன்னதையே நிரூபணமாகக் கொண்டார்கள். அவரைப் பொறுத்த வரை அந்த வன்முறைத் திட்டத்தில் அவருக்குச் சம்பந்தம் இல்லைதான். ஆனாலும், அவருக்குத் தெரியாமலே சில காங்கிரஸ் தலைவர்களோ, அல்லது ஜப்பானுக்கு ஆதரவாய் இருந்த ஐந்தாம் படைக்காரர்களோ, காங்கிரஸின் பெயரால், வன்முறைத் திட்டச் சுற்றறிக்கை ஒன்றை வரைந்து, அந்த ஆகஸ்டு மாதத்தில் தேசம் நெடுகிலும் பரப்பினார்கள் என்பது உண்மையே.

அந்தச் சுற்றறிக்கையை, ''எனது போராட்டம்'' என்ற தமது சுய வரலாற்று நூலில் ம. பொ. சிவஞானம் குறிப்பிட்டுள்ளார். அதைக் கண்டபோது தம் மனத்தில் சந்தேகம் எழுந்தது பற்றியும், கடமை காரணமாக அதைத் தாம் விநியோகிக்க நேர்ந்தது பற்றியும் உண்மையுடன் எழுதியிருக்கிறார் அவர்:

காந்தி அடிகள் இட்டமிட்ட விடுதலைக் கிளர்ச்சியைத் தொடங்குவதற்கு, அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவைப் பெற அந்தக் கமிட்டி 8–8–42-ல் பம்பாயில் கூட இருந்தது. ஆனால், அதற்கு முன்பே, விடுதலைப் புரட்சியை நடத்துவதற்கான வேலைத் திட்டம், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பெயரால், மாநில, மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகளுக்கு அனுப்பப்பட்டு விட்டது. அந்தத் திட்டம் பற்றிய சுற்றறிக்கை இரகசிய தஸ்தாவேஜாகவே கருதப்பட்டது.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. காமராசர் அவர்களிடமிருந்து, சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டிச் செயலாளன் என்ற முறையில் எனக்கு அந்த வேலைத்திட்டம் கிடைத்தது. பொது மக்களுக்கு உயிர்ச்சேதம் ஏற்படுவதற்கு இடமளிக்காத வகையில் ரயில் தண்டவாளத்தைப் பெயர்க்கும் அம்சமும் அந்த வேலைத் திட்டத்தில் இருந்தது. அதனைப் பார்த்தபோது நான் வியப்பும் திகைப்பும் அடைந்தேன். அஹிம்சையின் வடிவமான காந்தியடிகள் பலாத்காரத்துக்கு வழிவிடும் இந்த வேலைத் திட்டத்தைத் தயாரித்திருப்பாரா என்ற ஐயம் என் மனத்துள் எழுந்தது. ஆயினும், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரிடமிருந்து கிடைத்த வேலைத் திட்டமாதலால், 'ஏன்?' என்றும், 'எதற்கு' என்றும் கேட்காமல் ஏற்றுக் கொண்டேன்.

திரு காமராசர் வேறொரு பணியையும் என்னிடம் ஒப்புவித்தார். ஆம்; அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் பெயரால் தமக்கு அனுப்பப்பட்ட இரகசியச் சுற்றறிக்கையை, வடார்க்காடு, சேலம், மதுரை ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வரும் வேலையை என்னிடம் ஒப்புவித்தார். நானும் ஏற்றுக் கொண்டேன்.

என்னிடம் தரப்பட்ட இரகசியச் சுற்றறிக்கை ஆங்கிலத்தில்தான் இருந்தது. அதனைப் படித்துப் புரிந்து கொள்ள என்னால் முடிந்தது. ஆனால், அறிக்கையின் பின்விளைவு எதுவாக இருக்குமென்று தெரிந்து கொள்ளும் அளவுக்கு நான் மனப் பக்குவம் பெற்றி

ருக்கவில்லை என்பதை இங்கு ஒளிவு மறைவின்றிச் சொல்லியாக வேண்டும். அதனுற்ருன், காங்கிரஸ்காரர்களை வன்முறையில் ஈடுபடுத்தும் ஓர் இரகசியச் சுற்றிறக்கையை மூன்று மாவட்டங்களின் செயலாளர்களுக்குக் கொடுத்து விட்டு வர நான் இசைந்தேன்.

(பக். 208—9)

சுற்றறிக்கையை விநியோகித்தது மட்டும்தான் ம. பொ. சி. செய்த பணி; அதில் கண்டிருந்த காரியங்களில் எதையும் செய்யவில்லை. செய்ய மனமும் இருந்திராது. ஆயினும், அந்த அறிக்கையின் ஆணைப்படி, அவர் தாமாகச் சிறைப்படுவதைத் தவிர்த்து, தலைமறைவாய் இருந்து கொண்டார். அப்படி இருக்கையில் கைது செய்யப்பட்டார்.

ம. பொ. சியைப் போல், ஒரு பக்கம் மனச்சாட்சியுடன் போராடிக் கொண்டே, இன்னொரு பக்கம் ஆகஸ்டு போராட்டத்தில் ஈடுபட்டோர் எத்தனையோ பேர் உண்டு. காங்கிரஸ் மேலாவே கட்டளை இட்டுவிட்டதே என்ற நினைப்பில், மனம் ஒப்பியே வன்முறைச் செயல்களில் ஈடுபட்டோரும் பலர் உண்டு.

ஓர் அரசியல் சிந்தனையாளர் என்ற முறையில் நாம் ஏற்கனவே அறிந்தபடி அந்த ஆகஸ்டுப் போராட்டத்தைக் கல்கி கண்டித்து எழுதினர். ஆனால், ஒரு கதாசிரியர் என்ற முறையிலோ, ஆகஸ்டு வீரர்களுக்கும் தியாகிகளுக்கும் தமது இலக்கியப் படைப்புக்களில் சிறப்பான இடம் கொடுத்தார். அவர்களில் ஒருவனைச் ''சோலைமலை இளவரசி'' நாவலில் கல்கி அறிமுகப் படுத்துகிறார் :

சில காலமாகவே இந்திய மக்களின் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த கோபாக்கினி மலை, 1942 ஆகஸ்டில் படீரென்று வெடித்தது. புரட்சித் தீ தேசமெங்கும் அதிவேகமாய்ப் பரவியது. அந்தப் புரட்சித் தீயை நாடெங்கும் பரப்புவதற்குக் கருவியாக ஏற்பட்ட தேசபக்த வீரத் தியாகிகளில் நமது கதாநாயகன் குமாரமங்கலமும் ஒருவன்...

வெகு காலமாகவே தேசபக்தியும் தேச சுதந்திரத்தில் ஆர்வமும் கொண்டிருந்தவன். அந்த ஆர்வத்தைக் காரியத்திலே காட்டுவதற்குத் தக்க சந்தர்ப்பத்தைத்தான் எதிர் நோக்கிக் கொண்டிருந்தான்....

உலகம் எங்கும் அந்தச் சமயம் நடந்து கொண்டிருந்த சம்பவங்களும், தேசத்தில் நிகழ்ந்து கொண்டிருந்த காரியங்களும், அவனுடைய நவ யௌவன தேகத்தில் ஓடிக் கொண்டிருந்த சுத்த இரத்தத்தைக் கொதிக்கும்படி செய்திருந்தன. தேச விடுதலைக்காக ஏதேனும் செய்தே ஆக வேண்டும் என்று அவனுடைய நரம்புகள் துடித்துக் கொண்டிருந்தன.

அவ்விதமான வெறி கொண்ட நிலையில் குமாரலிங்கம் இருக்கையில், வடநாட்டுப் புரட்சித் தலைவர் ஒருவர், பலாத்காரச் செயல் திட்டம் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை அவனிடம் கொடுக்கிறார். அவருடைய கட்டளைப் படி அவற்றை அவன் பாண்டியநாட்டு ஊர்களில், தன்னைப் போன்ற தேச பக்தர்களிடம் சேர்ப்பித்து, அவர்களைச் செயலாற்றத் தூண்டுகிறான். தளவாய்ப் பட்டணம் என்ற மலையடி ஊரை அவன் அடைந்தபோது, தன்னைக் கைது செய்வதற்காகச் சென்னையிலிருந்து உத்தரவு வந்திருப்பதை அறிகிறான். பிடிபடுவதற்கு முன்னால் புரட்சித் திட்டத்தைப் பிரசாரம் செய்ய எண்ணி, பொதுக் கூட்டம் ஒன்றில் ஆவேசமாய்ப் பேசுகிறான். ''பாரதத் தாயின் அடிமை விலங்கைத் தகர்க்கும் காலம் வந்து விட்டது'' என்று தொடங்கி, ''தாலூகாக் கச்சேரியையும், கஜானாவையும் கைப் பற்றுங்கள், தந்திக் கம்பிகளை வெட்டுங்கள், தண்டவாளங்களைப் பெயர்த்து எறியுங்கள்'' என்று தூண்டுகிறான்.


அவனைக் கைது செய்வதற்காக வரும் போலீஸ்காரர்களை ஜனங்கள் துரத்துகிறார்கள். அதைத் தொடர்ந்து பெரிதாக அடிதடிக் கலகம் மூண்டு விடுகிறது. இரண்டு போலீஸ்காரர்களை ஜனங்கள் அடித்துக் கொல்லுகிறார்கள், பின்னர், உயர் போலீஸ் அதிகாரிகள், கூடுதலான ஜவான்களுடன் வருவதைக் கண்டு கலைந்து ஓடுகிறார்கள்.

குமாரலிங்கமும் ஓடுகிறான்; ஊருக்கு வெளியே ரயில் பாதையின் பக்கமாய் ஓடுகிறான். துணிச்சலுடன் ஏதேனும் செய்ய நினைத்து, நள்ளிரவில், ஒரு தண்டவாளத்தைக் கழற்றிப் பெயர்த்து விட்டு, புதர் ஒன்றில் ஒளிந்து கொள்கிறான். வேகமாய் ஒரு ரயில் வருகிறது. நெஞ்சு அடித்துக் கொள்ள, உடம்பு வியர்க்க, அவன் ரயில் கவிழப் போவதை எதிர்நோக்கியிருக்கிறான்.

ஆனால் விபத்து நேரவில்லை. தண்டவாளம் பெயர்ந்திருப்பதை ''ஸர்ச்லைட்' வெளிச்சத்தில் எஞ்சின் ஆட்கள் கண்டு, வண்டியை நிறுத்திவிடுகிறார்கள். பெயர்ந்த தண்டவாளத்தைப் பொருத்துகிறார்கள். மீண்டும் ரயில் புறப்பட்டு ஓடுகிறது.

அதைக் கண்டு குமாரலிங்கம் ஏமாற்றம் அடைகிறானா? இல்லை. வரிசை

இயற்கை உங்களுக்கு அளித்துள்ளது எழில்மிகு கேசம்...
அதனை அவ்வண்ணமே வைத்திருப்பீர்
ஹேலோ கேச பராமரிப்புமூலம்



HSR.G.I.TH

ஹேலோ ஷாம்பூக்கள் மட்டுமே சீரான, சிறந்த உத்தியின்படி தயாரிக்கப்படுகின்றன–உங்கள் கேசத்தின் பராமரிப்பிற்கெனவே

ஹேலோ காஸ்மெடிக் ஷாம்பூ:
இந்த விசேஷ ஷாம்பூவை உபயோகித்து, உங்கள் கேசம் எவ்வளவு மெத்தென்றும், மிருதுவாகவும் இருக்கக் கூடும் என்பதைக் கண்டு கொள்ளுங்கள்.

ஹேலோ எக் ஷாம்பூ:
விசேஷ போஷாக்கு மிக்க இந்த ஷாம்பூவில் உள்ள வளமிக்க முட்டைப் பதார்த்தின் பயனாக உங்கள் கேசம் கட்டுக்–கோப்புடன், கவர்ச்சியாகத் திகழ்கிறது.



ஹேலோ லெமன்–ஃப்ரெஷ் ஷாம்பூ:
உங்கள் கேசத்திற்கு இயற்கையான தூய்மையான பளபளப்பைத் தருகிறது.


ஹேலோ கான்ஸென்ட்ரேட் ஷாம்பூ:
ஏராளமான நுரையாக்கத்தின் மூலம் உங்கள் கேசத்தை மென்மையாகவும், கட்டுக்கடங்கியும் வைத்திருக்க சிறிதளவே போதும்.

இயற்கை ஆரோக்கியத்துடன் சவுடிய கேசத்திற்கு–இன்றே உபயோகிக்கத் தொடங்குவீர் ஹேலோ

தொண்டை
வலி மற்றும்
இருமலில்
இருந்து
உடனடி
நிவாரணம்

வொ
கா
ஸி
ல்

சதுரவடிவ,
பச்சை நிற
இருமல் மாத்திரை



உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்திற்கு வைட்டமின்களும் தாதுப் பொருள்களும் இன்றியமையாதவை



அவை போதுமான அளவில் கிடைக்கின்றனவா?

அவை கிடைக்கின்றன என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளத் தினம் குடும்பத்தினர்க்குத் தருவீர் விம்க்ரான். நாள் முழுதும் குடும்பத்தினர் சிறப்பாகச் செயல்பட, உடலுரத்துடன் உற்சாகம் பெற வைட்டமின்கள் மற்றும் தாதுப் பொருட்கள் அளிப்பன விம்க்ரான்!

விம்க்ரான்®

பல்வேறு வைட்டமின்-தாதுச் சத்து
மாத்திரைகள்
11 வைட்டமின்கள் + 8 தாதுப் பொருட்கள்

SQUIBB®
SARABHAI
CHEMICALS LTD.



® இ.ஆர். ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் இன்கார்ப்பரேடெட் அவர்களின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்காகும். எஸ்.ஸி.எல். இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.

ஒரே ஒரு விம்க்ரான் மாத்திரை
உங்களை நாள் முழுதும்
சக்தியுடன் வைத்திருக்கப் போதுமானது

யாய் விளக்குகள் மின்ன, ரயில் ஓடும் அழகைக் கண்டு மகிழ்கிறான்:

ரயில் வண்டித் தொடரில் கடைசி வண்டியும், தீப வரிசையில் கடைசித் தீபமும் மலை முடுக்கில் திரும்பி மறையும் வரையில், அவன் அந்தக் காட்சியை அடங்காத ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகுதான் அவனுக்குத் தன்னுடைய சுயநினைவு வந்தது. அவனுடைய மனத்தில் அதற்கு முன் என்றும் அநுபவித்தறியாத அமைதி அச்சமயம் குடி கொண்டிருந்தது. தான் செய்த காரியத்தினால் அந்த ரயில் வண்டித் தொடருக்கும் அதிலிருந்த நூற்றுக் கணக்கான ஆண் பெண் குழந்தைகளுக்கும், நல்லவேளையாக அபாயம் எதுவும் ஏற்படாமற் போனதில் அவனுக்கு அளவில்லாத திருப்தி உண்டாயிற்று.

அந்த ரயிலைப் போலவே கதையும் மேலே ஓடுகிறது. அதை நாம் தொடராமல் இங்கேயே நின்று கேள்வியொன்றைக் கேட்கலாம் —

கொடிய விபத்திலிருந்து ரயிலையும், கொடும் பாதகத்திலிருந்து கதாநாயகனையும் கல்கி தப்ப வைத்தது ஏன்?

ஆகஸ்டில் நிகழ்ந்த வன்முறைச் செயல்களை ராஜாஜியும் கல்கியும் கண்டித்த போதிலும், அவற்றில் ஈடுபட்டதால் தண்டனை அடைந்தவர்களில் சிலருக்கு வெவ்வேறு விதத்தில் உதவி செய்தார்கள். பெரிதாயும் பகிரங்கமாய்த் தெரிந்ததாயும் அவர்கள் செய்த உதவி ஒன்றை மட்டும் பார்ப்போம்.

திருநெல்வேலி குலசேகரப் பட்டணத்தில் நடந்த ஆகஸ்டுப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காகக் காசிராஜன், ராஜகோபாலன் ஆகிய இளைஞர்கள், தூக்கு தண்டனை விதிக்கப்பட்டார்கள். அவர்கள்பால் அனுதாபம் கொண்ட ராஜாஜி அந்தத் தண்டனையை மாற்றுவதற்காகப் பிரிவி கவுன்சில் அப்பீலுக்கு ஏற்பாடு செய்தார். அந்த அப்பீல் தள்ளுபடியான பின்பும் விடாமல், வைஸ்ராய்க்குக் கருணை மனு அனுப்பினார்; நேரிலும் சென்று அவரை இரக்கம் கொள்ளும்படி செய்தார். அந்த மனுவில் இணைப்பதற்கான மகஜரில், கல்கியும் சதாசிவமும் கோரியபடி ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் அவர்களுடைய பத்திரிகை ஏஜண்டுகள், ஆயிரக் கணக்கான கையொப்பங்களைத் திரட்டி அனுப்பினார்கள். டெல்லியில் ஆர். சக்கரவர்த்தி அரும் பணி செய்தார். ராஜாஜியின் தலைமையில் நடந்த அந்தப் பெரு முயற்சியின் பலனாய்க் காசிராஜனும் ராஜகோபாலனும், தூக்குத் தண்டனையிலிருந்து தப்பினார்கள்; பின்னர் விடுதலையும் அடைந்து வெளியே வந்தார்கள்.

அவர்கள் சேர்ந்து நிற்கும் படம் ஒன்றை, 1946 ஜூன் இரண்டாம் தேதிய தமது இதழில் கல்கி வெளியிட்டார்; அதன் விளக்கக் குறிப்பில் அவ்விரு இளைஞர்களையும் ''சுதந்திரப் போர் வீரர்கள்'' என்று வர்ணித்தார்.


(தொடரும்)



குமாரி லக்ஷ்மி இந்திரசேன் ஒடிஸ்ஸி நடனம் ஆடித் தமிழகத் தலைநகரில் ரசிகர்களின் உள்ளங் கவரக் கொள்ளை கொண்டார். அமைச்சர் நெடுஞ்செழியன் அவருக்குப் பரிசும் பாராட்டும் வழங்கினார்.

லூகாஸ் டி. வி. எஸ்., சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனங்களின் மானேஜிங் டைரக்டரான ஸ்ரீ ஆர். ரத்தினம் அவர்களுக்கு எர்ணாகுளம் டி. வி. எஸ். களமசேரி சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் ஊழியர்கள், ''தொழிலாளர் நண்பன்'' என்னும் சிறப்புக் கௌரவம் அளித்து வாழ்த்தினர்.

எர்ணாகுளம் டி. வி. எஸ். தொழிலாளர் யூனியன் தலைவர் திரு எஸ். பி. குமாரன் அனைத்துத் தொழிலாளர்கள் சார்பில் ஓர் அன்புப் பரிசைத் திரு ஆர். ரத்தினம் அவர்களுக்கு வழங்கினார்.



நான் வணங்கும் மனித தெய்வம் - 13

காலத்தை வென்றவர் கடமையில் நின்றவர்!



இன்றைக்குச் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் கடலூர் புனித ஜோஸப் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் பெரு மதிப்புக்குரிய ஃபாதர் பார்ஜூர் காலமானார் என்று செய்தி வந்தது. அந்தக் கல்லூரியுடன் அவர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். ஆதலால் அன்று விடுமுறை கிடைக்கும் என எண்ணினேன். ஆனால் எங்கள் தலைமைஆசிரியர், ''பாடங்களை விட்ட இடத்திலிருந்து தொடருங்கள். இதுதான் அன்னாருக்கு நாம் செலுத்தும் பேரஞ்சலியாகும்'' என்று கூறிச் சென்றுவிட்டார்.

நேரத்தைப் பொன்னாக மதித்த செம்மல் தலைமை ஆசிரியர் ஃபாதர் வெர்ஜூர்.

''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்னும் வள்ளுவர் வாக்குப்படி கட்டுப்பாடும், ஒழுக்கமும் முக்கியம் எனக் கருதி வந்தார்.

ரோமன் கத்தோலிக்கப் பாதிரியாராய் இருந்தும் ஃபாதர் வெர்ஜூர் அவர்கள் நமது ஹிந்து மதத்துக்குப் பெரு மதிப்புத் தந்து, பள்ளிக்கூட நேரம் அல்லாத பிற நேரங்களில் கிறிஸ்தவர்களுக்கு மட்டும் பைபிள் வகுப்புக்களை நடத்துவார். அதுபோன்றே பல மதங்களைச் சேர்ந்தமாணவர்கள் இருக்கும் வகுப்புக்களில் எம்மதத்தையும் தனித்துப் பேசாது. ''கடவுளை வணங்கு; பெற்றோர்களையும், ஆசிரியர்களையும், பெரியோர்களையும் போற்று; உண்மையே பேசு; ஏழை பணக்காரர் எல்லோருக்கும் ஒரேமாதிரியாக இருபத்தி நான்கு மணி நேரம்தான் கடவுள் அளித்திருக்கிறார். எனவே, ஆண்டவனுக்குப் பயந்து நட. கண நேரத்தையும் வீணடிக்காதே'' என்றே அவர் போதித்து வந்தார்.

1929-ஆம் ஆண்டு நான் 'லிப்கோ' புத்தகக் கம்பெனியை ரோமன் கத்தோலிக்கப் புனித மாதாவான ''லிட்டில் ப்ளவர்'' என்ற பெயரிலேயே தொடங்கி ஃபாதர் வெர்ஜூரிடம் நல்லாசி பெறச் சென்றேன்.

''Lifco! Safe you are by the holy Saint's name charm'd. Strive to spread the right-then sure you none can injure. So protected, storm and stress will leave you unharm'd. May you e'er grow! Thus bless you with love.

... I, Father Verdure

என எழுதி அளித்ததுடன், கீழ் வரும் உபதேச வார்த்தைகளையும் கூறி யருளினார்:

(1) வாடிக்கைக்காரர்களே உனது எஜமானர்கள். இதை மறக்காதே.

(2) உனது பணிகளில் ஒழுங்கு, மரியாதை, வேகம் இவைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

(3) கேட்பவருக்குச் சரக்கோ, பதிலோ அடுத்த தபாலிலேயே அனுப்பு.

(4) வாக்களிப்பதில் நிதானம் காட்டு. வாக்களித்து விட்டால் துரிதமாக நிறைவேற்று.

(5) லாபம் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாமல், உன்னால் இயன்ற அளவில் நீ வெளியிடும் நூல்கள் மூலம் மனித குலத்துக்குத் தொண்டு செய். உனக்கென்று விதிக்கப்பட்டுள்ளதற்கு மேல் ஒரு பைசா கூட அதிகமாக உன்னால் சம்பாதிக்க முடியாது. இதைக் கருத்தில் கொண்டு ''சேவை' செய்தால் அது உனக்கு ஆனந்தமளிக்கும். அதனால் கோடி புண்ணியமும் கிடைக்கும்.

(6) எல்லாவற்றுக்கும் மேலாக நான் சொல்வதைக் கவனி. கடன் வாங்காதே. அப்படி வியாபாரத்துக்காக ஒருகால் வாங்க நேரிட்டால், நீ திருப்பித் தருவதாகச் சொன்ன தேதிக்கு முன் குறைந்த பட்சம் ஒரு நாள் முன்னதாகவே, கடன் கொடுத்தவர் வீடு தேடிச் சென்று தொகையைத் திருப்பிக் கொடுத்துவிடு.

அராஜகம், அசத்தியம், லஞ்சம், விலை உயர்வு முதலியவை நாளுக்கு நாள் பெருகி வரும் இன்றையச் சூழ்நிலையிலும் நல் வழியிலேயே தொடர்ந்து நிற்கத் துணை புரிவது அன்று அவர் கூறிய அறிவுரைகளும் ஆசியுமே தான்.

— வி. கிருஷ்ணஸ்வாமி சர்மா

போட்டிக்கதை: 1

அறிமுக எழுத்தாளர்



மாதவி

திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ், தென்காசி நிலையத்திலிருந்து நெடுமூச்சுடன் புறப்பட்டது. மூன்றாவது மைலில் உள்ள டன்னல்—(குகை) கடக்கும்போது பழைய பிரயாணிகள் புதிய பிரயாணிகளுக்கு அந்த இடத்தின் முக்கியத்துவத்தை — அல்லது பயங்கரத்தை— விவரித்தனர்.

கரிய இருண்ட குகையினுள் இருப்புப் பாதையின் குறுக்கே சில நேரங்களில் பிரம்மாண்டமான யானைகள் படுத்துவிடும்..... எனவே, டன்னலில், ஓடி வரும்போது ரயில், ஒரு கர்ஜனை போன்ற பயங்கர விசில் ஒலி எழுப்பி அவற்றை விரட்டும்.

பிரயாணிகள் அனைவரும் யானையைப் பற்றிப் பேசும் போது சுவையாயிருந்தது.

''சார் ! இந்த யானை இருக்குதே, அதுக்கு ரொம்ப ஞாபக சக்தி இருக்குதாமே !..... அதோட பழிவாங்கற குணமும் உண்டாமே!''

இந்தச் சமயத்தில் பெட்டியின் வலது மூலையிலிருந்து 'ஆங்!' என்ற ராகத்துடன் ஒரு குரல் பிறந்தது.

ஒரு கச்சலான எலும்பு மனிதர். அரையில் முழங்கால் வரை ஒரு வேட்டி. உடலில்—முன் பக்கம் பை வைத்த பனியன், தலையில் அலட்சியமாகச் சுற்றப்பட்ட முண்டாசு. கைகளில் நரம்புகள் புடைத்து முறுக்கேறி அவர் ஒரு வைரம் பாய்ந்த கட்டை என்பதை உணர்த்தின.

எலும்பு மனிதர் ஒரு மலையாளி! அவர் பழி வாங்கிய யானைக் கதை சொன்ன நாட்டுப்புற மனிதனை முறைத்தார் !

'' அடடா ! ஆரா பறஞ்சது ? ஆனை பழி வாங்கும்னு. (ஐயையோ! அடித்துவிடுவாரோ) பழி வாங்குன்னது நின்னெப் போல மனுஷன்! ஆனையல்லா ! என்னிடத்து 'புரூப்' உண்டு!''

அதற்கு மேல் அவர் மலையாளத்தில் கூறிய கதையை நானும் மலையாளத்தில் பறஞ்சால் நீங்கள் என்னை அடிக்கும்! ஆகவே தமிழ் மொழிபெயர்ப்புடன் அவசியமான இடத்தில் மலையாள வசனங்களுடன் உங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

கொல்லத்தை அடுத்த ஒரு சிற்றூர் ! மலையாளத்து வெப்பம் மிகுந்த ஊர். தென்னையும் வாழையும் முந்திரியும் கொழித்த தோட்டங்கள். மூலைக்கொன்றாக இல்லங்கள்—அல்லது வளவுகள். அவற்றிலே கட்டுமஸ்தான — உழைப்பாளிகளான ஆண்கள்.... முண்டும் ரவிக்கையும் மட்டுமே அணிந்த— சிவந்த உடலுடன் இறங்கச் செய்யும் அழகு வாய்ந்த கேரளத்து மோகினிகள்! வளவுகளில் மணக்கும் செம்மீன் — புழுங்கலரிசிச் சோறு, சக்கை எனப்படும் பலாக் காய்ப் பொரியல் மணங்கள்.

'வளவு'களில் ஒரு மாடி வளவு. வளவு என்பது கேரளத்தில் வீட்டுக்கு மறு பெயர்! நமது கதாநாயகர் மாடி வீட்டு அதிபர் ! பெரும் வளவில் குஞ்சுராமன் நம்பியார்! அவருக்குப் பெரும் அளவில் பணமும் நிலமும் முந்திரித் தோட்டங்களும் இருந்த போதிலும் பிள்ளைச் செல்வம் இல்லாத ஏழை !

அவர் எவ்வளவு பெரிய பணக்காரர் என்பதற்கு மற்றோர் உதாரணம்: அவரது தேக்குக் காடுகளில் வேலை செய்ய, காடுகளிலிருந்து யானைகளைப் பிடித்து வந்து — அவற்றைப் பழக்கி ஒரு யானைப் பண்ணையையே வைத்திருந்தார்! புதிதாக ஒரு பெண் யானை பிடிக்கப்பட்டு வந்திருந்தது அவரது கொட்டிலுக்கு. அதுதான் நமது கதா நாயகி மாதவி! குஞ்சுராமன் நம்பியாருக்குப் புதிதாகப் பிடிபட்ட பெண் யானையிடம் தனிப்பட்ட அன்பு ஏற்படக் காரணங்கள் மூன்று! ஒன்று —


அந்தப் பெண் யானை பிடிபடும் போதே கர்ப்பமுற்றிருந்தது. இரண்டு — அந்த யானை வந்த மறு நாளே அம்மணி — அவரது மனைவி தானும் கர்ப்பம் என்ற சுபச் செய்தியைக் கூறியது. மூன்று, மாதவியின் சாதுவான குணம்! குஞ்சுராமன் நம்பியாருக்குக் குஷியோ குஷி! அந்த யானைக்கு மாதவி என்று நாமம் சூட்டி, 'என்டே மகளே!' என்று அழைத்துக் கொஞ்சி—குலை குலையாக நேந்திரம் பழங்களும், தேங்காய்களும்—பொரியும் கரும்புத் தோகைகளும், கொடுத்து வளர்த்தார்.

உரிய காலத்தில் அவர் மனைவி அம்மணி ஓர் ஆண் மகவை ஈன்றாள்! திருவனந்தபுரம் பத்மநாப சுவாமியின் பக்தரான நம்பியார் மகனுக்குப் பத்மநாபன் என்று பெயரிட்டு, கொல்லம் மாவட்டமே அதிசயிக்கும் வண்ணம் மகனது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

ஒரு நாள் இரவு. அமாவாசைக் கருக்கிருட்டு! யானைக் கொட்டிலில் பரபரப்பு! மூங்கில் மரங்கள் மளமளவென்று முறியும் சப்தம். சங்கிலிகள் இரும்பு முளைகளில் அடிபடும் கலீர் கலீர் என்ற ஒலி! யானைகளின் மதர்த்த பெரும் காலடிகள் தாக்குவதால் ஏற்படும் அதிர்ச்சி! இன்னும் பயங்கரமான தாக்குதலுக்கான 'களிறு' களின் பிளிறல்கள்!

இப்பெரும் கலவரத்தின் பயனாக உறக்கம் கலைந்து எழுந்த நம்பியார் விளக்கை ஏற்றிக் கொண்டு ஓடோடி வந்து பார்த்தபோது கொட்டிலில் மற்ற யானைகள் இருந்தன! மாதவியைக் காணோம்! அவளைக் கட்டியிருந்த இடத்தில் சங்கிலி மட்டும் அறுந்து முளையில் தொங்கியது! யானைகளின் வாழ்க்கையை அறிந்த நம்பியாருக்கு விஷயம் எளிதில் விளங்கிவிட்டது! நாம் எல்லோரும் பெண்ணுக்குப் பிறந்த வீட்டுப் பாசம் என்று வர்ணிக்கும் நிலை மாதவிக்கும் ஏற்பட்டுவிட்டது! தன் புகுந்த வீடான நம்பியாரின் கொட்டிலை விட்டுப் பிறந்த வீடான காட்டுக்குப் புறப்பட்டு விட்டாள் மாதவி!

ராமன் நம்பியாரின் குடும்பம் சோகத்தில் மூழ்கியதற்கு மற்றொரு காரணம், அந்த ஆண்டு பகவதி அம்மன் கோயில் உற்சவத்தில் மாதவியைக் கொண்டு கொடியேற்று விழா செய்விக்க ஒப்புக் கொண்டிருந்தார். கேரளத்தில் கொல்லத்தை அடுத்த சிற்றூர்களில் ஒன்றான பகவதி கோவிலில் ஒவ்வோர் ஆண்டும் பகவதி அம்மன் திருவிழா, பத்து நாட்கள் தடபுடலாக நடக்கும். இதற்காகச் சுற்றுப்புறங்களில் பல்வேறு நகரங்களிலிருந்தும், ஆயிரக்கணக்கான மக்கள்



வந்து கூடுவர்! கொடியேற்றத்தன்று, அப்போது கேரள நாட்டின் பட்டத்தில் உள்ள அரசர் விஜயம் செய்து துவஜாரோஹணத்தை நடத்தி வைப்பார். ஒரு பெண் யானையை நீராட்டி அலங்கரித்து, ஆசாரத்துடன் கொடி மரத்தைப் பூசை செய்து, அதை யானையின் கையில் கொடுத்துப் பகவதி கோயிலின் முன்புறம் உள்ள பெரிய குழியில் நடச் செய்வார்கள்!

இந்தக் கைங்கரியத்துக்கு இத்தனை ஆண்டுகளாகக் கொல்லம் தன்வந்திரி என்ற ஒரு பிரசித்தி பெற்ற மாந்திரீகப் பேர்வழியின் யானையைத்தான் ஏற்பாடு செய்து வந்தனர். இந்த ஆண்டு இத்தகைய மகத்தான பெருமை மாதவிக்கும் ராமன் நம்பியாருக்கும் ஏற்படவிருந்தது. என்ன சோதனை! இன்னும் திருவிழாவுக்கு இரண்டு மாதங்களே இருந்த நிலையில் மாதவி கட்டறுத்துக் கொண்டு, நம்பியாரை இக்கட்டான நிலையில் மாட்டிவிட்டு ஓடிவிட்டாள்!

சில நாட்கள் கழித்து ஒரு நாள் காலை. நம்பியார் தேக்கு மர வியாபார நிமித்தமாகக் கொல்லம் புறப்பட்டார். கதை நடந்த காலத்தில் இன்றிருப்பதுபோல் போக்குவரத்து வாகனங்கள் இல்லை. சுற்றுப்புறங்கள், ரஸ்தா இல்லாத நதிக் கரையும், காடும், சிற்றூர்களுமே ஆகும். எனவே, எவ்வளவு பெரிய சீமான் ஆனாலும் நடராஜா சர்வீஸ்தான். நம்பியார் நேர் வழியில் கொல்லம் போக வேண்டுமானால் பல மைல்கள் நடக்க வேண்டும். குறுக்கு வழியில் சென்றால், வள்ளத்திலேறி (வட்டமான படகு) நதியைக் கடந்து, அக்கரைக் காட்டில் சில மைல்கள் நடந்து விரைவில் செல்லலாம்.

நம்பியார் காட்டு வழியில் அரை மைல் நடந்திருப்பார்! திடீரென்று பறையொலி கேட்டது. அந்த ஒலி யானைகள் வருவதை அறிவித்து எச்சரிக்க, காட்டுப் பணிக்கர்கள், முரசு அறைந்து தெரிவிக்கும் ஓசை! அவர் பாதை நோக்கி ஓடும்போதே காட்டின் உட்பகுதியிலிருந்து ஒரு யானை மந்தை வருவதைக் கண்டார். வழியிலிருந்த மரக் கிளைகளை ஒடித்துத் துவம்சம் செய்தவாறே வந்தன. நம்பியார் ஓர் அடர்ந்த கிளைகளுடன்கூடிய பருமனான மரத்தின் பின்புறம் நின்று கொண்டார். நீண்ட கொம்புகளை உடைய ஆண் யானைகளும், பெண் யானைகளும், அவற்றின் கால்களுக்கிடையே கன்றுகளுமாகத் தன்னிச்சையாக, அட்டகாசத்துடன் வந்து கொண்டிருந்த யானைக் கூட்டம் திடீரென்று பிளிறியபடி வந்த வழியே திரும்பி ஓடத் தொடங்கியது. சிறு தொலைவில் திடீரென்று ஏற்பட்ட காட்டுத் தீ சிறு ஒளியாகப் பிறந்து, உலர்ந்த சருகுகளிலும், மூங்கில் மரங்களிலும் பற்றிப் பரவி, சில கணங்களிலேயே பெருந் தீயாகப் பரவிவிட்டது. யானைகளுக்குக் காடுகளில் உள்ள ஒரே எதிரி இதுதான்! தங்களைத் தொடர்ந்து பல்லாயிரம் நாக்குகளுடன் துரத்தி வரும் நெருப்பிலிருந்து தப்பிக்க யானைகள் அலறி ஓடின! ஆனால், எல்லா யானைகளும் ஓடிவிடவில்லை! சில கஜ தூரத்தில் நாலு புறமும் வளையத்தைப் போல் சுற்றி எரிந்து கொண்டிருந்த தீயின் மத்தியில் சிறு குரலில் பிளிறியபடி சுற்றிச் சுற்றி வந்தது ஒரு யானைக் குட்டி! அதற்கு மறுபுறம் தீயை நெருங்க முடியாமல், தன் குட்டியின் பரிதாப நிலையைக் கண்டு மனம் தாளாமல் பயங்கரமாகப் பிளிறிக் கொண்டிருந்தது மற்றொரு யானை! நம்பியார் படபடப்பும், திகிலும் கொண்டு இடது கையை நெற்றி மேட்டில் வைத்து, தீயொளியில் எதிரே நின்ற யானையின் கால்களைக் கவனித்தார்! அதன் பின்னங் கால்களில் அறுந்த சங்கிலிகளின் துருப் பிடித்த பாகங்கள் சுற்றிக் கிடந்தன! ''மாதவி!'' என்று அலறியவாறே மறுகணம் தீயினுள் பாய்ந்தார்! குட்டியைப் பாதி தூக்கியும், பாதி இழுத்தும் வெளியேகொண்டு வந்தார். மாதவி அவரை நோக்கி ஓடி வந்தது! தீப் புண்ணால் ஏற்பட்ட எரிச்சலாலும், உணர்ச்சிகளின் தாக்குதலாலும் அவர் கீழே விழுந்து மூர்ச்சையானார்.

நம்பியாரின் முகத்திலிருந்து கால்கள் வரை தடவித் தனது குற்றங்களுக்கு மன்னிப்பு வேண்டுவது போல் மண்டியிட்டுப் படுத்தாள் மாதவி. நம்பியாரும் மூர்ச்சை தெளிந்து எழுந்தமர்ந்து அறியாது தவறு செய்துவிட்ட பேதைப் பெண்ணை மன்னித்துவிட்ட பாவனையில் — அவள் காதுகளையும் முகத்தையும் தடவினார்.

மாதவி நம்பியாரைத் துதிக்கையால் வளைத்தெடுத்து முதுகில் அமர வைத்துக் கொண்டாள். முன்னங் கால்களிடையே குட்டியைப் பாதுகாப்பாக நடத்தியபடி தானும் நடந்தாள், தனது ''புகுந்த வீடு'' நோக்கி!

இழந்த அமைதி மீண்டு, ஆனந்தமும் பெரும் அளவில் பொங்கி நின்றபோது பகவதி அம்மன் கோயில் திருவிழா வந்தது.

பகவதி அம்மன் கோயிலிலிருந்து முதலில் மாதவியும் அவளை நடத்தியவாறு நம்பியாரும் அவருக்குப்பின் மகராஜா, திவான் முதலியோரும் இவர்களைத் தொடர்ந்து ஆயிரக் கணக்கான மக்களுமாக, அரை மைல் தொலைவிலிருந்த பெரிய குளத்தை நோக்கி ஊர்வலமாக நடந்தனர்.

ஊர்வலம் கோயிலை வந்தடைந்தது. இங்கு மற்றொரு ஐதீகம். துவஜஸ்தம்பம் நடும்போது குழியருகே யானையைத் தவிர, சுமார் பதினைந்து கஜ சுற்றளவுக்கு மனிதர்கள் யாரும் வரக்கூடாது!

இதோ குழியை நெருங்கிவிட்டாள் மாதவி. நம்பூதிரிமார்களின் வேத கோஷம் உயர்ந்து சுருதி சுத்தமாக, நாத மயமாக ஒலித்தது! மகாராஜவின் கை உயர்ந்து, ராமன் நம்பியார் தமது கையை உயர்த்தி மாதவிக்குச் சைகை செய்தார்!

மாதவி தலைக்கு மேல் கொடி மரத்தை உயர்த்தினாள்!

மனைவி: உங்களுக்குச் 'சந்திகை' என்ற இதழிலிருந்து ரூ. 100 மணியார்டர் வந்துள்ளது. இந்த ஆண்டுதான் நீங்கள் கதையே அனுப்பவில்லையே, ஒருவேளை போன வருடம் அனுப்பிய கதை எதற்காவது இப்போது பணம் அனுப்பியிருக்கிறார்களோ என்னவோ!

கணவன்: அதெல்லாம் ஒன்றுமில்லை. இந்த ஆண்டு கதை எதுவுமே அனுப்பாமைக்குப் பரிசாக அனுப்பியிருப்பார்கள். - பண்ணை வேந்தன்



ஃப்யூராடான் உபயோகித்தால் அதிக நெல் விளைச்சல்

டாடா ஃபைஸன் ராலீஸ் வழங்கும் புதிய ஃப்யூராடான் 3ஜீ மருந்து

நெற்பயிரைத் தாக்கும் பூச்சிகளைக் கொல்லுகிறது. இது பயிர் முழுவதும் பரவி செயலாற்றுவதோடு, அதிக பச்சையான நெற்பயிரைத் தருகிறது; ஹெக்டேருக்கு மற்ற பூச்சிக் கொல்லிகள் தருவதை விட 3 மெட்ரிக் டன்னுக்கும் அதிகமாக விளைச்சல் தருகிறது.


உலகெங்குமுள்ள நெற்பயிர் விளையும் பிரதேசங்களில் மிகச் சிறந்த பூச்சிக் கொல்லி என்று போற்றப்படுகிறது ஃப்யூராடான் 3ஜீ. இது பயிர் முழுவதும் பரவும் நஞ்சியல்பு கொண்ட மருந்தாகும். இதை நிலத்திலும், நெல் வயலிலுள்ள நீரிலும் போட்டால் பயிர்கள் வேர்கள் மூலம் அதை உறிஞ்சி, பயிர் முழுவதும் பரப்புகின்றன. இதனால் பயிரைக் கடித்து மெல்லும், துளைக்கும் மற்றும் அதன் சாற்றை உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப் படுத்துகிறது.

உங்கள் நெற்பயிருக்கு சிக்கனமான புதியமுறை, அதாவது விதைகள் / நாற்றுக்களைத் தோய்த்து எடுக்கும் முறைப்பற்றி உங்கள் வியாபாரியைக் கேளுங்கள். அதை ஒருமுறை கையாண்டு பாருங்கள். வியப்பூட்டும் பலன்களைக் கண்டு நீங்கள் அதிசயிப்பீர்கள்.

வியாபார விவரங்களுக்கு எழுதுக:
ராலீஸ் இந்தியா லிமிடெட்
ஃபெர்ட்டிலைஸர்ஸ் & பெஸ்டிஸைட்ஸ் டிவிஷன், 320, லிங்கி செட்டி தெரு,
சென்னை 600 001.

விசேஷ சிறப்பம்சங்கள்
ஃப்யூராடான் 3ஜீ, வேறைத் தூவப்படும் பூச்சிக்கொல்லிகளை விடச் சிறந்தது; மிகவும் பயனுள்ளது.

- நெற்பயிரைத்தாக்கும் தண்டு துளைப்பான், தத்துப் பூச்சி, ஆனைக்கொம்பன், அரிக்கும் பேன் ஆகிய பெரும்பாலான பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது.
- விசேஷ கருவிகளின் உதவியின்றியே கையாலேயே இந்த மருந்தை எளிதில் பத்திரமாகப் போடலாம்.
- கடித்து மெல்லும் பூச்சிகளையும் சாற்றை உறிஞ்சும் பூச்சிகளையும் கட்டுப் படுத்துகிறது.
- பூச்சிகளை விரைவில் தாக்குவதற்காக பயிர் முழுவதும் உடனடியாகப் பரவி விடுகிறது.
- இதை மழை அடித்துச்செல்ல முடியாது... தெளிப்பு மருந்தைவிட நீண்ட காலம் பாதுகாப்புத் தருகிறது.
- தானிய மணியில் மருந்து தங்கவோ, காற்றடிக்கவோ செய்யாது.
- இந்தப் பயிரை அழிக்கும் பூச்சிகளை மட்டுமே பாதிக்கும்; பயிருக்கு சாதகமான பூச்சிகளுக்கு ஆபத்தில்லை.



RALLIS
TATA FISON
PESTICIDES

fmc® furadan®
IS A REGISTERED TRADEMARK OF FMC CORPORATION
PATENT NUMBER 97323 OF FMC CORPORATION

அதிக நெல் விளைச்சல் பெற....ஃப்யூராடான் 3 ஜீ குருணைகள்

OBM 3134R TM

இப்போது சுற்றி நின்ற ஆயிரக்கணக்கான மக்கள் கண்களை மூடிக் கை குவித்துப் பக்திப் பரவசத்துடன் ''அம்மையே! பகவதி!'' என்று ஓங்காரத்துடன் முழங்கினர். அடுத்து, அனைவரும் குழிக்குள் மரம் நடப்பட்டிருக்கும் என்றெண்ணிக் கண்களைத் திறந்தனர். ஆனால் அவர்கள் கண்ட காட்சி இதென்ன! மாதவியின் கொடி மரத்தைத் தாங்கிய தும்பிக்கை ஏன் இப்படி உயரே நின்றுவிட்டது? மாதவி ஏன் அசையாது நிற்கிறாள்? என்ன அபசாரம் நடந்தது! அந்தப் பயங்கர மௌனத்தைக் கலைத்தபடி முரட்டுக் குரல் ஒன்று எழுந்தது. தன்வந்திரியின் ஆணவக் குரல்தான் அது! ''எனிக்கு அறியாம்! ஆ! மதம் படிச்ச மாதவி! அம்மைக்கு அபசாரம் செய்து! ஈ தன்வந்திரியோடே ஆனையல்லாது மற்றொரு ஆனைக்கு அம்மையுடே துவஜஸ்தம்பத்தைத் தொடும் அருகதையில்லா!''

தன்னைச் சுற்றிலும் இத்தனை உணர்ச்சிப் போராட்டங்கள் நடப்பதை அறியாத மாதவி கொடிமரத்தைக் குழியருகில் கிடத்தினாள். மெதுவே நடந்து நம்பியாரின் அருகில் நின்றாள்.

ராமன் நம்பியாரின் உடலும் உள்ளமும் அவமானம், கோபம் ஆகிய உணர்ச்சிகளால் துடிதுடித்தன! அவரது மெலிந்த உடலில் நரம்புகள் முறுக்கேறின. வெள்ளிப் பூண் போட்ட அங்குசத்தால், மாதவியின் முதுகில் மத்தகத்தில், அவள் உடலெங்கும் குத்தி வெறியுடன் புண்ணாக்கியவாறே அலறினார்: ''அட பாதகி! ஞான் நினக்கு எந்து துரோகம் செய்து? நின்டெ மகனைத் தீயிலிருந்து ரக்ஷிச்சது தெற்றோ? நின்னெ ஞான் ஒரு மகளைப் போல வளர்த்து ஆளாக்கியதற்கு இதுதான் நீ செய்யுன்ன பிரதிபலனோ? சீ — மிருகமே! ஈ குஞ்சுராமன் நம்பியாருடே பாக்கியம் இன்னோடே கழிஞ்சு! மதம் கொண்ட மாதவி! என்னைக் கொன்னு கனமே! நின்டெ வெறியைத் தீர்க்காம் வேண்டி என்னை மிதிச்சுக் கொல்லடீ!'' என்றவாறு மாதவியின் காலடியில் விழுந்து வெறியனைப்போல் அலறினார்.

மாதவியோ கறுத்த தன் உடல் முழுதும் செங்குருதி வழிந்தோட — சிறிய கண்களில் கண்ணீர் கசிந்து சுருங்கிய தோல்களினூடே வழிந்தோட அமைதியாக நின்றாள்.

அவள் என்ன சொல்ல நினைத்தாளோ, யாருக்குத் தெரியும்? வாயில்லா ஜீவனாயிற்றே! ஒரு மனிதனும் ஒரு மிருகமும் நடத்தும் உணர்ச்சிப் போராட்டத்தை எள்ளளவும் மதியாமல் தன் 'நா'வென்னும் சாட்டையை மேலும் சுழற்றி அடித்தான் தன்வந்திரி.

''இதெந்து நாடகமானு நம்பியாரே! இங்ஙனே நாடகமாடியால் பகவதி யம்மை நின்னெ க்ஷமிக்குகயில்லா! நீ செய்த மகாபாசாரத்தின் சிக்ஷை! எந்து அறியோ நின்டெ வம்சம் நசிக்கும்! நின்ற ஒரே மகன்!....''

திடீரென்று நம்பியாரின் உடலில் மின் வெட்டு! ''என்ற மகன்! பத்மநாபன் எங்கே?'' இங்கு நடந்த உணர்ச்சிப் போராட்டங்களினால் இதுவரை அவனது நினைவே அவருக்கு எழவில்லை!

அவரது வினவுக்கு விடை தேடுவதுபோல் மாதவி மெதுவே குழியை நோக்கி மறுபடியும் நடந்தாள்! குழியருகே படுத்து நீண்ட துதிக்கையைக் குழிக்குள் செலுத்தினாள்! மீண்டும் அவள் துதிக்கையை வெளியே எடுத்தபோது அனைவரும் ஒரே குரலாக ''அம்மையே எந்து பயங்கரம்!'' என்று அலறினர். ஆம்! மாதவியின் துதிக்கையில் மலர்களினிடையே சுருண்டிருந்தான் பத்மநாபன். நம்பியார் தவமிருந்து பெற்ற ஒரே மகன்!

இப்போது மக்களனைவரது உள்ளத்திலும் மற்றொரு பயங்கர வினா எழுந்து நெஞ்சை உலுக்கியது. மாதவி சென்ற வேகத்தில் கொடிமரத்தைக் குழியில் நட்டிருந்தால்!

தனது வம்சத்தின் கனியைக் கரத்தில் தாங்கித் தள்ளாடி நடந்து வரும் மாதவியைக் கண்டார் ராமன் நம்பியார். தேகமெங்கும் தனது அசுரத் தாக்குதலால் ரத்தம் வழிய நின்ற அந்த அன்புருவத்தைக் காண இயலாது கண்ணீர் திரண்டு மறைத்தது.

''மாதவி! என்ட மகளே! நான் பாபியடி மகளே! பாபி — நீ ஆனை அல்ல, தெய்வமானு! பகவதித் தாயே நின்டெ ஜீவத்தில் வந்து என் மகனை ரக்ஷிச்சு. நின்டெ தேகத்தை அடிச்சு ரணமாக்கிய ஈ ராக்ஷசனே க்ஷமிக்கு மவளே!'' என்று ரத்த நாளங்கள் அனைத்தும் வெடித்துவிட்டது போல் அலறி மாதவியின் காலடியில் வீழ்ந்தார். அவர் மட்டுமா? மகாராஜா, தன்வந்திரி, பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் அனைவருமே!

ராமன் நம்பியார் உணர்ச்சிப் பெருக்கால் வழிந்த கண்ணீரைத் துடைத்தபடியே கேட்டார்: ''நீங்களெல்லாம் இப்போ பறயணம். நீங்கள் நினைப்பது போல் மாதவி புத்தியும் விசுவாசமும் தாய்ப் பாசமும் இல்லாத ஒரு மிருகமாயிருந்தால் என்னுடைய மகன் எனக்குக் கிட்டியிருப்பானோ?''


நாங்கள் அனைவருமே கோஷ்டியாக ''இல்லே, இல்லே! மாதவி மிருகமில்லே! தெய்வாம்சம் பொருந்திய யானைதான்!'' என்று முழங்கினோம்.

நம்பியார் மகிழ்ச்சியுடன் கொட்டானை எடுத்து முறுக்கத் தொடங்கினார்.

என் கதாசிரிய புத்தியைக் குடைந்து கொண்டிருந்த கேள்வியைக் கேட்டேன்: ''நம்பியாரே! உங்கள் மகன் எப்படிக் குழியில் விழுந்தான்? அவ்வளவு பெரிய குழிக்குள் விழுந்தவன் எப்படி ஆபத்தின்றித் தப்பினான்?''

ராமன் நம்பியார் காவிப் பல் தெரியச் சிரித்தார்.

''குழந்தை பத்மநாபன், குட்டனோடு விளையாடியபடியே குழிக்கருகில் வந்தவன் பத்து தவறிக் குழிக்குள் விழுந்திருக்கிறான். குழிக்குள் மூன்று நாள் பூஜையில் சேர்ந்த மலர்களும் இலைகளும் பாதியளவு நிரம்பிக் குழி மெத்தென்றிருந்திருக்கிறது. எனவே, குழந்தைக்கு எந்தவிதத் தீங்கும் நேரவில்லை!'' இதைக் கேட்டு நாங்கள் மெய் சிலிர்த்தோம்.



''மயிலாப்பூரிலே ஒருத்தர் வீடு பூரா நோட்டு நோட்டாக அடுக்கி வைச்சிருக்காருனு தகவல் வந்து போய்ப் பார்த்திங்களே என்ன ஆச்சு?''

''தகவல் உண்மைதான்... ஆனா ஆசாமியைத்தான் கைது செய்ய முடியல்லே...''

''ஏன்?''

''அத்தனையும் பள்ளிக்கூட நோட்டு சார்!''

- புஷ்பா



14. யார் இந்த விஜயா?

வாசல்வரை கூடவே வந்து மிஸஸ் பணிக்கரைக் காரிலேற்றி அனுப்பி விட்டு உள்ளே திரும்பினான் சேகர். "உன் பேச்சு; செயல் எல்லாமே இரண்டு நாட்களாகப் பெரிய புதிராக இருக்கின்றன" என்றாள் மாலதி.

"அதற்கு என்னம்மா செய்வது? துப்பறியும் ஆசாமிகள் சில சமயம் புதிராகத்தான் இருக்க வேண்டியிருக்கிறது" என்றான் சேகர். "இதோ இந்த மிஸஸ் பணிக்கரைத்தான் எடுத்துக் கொள். இவள் மகா தந்திரசாலி. டேப்பில் கேட்ட ஆண் குரல் கோவிந்துவினுடையது என்பது அவளுக்குத் தெரியும். அக்காள் புருஷனுக்கும் ஏதாவது ஆகி விடக் கூடாதே என்று உடனே உஷாராகி விட்டாள். 'டாக்டர்' குரல் என்று கூசாமல் பொய் சொன்னாள். 'யு ஆர் கரெக்ட்' என்று நானும் சொன்னேன். கோவிந்து மீது சந்தேகப்படவில்லை என்று அவள் நினைத்துக் கொள்ளட்டும் என்றுதான் அப்படிச் சொன்னேன்."

"டாக்டர் செத்துக் கிடக்கும்போதும் பொய் சொன்னாய். ரிப்போர்ட் வருவதற்கு முன்பே டாக்டரின் மரணம் கொலையல்ல என்றாய்! தாரிணியின் மரணமும் கொலை இல்லை என்றாய் —"

"டாக்டர் வீட்டில் அப்போது சந்தேகாஸ்பதமான ஆசாமிகள் சிலர் இருந்தார்கள். 'போலீஸ் நம் மீது சந்தேகப்படவில்லை' என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படத்தான் அப்படிப் பேசினேன்."

"அப்படி நீங்கள் பேசினதினால் தானே மானேஜர் ஜெயராம் என்னை மதுரபவனத்துக்குள் மறுநாள் தாராளமாக நுழைய விட்டார். வீட்டை மதிப்பீடு செய்கிறவன் மாதிரி போய்க் கண் அறையில் இரண்டு விழிகளுக்குப் பின்னாலிருந்த இந்த இரண்டாவது காஸெட்டை எடுத்து வரவும் முடிந்தது — ஸார்!" என்றார் கோபால்.

"இது ரமேஷ் கொண்டு வந்த காஸெட் இல்லையா?" என்றாள் மாலதி.

"முதல் காஸெட்டை எடுத்து விட்டு இரண்டாவதாக ஒன்றை வைக்கும்போதுதான் யாரோ வருகிற ஓசை கேட்டு, எடுத்ததைத் தன் கைப் பையில் போட்டு, பையைப் பீரோ மீது வீசி விட்டு வந்து விட்டாள் விமலா. அதைத்தான் ரமேஷ் கொண்டு வந்தான். இது விமலா இரண்டாம் தடவை வைத்தது."

"அந்த முதல் டேப்பில் என்ன இருந்தது?"

"உபயோகமாக ஒன்றுமில்லை. பயனற்ற சில சம்பாஷணைகள்!"

"இதில் பேசினது யார், யார்?"

"ஒன்று கோவிந்து; மற்றது தேவகி என்கிற யாரோ புது ஆள்... விருந்து நடந்த அன்று அவள் கோவிந்துவைப் பார்க்க வந்திருக்கிறாள்... ஆனால் துரதிருஷ்டம்.. அவள் தன் விலாசத்தை வாயாலே சொல்லவில்லை. சொல்லியிருந்தால் பதிவாகியிருக்கும்... ம்... அவளைக் கண்டுபிடிக்க என்னென்ன நாடகம் ஆட வேண்டுமோ?"

"இதெல்லாம் எப்படியோ போகட்டும்! ரமேஷ் மீது நீ சுமத்தியுள்ள குற்றச்சாட்டும் ஒரு நாடகமாக இருந்து விடக் கூடாதா என்பதுதான் என் கவலை!" என்று பெருமூச்சு விட்டாள் மாலதி.


"எக்ஸ்கியூஸ் மீ, ஸிஸ்டர்! ரமேஷைக் கைது செய்யும்படி கோரியது நான் அல்ல; பெங்களூர் போலீசார்தான்! இன்னும் சில நாட்களில் அவர்கள் வந்து அவனை அழைத்துப் போய் விடுவார்கள்!"

"நீ ரொம்பக் கிராதகன்! உனக்கு நெஞ்சு என்பதே கிடையாது!" என்றாள் மாலதி. "இருந்தால் விமலாவைப் பற்றிக் கவலைப்படாமல் இருப்பாயா?"

"நானா கிராதகன்?" என்ற போது சேகரின் குரல் தழுதழுத்தது. கண்களில் நீர் பொங்கியது. சட்டென்று ஜன்னல் பக்கமாக நாற்காலியைத் திருப்பிக் கொண்டு "நீ பெண்! வாய் விட்டு அழுது ஆற்றிக் கொள்ள முடியும் — என்னால் முடியுமா?" என்றான்.

"விமலாவைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லையா?"

"இல்லை. அதுதான் பெரிய கவலையாக இருக்கிறது. தேடுகிற வேலை நடக்கிறது. மகாபலிபுரம் காட்டில் கிடந்த பிரா அவளுடையதுதான். அங்கிருந்து விசைப்படகில்



தூக்கிக் கொண்டு போயிருக்கிறார்கள் ... நடுக்கடலில் கல்லைக் கட்டித் தூக்கிப் போட்டு விட்டார்களோ என்று பயமாக இருக்கிறது.''

''கடவுளே!'' என்று கூவினாள் மாலு. ''கேட்கவே பதறுகிறதே ... அந்தப் படகைக் கூடவா கண்டுபிடிக்க முடியவில்லை?''

''கள்ளக் கடத்தல் படகாக இருந்தால் கண்டுபிடிப்பது கஷ்டம்தான்.''

''இப்படி ஒவ்வொன்றுக்கும் ஏதாவது நொண்டிச் சாக்கு சொல்லிக் கொண்டிருந்தால் உங்கள் போலீஸால் எதைத்தான் கண்டுபிடிக்க முடியும்?'' என்று முகத்தில் அறைந்தாற் போலச் சொல்லி விட்டு வேகமாக எழுந்து போய்விட்டாள் மாலதி.

சேகர் திரும்பினான். ''புவர் கேர்ள்! நாம் குற்றவாளிகளைப் பிடிக்கப் படுகிற கஷ்டம் அவளுக்கு என்ன தெரியும்?'' என்று கூறி விட்டு, ''மிஸ்டர் கோபால்! நீங்கள் எப்போது புறப்படுகிறீர்கள்?'' என்று கேட்டான்.

''இன்றைக்கே புறப்படுகிறேன், ஸார்!''

''ராஜமுந்திரி — தேவகி என்ற இரு வார்த்தைகள்தான் உங்களுக்கு 'கீ' வார்த்தைகள். இதைத் தவிர வேறு ஒன்றையும் என்னால் தர முடியவில்லை... ஆனால் நீ கெட்டிக்காரன். எப்படியாவது அவளைக் கண்டுபிடித்து விடுவாய்!''

''நீங்கள் வழிகாட்டியிருக்கிறீர்களே ஸார்!''

''வெகு சீக்கிரத்தில் இந்தத் தேவகியை நாம் கண்டுபிடித்தாக வேண்டும். கண்டுபிடித்து விட்டால் இந்த வழக்கில் நமக்கும் குற்றவாளிகளுக்கு மிடையில் நடக்கும் போட்டியில் நாம் ஓரடி முன்னால் போய் விடுவோம்... பாரிபூர் மகாராணியுடன் விருந்துக்கு வந்த ஓர் ஆள் மீதும் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது...அவனைப் பற்றிச் சில தகவல்களை நம் இலாகாவைச் சேர்ந்த பாபு கொண்டு வந்திருக்கிறார் ... அந்த ஆளைத் தேடப் பாபுவை இன்று பஞ்சிமுக்கு அனுப்புகிறேன் ... கோவிந்துவுக்கு அவன் ஏதோ உறவு என்று தெரிய வந்திருக்கிறது!''

''கோவிந்துவைப் பற்றி எனக்கும் ஒரு தகவல் கிடைத்தது, ஸார்!''

''என்ன?''

''தாரிணியும் டாக்டரும் கொலை செய்யப் படவில்லை என்று நாம் எத்தனை சொன்னாலும் அதைக் கோவிந்து நம்பவில்லையாம்! 'நோ... நோ ... நிச்சயமாகக் கொலைதான்' என்று சொல்லிக் கொண்டிருந்தாராம். 'ஒரு பெரிய 'காங்'கே வேலை செய்கிறது. விஜயன் என்ற ஆள் என் குடும்பத்தையே ஒழித்து விட முனைந்திருக்கிறான்' என்றாராம். 'அடுத்த பலி நான்தான்' என்று புலம்பிக் கொண்டே இருந்தாராம். இந்தப் பயமும் விரக்தியும் சேர்ந்துதான் அவரை உலக வாழ்க்கையையே வெறுத்துச் சாமியாராக்கி விட்டதாம் — ''

''யார் சொன்னார்கள்?''

''ஜெயராம் சொன்னார்!''

''யார் இந்த விஜயன்...? புதிதாக வந்து நுழைந்திருக்கிறானே! பாரிபூர் ராணியுடன் வந்தவனா, அல்லது வேறு ஆளா? தாரிணிக்கும் இவனுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமா?''

''தாரிணியை ஏமாற்றிக் கைவிட்ட பழைய காதலனும்—ஜெயராம் சொன்னார்!''

''வாட்? இதென்ன, இந்தக் கேஸில் வருகிற எல்லாப் பயல்களுமே யாரையாவது காதலித்துக் கைவிட்டு விட்டு ஓடி விடுகிற ஆட்களாகவே இருக்கிறார்களே!''

''உத்தியோகம் புருஷ லட்சணம் மாதிரி உதறி விட்டு வருவது காதல் லட்சணம் போலிருக்கிறது, ஸார்!'' என்று சிரித்தார் கோபால். சேகரும் சேர்ந்து சிரித்தான்.

''சரி, மிஸ்டர் கோபால்! புறப்படுங்கள். மஃப்டியில் போங்கள். தேவகியைக் கண்டுபிடித்து விட்டால் விஜயன் பற்றியும் தெரிந்து விடும் என்று நினைக்கிறேன் — பை!''

அறையின் கதவு ஒரு தடவை திறந்து மூடியது.

தன் சின்ன வீட்டில், பூஜையறையில் அரையடி உயர விக்கிரகங்களுக்கு முன் விளக்கேற்றி வைத்து விட்டு, கடவுளையே பார்த்துக் கொண்டு, சிலையாகச் சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள் மாலதி. அடிவயிற்றிலிருந்து ஒரு பெரிய பெருமூச்சு அவள் நாசியைக் கீறிக் கொண்டு வெளிப்பட்டது.

மூன்று மாதங்களுக்கு முன் அவள் எத்தனை குதூகலமாக இருந்தாள்? உலகம்தான் எவ்வளவு அழகாக இருந்தது! ஒவ்வொரு செடியும், கொடியும், பூவும் மரமும் எத்தனை இனிமையைப் பொழிந்தன! பட்சி ஜாலங்கள்

தான் எத்தனை காதல் கீதத்தை இசைத்தன! மனம் எத்தனை இன்பக் கோட்டைகளைக் கட்டிற்று? — எல்லாமே விநாடிப் பொழுதில் பொடிப் பொடியாக இடிந்து விழுந்து விட்டது! — வாழ்வே இருண்டு விட்டது! 'ரமேஷ்! உன்னை எத்தனை உத்தமன் என்று நம்பினேன்?' — மாலதியின் கண்களிலிருந்து நீர் அருவியாகப் பெருகி வழிந்தது!

ஹாலில் டெலிபோன் ஒலித்தது. கண்களைத் துடைத்துக் கொண்டு போய் எடுத்தாள்.

''ஹலோ, மாலுவா? நான் சேகர் பேசுகிறேன்...பதினைந்து நாட்களுக்கு முன்னால் பெங்களூருக்கு விசாரணைக்காக ரமேஷை அனுப்பினேனே — ஞாபகம் இருக்கிறதா?''

''அதுக்கென்ன இப்போ?''

''அவன் லாக்–அப்பிலிருந்து தப்பித்துக் கொண்டு போய் விட்டானாம்!''

''என்ன?'' என்று கூவினாள் மாலதி. அவளையுமறியாமல் இந்தச் செய்தி அவள் மனத்தில் குதூகலத்தை ஏற்படுத்தியது.

''ரொம்ப சந்தோஷப்பட்டு விடாதே அம்மா! லாக்–அப்பிலிருந்து தப்பிப் போகிறது பெரிய குற்றம் ... உள்ளே இருந்திருந்தாலாவது வக்கீலை கிக்கீலை வைச்சு வாதாடி விடுதலை பண்ணிவிடலாம். எப்போ ஓடிப் போய் விட்டானோ அப்போ கேஸ் இன்னும் இறுகிப் போய் விட்டது!''

திடீரென்று மாலுவுக்கு ரமேஷ் பக்கம் சேர்ந்து கொண்டு அண்ணனை மடக்கி ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற விசித்திர ஆசை தோன்றி விட்டது.

''அவர் நிரபராதி போலிருக்கு! அதுதான் உன் குருட்டுச் சட்டத்தைத் தூக்கி எறிஞ்சுட்டுப் போயிட்டார்!'' என்றாள்.

''வெறுமனே ஓடிப் போகலை மேடம்! விஜயன் என்ற ஒரு பெரிய ரௌடித் தலைவனுடன் ஓடிப் போயிருக்கிறான்.''

''இருக்கட்டுமே. அதனாலே அவர் குற்றவாளியாகி விடுவாரா?''

''ஏதேது! நீ பேசுகிற பேச்சைப் பார்த்தால் நீயும் கூட அவனோடு ஓடிப் போய்விடுவாய் போலிருக்கிறதே?''

''அப்படிப் போனால்தான் என்ன மோசம்? இரக்கமே இல்லாத உன் போன்ற அண்ணன் மார்கள் இருக்கிற இடத்தைவிட உங்கிட்டே இருந்து தப்பிப் போகிறவா இருக்கிற காடு எத்தனையோ மேல்.''

'டக்'கென்று போனை வைத்து விட்டு நிமிர்ந்தாள் மாலு. கிறுகிறுவென்று தலை சுற்றுவது போலிருந்தது. மேஜையைப் பிடித்துக் கொண்டாள். ரமேஷ் பக்கம் சேர்ந்து கொண்டு பேசினது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. எப்படிப் பேசினாள்? நிஜமாகவே ரமேஷ் நிரபராதிதானோ?

எதிரே சுவரில் சேகரின் போட்டோ மாட்டியிருந்தது. ''அண்ணா! ரமேஷைக் கண்டுபிடித்து இழுத்துக் கொண்டு வந்து உன் முன் நிறுத்தி, அவர் மீது இருக்கிற குற்றச்சாட்டுக்களை முனை முனையாக முறிக்கவில்லை — நான் மாலு இல்லை!'' என்று சபதம் செய்தாள்.

அடுத்த பதினைந்தாவது நிமிஷத்தில் மாலு, நகரின் மேற்குப் பகுதியில், ஒரு கட்டிடத்தின் மூன்றாவது மாடியில், ''அருள்தாஸ் — பிரைவேட் டிடெக்டிவ்'' என்ற போர்டு போட்டிருந்த அறையினுள் உட்கார்ந்திருந்தாள்.

அருள்தாஸ் கறுப்பாகக் குட்டையாக, ஹிட்லர் மீசையுடன் உட்கார்ந்து அவள் சொல்வதை யெல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் கண்கள் பளபளவென்று மின்னிற்று. ''ஆகட்டும், மேடம்! எல்லாவற்றையும் இரகசியமாகவே வைத்துக் கொள்கிறேன். கவலைப்படாதீங்க— இன்னும் பத்து நாட்களில் ரமேஷ் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து வந்து சொல்கிறேன்'' என்றான்.

''அவர் இருக்குமிடம் தெரிஞ்சா போதும்—மத்ததெல்லாம் நான் பார்த்துக்கிறேன்'' என்றாள் மாலு.

போலீஸ் தலைமையகத்தின் அந்தப் பழுப்பு நிறக் கட்டிடத்தின் பின்புறத்தில் இருந்த பெரிய பார்க்கில் புல்தரையை விட்டு நடந்து கொண்டிருந்தார்கள் சேகரும், கோபாலும்!

''ஸார்! மறுபடியும் என்னைப் பார்க்க விரும்புவதாகச் சொன்னீர்களாமே!'' என்றார் கோபால்.

''ஆமாம். இன்வெஸ்டிகேஷன்லேருந்து திரும்பி வந்ததும் நேற்று நீங்க அனுப்பி வைச்ச ரிப்போர்ட்டைப் படித்தேன் — அதுபற்றி நேரில் சில விவரங்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளத்தான் வரச் சொன்னேன். சில பகுதிகள் மூடு மந்திரமாக இருக்கின்றனவே!'' என்றான் சேகர்.

''கேளுங்கள் ஸார்.''

''அந்தப் பெண் பிள்ளை எப்படி இருந்தாள்? ஆந்திரா பக்கமா? — தமிழ்நாடா?''

''ஆந்திரா மாதிரிதான் இருக்கிறாள். ஆனால் தமிழ் நன்றாகப் பேசினாள். முதலில் தமிழே தெரியாது என்று ஒரேயடியாகச் சாதித்து விட்டாள். 'தமிழ்நாட்டுக்கே வந்ததில்லை' என்றாள். 'மூன்று மாதங்களுக்கு முன் மதராசுக்கு வந்து எங்க கோவிந்து ஸாரோட பேசிக்கிட்டிருந்தியே. — நான் பார்த்தேனே; நான்தானேயம்மா அவருடைய மானேஜர்' என்றதும் வழிக்கு வந்தாள்.. 'அவர் பெயர் கோவிந்து இல்லை; 'கார்த்திக்' என்றாள்.''

''ஆமாம். இதுபற்றிக் கேட்கத்தான் வரச் சொன்னேன். 'கார்த்திக்' - என்றுதான் சொன்னாளா? ஆர் யூ கரெக்ட்?'' என்று கேட்டான் சேகர்.

''வெரி கரெக்ட் ஸார். 'உங்க ஊரிலே அவன் பேரு கோவிந்துவாக இருக்கலாம். எங்களுக்கு அவன் கார்த்திக்தான்' என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள். 'பணம் காசு வந்துட்டா மனுஷா பெயரை மாற்றிக் கொண்டு விடுவா போலிருக்கு' என்றாள். ஆள் ரொம்ப அழுத்தம். இலேசில் வாயைத் திறக்கவில்லை. 'ரொம்ப மந்திரம் போட

● ● ●



சிரிப்பு: இருவருக்கிடையே உள்ள மிகக் குறைந்த இடைவெளி. - விக்டர் ஹோர்க்.

மிர்ர் - பாலி


படிப்படியாக உயர்ந்து
முன்னேற்றமடைந்த அவருக்குத் தெரியும்..
...அழகான ஆடைகளும் அதற்கு உதவின என்று!



உனக்கு ட்ரு பிடிக்குமா?
யாருக்குதான் பிடிக்காது?
ட்ரு மாரி, எந்நேரமும் சுவைக்கச் சிறந்த பிஸ்கட்.
தேநீர், காபி அல்லது எந்த பானத்துடனும் சுவைத்திட மொறுமொறுப்பான பிஸ்கட்.
உங்கள் குடும்பத்தினருடன் பகிர்ந்து மகிழ சிறப்பான சுவை.
இந்தியாவில் நவீனமான தொழிலகத்தில் சுகாதார முறைப்படி தரமாக தயாரிக்கப்படுபவை.
ட்ரு பிஸ்கட்டுகள் மொறுமொறுப்பானவை.
புதுமணம் குன்றுமல் ருசி மிக்கவை.
TRUE MARIE BISCUITS
ட்ரு
TRUE
-பகிர்ந்திட விரும்பும் தரமிகுசுவை
HT-AFP-8021
ஆரோபுட் பிரைவேட் லிமிடெட், ஆரோவில் — பாண்டிச்சேரி

வேண்டியிருந்தது. மூணு மாசங்களுக்கு முன்னால் ஒருநாள் இருட்டுகிற போது தலையிலே மொட்டையும் கழுத்திலே கொட்டையுமாகக் கோவிந்து வந்து நின்றாராம். 'என் பெண்டாட்டி செத்துப் போயிட்டா. எனக்கு உலகம் வெறுத்துப் போயிடுச்சு. நிர்மலாவை ஒரே ஒரு தடவை அவளுக்குத் தெரியாமல் பார்த்து விட்டு ரிஷிகேசம் போயிடறேன்'' என்று கெஞ்சினாராம்; அழுதாராம். இவ முடியவே முடியாதுன்னாளாம். இரண்டு நாட்கள் விடாமல் துளைச்சு எடுத்து விட்டாராம். கடைசியிலே இவளுக்கே இரக்கமாகி விலாசத்தைச் சொல்லி விட்டாளாம். 'அவளுக்கு என்னாலே எந்தக் கெடுதலும் வராது' என்று சத்தியம் செய்து கொடுத்து விட்டுப் போயிட்டாராம் –''

''ரிப்போர்ட்டிலே கொடுத்திருக்கிற விலாசம் சரிதானா?''

''ரொம்ப சரி ஸார் – நான் உடனே விசாகைப் பட்டணத்துக்கு 'கால்' போட்டு, ஸ்டேஷன் ரைட்டரைக் கூப்பிட்டு விசாரித்து விட்டேன். ஊருக்கு வெளியிலே பத்துமைலில் ஒரு பெரிய ஆசுபத்திரியிருக்காம்; டாக்டர் ரமணன் என்பவருடையதாம். டாக்டர் ரமணனின் மனைவி பெயர் நிர்மலாதானாம்.''

''ஐ. ஸி – அதிருக்கட்டும். தேவகி-நிர்மலா இவங்களுக்கு ராஜமுந்திரிதான் ஊராமா?''

''இல்லை. ராஜமுந்திரியில்தான் பிறந்து வளர்ந்தார்களாம். அப்பா பெரிய புகையிலை வியாபாரியாக இருந்தார். இரண்டு பெண்கள். மூத்தவள்தான் தேவகி; இளையவள் நிர்மலா. தேவகிக்குக் குண்டூர் பக்கத்திலே கல்யாணமாயிற்று ... வரதட்சிணைத் தகராறில் இரண்டு வருஷங்கள் பெண்டாட்டியை அழைத்துக் கொள்ளாமலே இருந்தான் தேவகியின் கணவன் கேசவன். அந்த இரண்டு வருஷங்களுக்குள்தான் நிர்மலாவின் வாழ்க்கையை அடியோடு மாற்றிவிட்ட சம்பவங்கள் நடந்து விட்டன.''

''இப்படி உட்கார்ந்து பேசுவோமா?''

''எஸ், ஸார்'' – இருவரும் ஒரு பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டார்கள். கோபால் மேலே சொன்னார்: ''தேவகி சொன்னதெல்லாம் தொடுத்து என் பாஷையில் சொல்கிறேன் ... நிர்மலாவுக்கு அப்போது பதினெட்டு வயசு நடந்து கொண்டிருந்தது; கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு ஒரு சிநேகிதி. பெயர் தனலட்சுமி!''

''என்ன? தனலட்சுமியா?''

''ஆமாம் ஸார்! அந்தப் பெயரில் யாரை யாவது தெரியுமா, ஸார்?''

சேகர் ஒரு நிமிடம் அப்படியே திகைத்துப் போய் நின்றான். பிறகு ''நத்திங் – மேலே சொல்லு'' என்றான்.

அப்போது ''ஸார், ஸார்!'' என்று கூவிக் கொண்டே யாரோ பின்னாலிருந்த கட்டிடத்திலிருந்து ஓடி வந்தார்கள். ஆபீஸ் ஆர்டர்லிதான். ''ஸார்! உங்களுக்கு அவசரமாக 'கால்' வந்திருக்கிறது. ரொம்ப முக்கியமான சேதியாம். உங்களிடம்தான் சொல்வாராம்.''

''கூப்பிடுவது யார்?'' என்று கேட்டான் சேகர்.

''மிஸஸ் பணிக்கர், ஸார்!''

''நீங்கள் இங்கேயே இருங்கள், மிஸ்டர் கோபால்! இதோ ஒரு நிமிடத்தில் வந்து விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டுச் சேகர் விரைந்து சென்றான்.

அவன் அறைக்கு வந்து ரிஸீவரை எடுத்து, ''ஹலோ, சேகர் ஸ்பீக்கிங்'' என்றதும் மிஸஸ் பணிக்கரின் குரல் பதறிக் கொண்டே, ''இன்ஸ்பெக்டர்! சற்று முன் எனக்கு எங்கேயிருந்தோ ஒரு டிரங்க்கால் வந்தது.'கோவிந்து எங்கே இருக்கிறார்; சொல்லப் போகிறாயா, இல்லையா?' என்று மிரட்டியது. 'எனக்குத் தெரியாது' என்றேன். 'சும்மா டபாய்க்காதே! நீ சொல்லா விட்டாலும் அவனைக் கண்டு பிடிக்காமல் விட மாட்டேன். தாரிணி குடும்பம் முழுவதையும் அழித்து ஒழிக்கும் வரை ஓயவும் மாட்டேன்! தெரிந்து கொள்' என்று போனை வைத்து விட்டது. இன்ஸ்பெக்டர்! தாரிணி குடும்பம் என்றால் என்னையும் சேர்த்துத்தானே?...ஐயோ! எனக்குப் பயமாக இருக்கிறதே! என்னையும் கொலை செய்து விடுவார்களோ?'' என்று புலம்பிற்று.

(தொடரும்)

அடுத்த இதழில்...



மழலை அமுதம்!

சிரிப்பு சிறந்த டானிக் என்றால் மழலைச் சிரிப்பு அமுதமேதான்! வேண்டுமா?

அரசின் சட்டக் குடும்பத்தில் இளையவர்!

புதிய பெரிய பதவி ஏற்றுள்ள திரு வி. பீ. ராமன் பற்றி...



"வம்பன்"

எந்த ஆண்டும் இல்லாத மிக உயர்ந்த உற்பத்தியை 1974—75ம் ஆண்டில் இந்திய சர்க்கரைத் தொழில் எட்டியுள்ளது. அதாவது 48 லட்சம் டன் சர்க்கரையை இந்திய ஆலைகள் உற்பத்தி செய்துள்ளன. இது சென்ற ஆண்டை விட 23 சதவிகிதம் அதிகம்.

ஏற்றுமதி வர்த்தகம் மூலம் பாரத சர்க்கார் சம்பாதிக்கும் அந்நியச் செலாவணியில் 15 சத விகிதம், சர்க்கரைதான் சம்பாதித்துத் தருகிறது. சர்க்கரை ஏற்றுமதியினால் இந்திய சர்க்காருக்கு ரூ. 44.04 கோடி வந்து கொண்டிருந்தது. இது 341 கோடியாக உயர்ந்துள்ளது. அதாவது 674 சத விகிதம் அதிகம். இவ்வளவு இனிமையான செய்தி அடுத்த ஆண்டு மிகவும் கசப்பாகும் போலிருக்கிறது.

வடநாட்டில் வெள்ளம் காரணமாகக் கரும்பு உற்பத்திப் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறதாம். உத்தரப் பிரதேசத்தில் போதிய சூரிய வெளிச்சம் இல்லாததால் சில பகுதிகளில் 10 சத விகிதம்வரை கரும்பு உற்பத்தி பாதிக்கப்படலாமாம். மேலும் வெல்லத்துக்கு நாட்டில் நல்ல கிராக்கியிருப்பதால், கணிசமான கரும்பு, சர்க்கரை ஆலைகளுக்குப் போகாமல், வெல்ல உற்பத்திக்குத் திருப்பப்படலாம் என்கின்றனர்.

* * *

சாதாரணமாகக் கூட்டத்துக்குத் தலைவர்கள் தாமதமாக வர நேர்ந்தால், கூட்டத்தாரிடம் மன்னிப்புக் கோருவார்கள். ஆனால் குஜராத் பிரதமர் திரு பாபு பாய் பட்டேல் புது விதமான மன்னிப்புக் கோரினார். கூட்டம் தொடங்கக் குறிப்பிடப்பட்டிருந்த நேரத்துக்கு அரை மணி முன்னதாகப் போய்ச் சேர்ந்தார். அப்போதுதான் கூட்டத்துக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. கூட்டம் ஆரம்பிக்கக் குறித்த நேரம் வரையில் முதல்வர் பொறுத்திருந்து, கூட்டம் ஆரம்பமானவுடன் சபையோரிடம் தாம் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாக வர நேர்ந்ததற்காக மன்னிப்புக் கோரினார்.


* * *

இந்தச் சந்தர்ப்பத்தில் சமீபத்தில் ராமலிங்கர் பணி மன்றம் நடத்திய காந்தி—வள்ளலார் விழாவில் நடைபெற்ற சம்பவம் நினைவுக்கு வருகிறது. ஒரு நாள் விழாவில் அமைச்சர் திரு அன்பழகன் பங்கு கொள்வதாக இருந்தது. அதற்கு அமைச்சரும் குறித்த நேரத்தில் வந்து விட்டார்.

அமைச்சர் கலந்து கொள்ள வேண்டிய நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன், பத்திரிகைக் கண்காட்சித் திறப்பு விழா ஆரம்பமாகி, நடந்து நீண்டு கொண்டே போயிற்று. ஜெயகாந்தன் தமது பேச்சைத் தொடங்கி ஓயவில்லை. அமைச்சர் அரை மணி நேரத்துக்கு மேல் பொறுமையாகச் சபையோரிடை உட்கார்ந்து பார்த்தார். தாம் கலந்துகொள்ள இருந்த நிகழ்ச்சி விரைவில் தொடங்கும் என்று தோன்றவில்லை. மண்டபத்தை விட்டு வெளியேறி விட்டார்.

* * *

தமிழ் நாட்டில் ஆலைகளில் உற்பத்தியாகும் துணிகள் சரியாக விலை போகாததால் தமிழக மில்கள் பெரும் கஷ்டத்தில் இருப்பதாகச் செய்திகள் வருகின்றன. 70,000 மில் நூல் பேல்கள் மில்களில் அப்படியே தேங்கிக் கிடப்பதாகவும் அவற்றின் மதிப்பு 18 கோடி ரூபாய் என்றும் சொல்லப்படுகிறது. அதே போல் 16 கோடி ரூபாய் பெறுமானமுள்ள 27,000 பேல் ஆலைத் துணிகள் தேங்கிக் கிடக்கின்றனவாம். நவராத்திரி பூஜை சமயத்தில் சாதாரணமாகப் பெருமளவில் வியாபாரம் நடக்குமாம். இந்த ஆண்டு அப்படி நடக்கவில்லை. இப்படி ஆலைகள் பெரும் கஷ்டத்திலிருப்பதால் தமிழ் நாட்டில் ஆறு ஆலைகள் மிகக் குறைந்த விலைக்குக் கைமாறியிருக்கின்றன. தீபாவளிக்காவது இந்த ஆலைத் துணிகள்



ஆலைக் கிடங்குகளை விட்டு வெளியேறும் என்ற நம்பிக்கை இவ்வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுக்கில்லை. அறுவடை முடிந்து கிராம மக்களிடை பணம் புழங்கினால்தான் துணி வியாபாரத்தில் ஏற்பட்டுள்ள மந்தம் நீங்கும் என்கிறார்கள். அதாவது பொங்கலின்போது.

* * *

மலையாள பிரபல நாவலாசிரியர் கேசவ தேவ் அவர்களின் 'ஒரிஜினல்' பெயர் நல்லேடத்து பத்மநாப பிள்ளை கேசவ பிள்ளை என்பதாகும். இந்த கேசவ பிள்ளை, எப்படி கேசவ தேவ் ஆனார் தெரியுமா?

அவர் தமது பதினெட்டாம் வயதில் ஆரிய சமாஜத்தில் சேர்ந்தார். ஆரிய சமாஜத்தில் சேரும் வேளையில் அங்கத்தினர்க்குப் புதிய பெயர் சூட்டும் வழக்கம் உண்டு. அந்தக் கட்டத்தில் சமாஜத்தின் உறுப்பினரான குஷிராம் கேட்டார்: ''உங்களுக்கு 'தேவன்' ஆக வேண்டுமா? 'தாசன்' ஆக வேண்டுமா?''

ஒரு நிமிடம் கூட யோசிக்காமல் கேசவ பிள்ளை ''எனக்குத் 'தேவன்' ஆனால் போதும். 'தாசன்' ஆகவேண்டாம்'' என்றார்.

இதுதான் பிள்ளை, தேவன் ஆன கதை!

டின்னர்!

டி.கே.டி. துரைராஜன்

"அப்பா!''

''எஸ்.... என்ன மாலதி?''

''ஆபீஸிலேயிருந்து சீக்கிரமா வீட்டுக்கு வந்துடுங்க....''

''ஏன்... என்ன விஷயம்?''

''நம்ம வீட்டுக்கு இன்றைக்கு ஒருத்தரை டின்னருக்கு வரச்சொல்லி யிருக்கேன்.''

''ரியலி!... வெரி நைஸ்... யாரது?''

''மோகன்.''

''மோகன்! ஹூ இஸ் இட்?''

டெலிபோனில் 'கொர்' என்று ஏதோ சத்தம். மாலதி பேசுவது சீனிவாசனுக்குக் கேட்கவில்லை. சீனிவாசன் பேசுவது மாலதிக்குக் கேட்கவில்லை. இருவரும் 'ஹலோ... ஹலோ...' என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். சில விநாடிகள் கழித்து அந்தச் சத்தம் நின்றதும்—

'' மாலதி, யார் அந்த மோகன்?'' என்று சிறிது பரபரப்போடு கேட்டார் சீனிவாசன்.

''வாங்களேன், சொல்றேன்'' என்று கூறி விட்டு ரிஸீவரை வைத்த மாலதி தன் தாயாரைப் பார்த்தாள்.

லக்ஷ்மிக்கு ஒன்றுமே விளங்கவில்லை..ஏதோ மாலதி கல்லூரியிலிருந்து அவசரம் அவசரமாக வந்தாள். ''மம்மி.... நம்ம வீட்டுக்கு மோகனை டின்னருக்கு அழைச்சிருக்கேன்''. என்று கூறினாள். பிறகு அப்பாவுக்குப் போன் செய்தாள்.


யார் இந்த மோகன்? இதெல்லாம் என்ன கூத்து?

''ஏண்டி, யாருடி இந்த மோகன்?''

மாலதிக்குச் சிரிப்பா யிருந்தது. அம்மாவுக்கு ஏன் இந்தப் பதற்றம்? அம்மா மட்டுமா, அப்பாவும் கூடத்தான்.

''மம்மி! மோகன் என்னுடைய கிளாஸ் மேட். அவரை எதற்காக டின்னருக்குக் கூப்பிட்டேன் என்கிற விவரத்தை யெல்லாம் பிறகு சொல்றேன். முதல்லே லெட் அஸ் ஸ்டார்ட் குக்கிங்....'' என்று கூறிய மாலதி வேகமாக ஃப்ரிஜ்ஜுக்கு வந்து திறந்து பார்த்தாள்.

விதம் விதமான காய்கறிகள் பசுமையாய்—குளுமையாய் இருந்தன.



'ஹௌ நைஸ்' என்று அவற்றை அப்படியே அள்ளினாள் மாலதி.

''மாலதி! இதெல்லாம் என்ன விளையாட்டு? யார் இந்த மோகன்? முதல்லே அதைச் சொல்லு'' என்று சற்றுக் கோபத்தோடு கேட்டாள் லட்சுமி.

''அதான் சொன்னேனே.... ஸௌல்மேட்டுன்னு கம்.... கம்.... இட் இஸ் கெட்டிங் லேட்...'' என்று மொத்தக் காய்கறிகளையும் எடுத்துக் கொண்டு மாலதி சமையல் அறைக்குப் போக—ஏதோ பிரமை பிடித்தவளாக லட்சுமி பின் தொடர்ந்தாள்.

ஒரு மணி நேரம் கழிந்தது.

சீனிவாசன் போர்டிகோவில் காரை நிறுத்தி விட்டு ''மாலதி... மாலதி!'' என்று வீட்டுக்குள் நுழைந்ததும்— சமையலின் நறுமணம் அவரைத் தூக்கிக் கொண்டு போயிற்று.

சமையலறையிலிருந்து லட்சுமி மட்டும் வெளியில் வந்தாள். அவள் முகமெல்லாம் வியர்த்திருந்தது. அது. சமையல் வேலை செய்ததால் மட்டுமல்ல.

''மாலதி எங்கே லட்சுமி?''

''கொஞ்சம் இப்படி வாருங்களேன்.''

கணவனை அழைத்துக்கொண்டு தனியாகப் போன லட்சுமி, ''யாரோ மோகனாம். மாலதி கூடக் கல்லூரியிலே படிக்கிறானாம். அவனைத்தான் அவ கல்யாணம் பண்ணிக்கப் போறாளாம். நமக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறதுக்காக டின்னருக்கு வரச் சொல்லியிருக்காளாம்....'' என்று கிசுகிசுத்த குரலில் கூறியதும்,—

''ரியலி?'' என்று அதை நம்பாதவர் போல் கேட்டார் சீனிவாசன்.

''நான் என்ன பொய்யா சொல்றேன்?'' என்று சீறினாள் லட்சுமி.

''சத்தம் போடாதே. நான் விசாரிக்கிறேன்.''

''இன்னும் என்ன விசாரிக்கப் போறீங்க? அதான் என்கிட்டச் சொல்லிட்டாளே அது மட்டுமா? அப்பா கிட்டே நீயே சொல்லிடும்மான்னு என்னையே தூது அனுப்பறா!''

அடுத்து என்ன பேசுவது. என்ன செய்வது என்ற யோசனையில் சில விநாடிகள் மௌனமாக இருந்தார் சீனிவாசன்.

''என்ன இருந்தாலும் அவளுக்கு இவ்வளவு துணிச்சல் கூடாது. இதுக்குத்தான் ஆரம்பத்திலிருந்தே அவளைக் கண்டித்து வையுங்க... கண்டித்து வையுங்கன்னு சொன்னேன்'' என்று பொரிந்து தள்ளினாள் லட்சுமி. பதற்றத்தில் வார்த்தைகள் கூடச் சரியாக வரவில்லை.


அவளது அந்தப் பதற்றம் சீனிவாசனுக்குச் சற்று அதிகமாகவே தோன்றியது. ஒரே பெண் என்பதால் மாலதியைச் செல்லமாக — சுதந்திரமாக — வளர்த்தது ஒரு வகையில் தவறுதான். ஆனால் இப்படிப் பதறும் அளவுக்கு இப்போது என்ன நடந்து விட்டது?


''இதோ பார், லட்சுமி! அவ யாரை விரும்புறாளோ அவனுக்கே அவளைக் கல்யாணம் பண்ணி வைக்கணும்னு நாம் முடிவு செய்திருக்கோம். அந்த முடிவை அவகிட்டேயும் சொல்லியிருக்கோம். அதன்படி தன் கணவனைத் தேர்ந்தெடுத்து டின்னருக்கு வரச் சொல்லியிருக்கா... அதிலென்ன தப்பு?''

''அதுக்காக நம்ம கிட்டே ஒரு வார்த்தை கூடக் கேட்காமல் மோகனை டின்னருக்கு வரச்சொல்லணுமா?''

''இந்தக் கேள்வியை என்கிட்டே கேட்கிறதை விட, மாலதி கிட்டே கேட்கிறது தானே?''

''கேட்டேனே! அதுக்கு 'சாரி மம்மீ'ன்னு சிரிச்சிக்கிட்டே சொல்றா... இந்த விஷயத்தை அவள் எவ்வளவு ஈஸியாக எடுத்துக்கிட்டா பார்த்தீங்களா?''





ஒரு ஃபிரஞ்சுக் கார்ட்டூன். —பாலி

''சரி... சரி... நீ போய் மாலதியை வரச் சொல்.. அந்த மோகனைப் பற்றி நான் விவரமாகத் தெரிஞ்சுக்கணும்.''

''மாலதி! அந்த மோகன் யார்? என்ன விஷயம்? எனக்கு ஒன்றுமே தெரியாதே'' என்று நயமாகக் கேட்டார் சீனிவாசன்.

''ஐ ஆம் ஸாரி டாடி... மோகன் என்னுடைய கிளாஸ்மேட். அவரைப் பற்றி இத்தனை நாட்கள் நான் உங்க கிட்டச் சொல்லாததுக்குக் காரணம் அவரைக் கல்யாணம் செய்துக்கணும்ங்கிற முடிவுக்கு நான் வர்ற வரையிலே உங்ககிட்டச் சொல்லக் கூடாதுங்கிறதினாலேதான். ஏன்னா அவரைப் பற்றி ரு ஸில் நான் நல்லாப் புரிஞ்சுக்கணும்னு விரும்பினேன்.''

''இப்ப புரிஞ்சுக்கிட்டாயா?''

''எஸ்... ஹி இஸ் எ ஜெண்டில்மேன். அண்ட் ஹி வில் மேக் எ வெரி குட் ஹஸ்பெண்ட்...''

''ஐஸி'' என்று தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார் சீனிவாசன். என்ன காரணத்காலோ மாலதியின் போக்கு அவருக்கு விகல்பமாகப் படவில்லை.

''இந்தக் கல்யாணத்தைப் பற்றி மோகனுடைய பெற்றோர் என்ன நினைக்கிறாங்களோ?'' என்று கேட்டார் சீனிவாசன்..

''அவங்களுக்கும் சம்மதந்தான். நான் உங்களுக்கு ஒரே பெண். அதேமாதிரி அவங்களுக்கு அவர் ஒரே பிள்ளை. நோ பிராப்ளம். நான் இஷ்டப்பட்டவரைக் கல்யாணம் செய்துக்கலாம்னு நீங்க எனக்குச் சுதந்திரம் கொடுத்திருக்கிற மாதிரி மிஸ்டர் மோகனுக்கும் அவருடைய பெற்றோர்கள் சுதந்திரம் கொடுத்திருக்காங்க...''

சுதந்திரம்!

வாஸ்தவம்தான். மாலதிக்குச் சீனிவாசன் அந்தச் சுதந்திரம் கொடுத்திருக்கிறார். அதன் படி அவள் தன் வாழ்க்கைத் துணைவனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள். இனிமேல் இதில் வாதம் செய்வதற்கு எதுவும் இல்லை.

''மிஸ்டர் மோகனுடைய அப்பா என்ன பண்ணுறார்?''

''சொன்னால் ஆச்சரியப்படுவீங்க. ராம் இன்ஜினியரிங் அவருடையதுதான்.''

சீனிவாசன் பிரமித்துப் போனார். ராம் இன்ஜினியரிங் என்பது இந்தியாவிலேயே மிகப் பெரிய தொழில் ஸ்தாபனங்களில் ஒன்று. அதன் அதிபர் சீதாராம் சொந்த உழைப்பால் முன்னேறி, அக்கத் துறையில் பலருக்கு ஒரு முன் உதாரணமாக இருப்பவர். அந்தக் கோடீசுவரர் எங்கே? மத்திய அரசில் ஒரு முதல் கிரேட் அதிகாரியாக இருக்கும் நான் எங்கே?

'மாலதி சொல்வது உண்மைதானா?' என்ற சந்தேகம்கூட சீனிவாசனுக்கு ஏற்பட்டு விட்டது.

''டாடி... லேட் பண்ணாதீங்க. மோகன் மே கம் அட் எனி மோமெண்ட்... ஐ வில் ஆல்சோ கெட் ரெடி...'' என்று கூறிவிட்டு மாலதி தன் அறைக்குப் போன பிறகு—

சீனிவாசன் தம் மனைவியிடம் வந்தார்.

லட்சுமிக்கு ஒரு வகையில் மகிழ்ச்சிதான். ஆனால் மற்றொரு வகையில் கோபமும் கூட.

''நீங்க என்னதான் சொல்லுங்க. நம்ம கிட்டே ஒரு வார்த்தை கேட்காமல் அவள் மோகனை டின்னருக்கு வரச் சொன்னது சரியில்லை.''

''இட் இஸ் ஆல்ரைட்... ஏதோ சந்தோஷத்திலே வரச் சொல்லிட்டா. நாம்தான் அவளுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு மதிப்புக் கொடுக்கணும்'' என்று அவளைச் சமாதானப்படுத்தினார் சீனிவாசன். லட்சுமியின் மன உறுத்தல் அவருக்கும் இருந்தது. ஆனால் மகளுக்கு ஒரு பிரகாசமான எதிர்காலம் வாய்த்திருக்கும்போது இந்த மாதிரி சிறு சிறு விஷயங்களை யெல்லாம் பெரிது படுத்தக் கூடாது.

''எனக்கு இப்பொழுது வேறொரு கவலையும் வந்திருக்கு'' என்றாள் லட்சுமி.

''என்ன?''

''இப்பவே இந்த மாதிரி நடந்துகொள்கிறாளே..... கல்யாணம் ஆன அப்புறம் நம்மை எந்த லட்சணத்திலே நடத்துவாளோ? நீங்க சொன்னதிலே விருந்து அவங்க பெரிய கோடீசுவரங்களா இருப்பாங்க போலிருக்கு. இவ நம்ம கிட்டே ஒரு பயத்தோட நடந்துக்கிட்டாத்தானே அவங்களுக்கும் நம்ம மேலே ஒரு மதிப்பு இருக்கும்...'' என்று கூறியபோது லட்சுமியின் குரலில் பீதி தட்டியது.

சீனிவாசன் இதயத்தில் ஒரு சுமை ஏறி விட்டது.

''இதோ பார் லட்சுமி... அவ சந்தோஷமாக இருந்தால் போதும். மற்றபடி யார் நம்மை எப்படி நடத்தினால்தான் என்ன? எனக்கு நீ இருக்கே... உனக்கு நான் இருக்கேன். தோர் எண்ட்ஸ் தி மேட்டர்.''

மோகனை வரவேற்க அவர்கள் மூவரும் தயாராகக் காத்திருந்தார்கள்.

மணி ஏழரை. மாலதி உள்ளேயும் வெளியேயும் குட்டி போட்ட பூனை மாதிரி நிலை கொள்ளாமல் நடந்து கொண்டிருந்தாள்.

மணி ஏழே முக்கால். இன்னும் மோகன் வரவில்லை. மாலதிக்கு இருப்புக் கொள்ளவில்லை.

''டாடி.... அவங்க வீட்டுக்குப் போன் பண்ணிப் பார்க்கட்டுமா?''

''வேண்டாம்.... ஹி வில் கம் தென....''

''எப்பவும் – எதிலும் அவர் பங்க்சுவலா இருப்பார்..... இன்னைக்கு ஏன் லேட்டுன்னு தெரியலியே.....'' என்று கூறிய மாலதி இடைசென்று. ''டாடி... எனக்கு என்னவோ சந்


ரூபி டஸ்ட் டீயில் மட்டுமே காணும் மூன்று சிறப்பம்சங்கள்
1. கணத்தில் கிட்டிடும் பானம்
2. தருவதும் செறிந்த மணம்
3. பெருவதோ கோப்பைகள் அதிகம்
Superb Teas
SELECTED FOR STRENGTH AND FLAVOUR
RUBY DUST
கெட்டியான டிகாக்ஷன் மட்டுமல்ல; சிக்கனத்தை யும் சிறப்பம்சமாய்க் கொண்ட ஒரே டீ-லிப்டன் ரூபிடஸ்ட். முழுமையான தேநீரின் மறு பெயர்தான் லிப்டன் ரூபி டஸ்ட்.
லிப்டன் ரூபி டஸ்ட்
ஒவ்வொரு பாக்கெட்டுக்கும் செறிவு மிக்க அதிகக்கோப்பைகள்
LIPTON
LRDC-10 TAM

தேகமா இருக்கு.... அவங்க வீட்டுக்குப் போன் பண்ணிப் பார்க்கிறேன்....'' என்று பரபரப்போடு டெலிபோனை நோக்கி வந்த பொழுது —

டெலிபோன் மணி அடித்தது. ஆவலோடு ரிசீவரை எடுத்து, ''ஹலோ'' என்றாள் மாலதி.

''மாலு.... மோகன் ஸ்பீக்கிங்....''

''ஹை டியர்.... எங்கேயிருந்து பேசறீங்க? டின்னருக்கு லேட்டாகுதே......''

''சாரி டியர்.... டின்னருக்கு நான் வர முடியாதுன்னு நினைக்கிறேன்.....''

''வாட்'' என்று கத்திவிட்டாள் மாலதி.

விஷயம் என்னவாக இருக்கும் என்பதை ஊகித்துக் கொண்ட சீனிவாசனும், லக்ஷ்மியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''ஐ ஆம் சாரி மாலதி.... உங்க வீட்டுக்கு டின்னருக்குப் போகப் போறதா எங்க அப்பா கிட்டே சொன்னேன்.... அவர் ரொம்பக் கோபிச்சுக்கிட்டார்.....''

'' ஏன் ?''

'' என்னடா — சிறிசுகள் ரெண்டு பேருமா சேர்ந்துக்கிட்டு விளையாடுறீங்களான்னு கேட்கிறார்.''

''இதிலென்ன விளையாட்டு....? என்னோட பெற்றோருக்கு உங்களை அறிமுகப் படுத்தி வைக்கப் போறேன்... அதிலென்ன தப்பு இருக்கு ?''

''அதுதான் தப்புன்னு சொல்றார். முறைப்படி பெரியவங்க சந்திச்சுப் பேசினதுக்கு அப்புறந்தான் ஒருத்தர் வீட்டுக்கு ஒருத்தர் சாப்பிடப் போகணுமாம். உங்க அப்பாவுக்கு இந்த டின்னர் சமாசாரம் தெரியுமான்னு கேட்டார். மாலதி சொல்லி யிருப்பான்னு சொன்னேன்.... அப்பா ரொம்பவும் கண்டிச்சார்.''

''ஏன்? எங்க வீட்டுக்கு உங்களை டின்னருக்குக் கூப்பிடவோ அல்லது நீங்க டின்னருக்கு வரவோ நமக்குச் சுதந்திரம் இல்லையா?''

'' இதே கேள்வியைத்தான் நானும் கேட்டேன். இதுக்குப் பேரு சுதந்திரம் இல்லேடா. தறுதலைத்தனம்னு சொல்றார். உங்களுடைய ஆசை எதுவோ அதை எங்கிட்டே சொல்லுங்க... மற்ற விஷயங்களை நாங்க கவனிச்சுக்கிறோம். அதை விட்டுட்டு எல்லாத்தையும் நீங்களே தான் செய்யணும்னு நினைக்கிறது தறுதலைத்தனம்னு திட்டுறார்.''

ரிசீவரைப் பிடித்திருந்த மாலதியின் கை நடுங்கத் தொடங்கியது.

'' சாரி மாலதி! டின்னருக்கு வரலியேன்னு கவலைப்படாதே.... நாளைக்கு ஈவினிங் உன்னைப் பெண் கேட்கிறதுக்காக என் அப்பாவே வரப் போறார். நானும்கூட வர்றேன்..... மற்ற விஷயங்களை அப்புறம் பேசலாம். குட் நைட். ஸ்வீட் ட்ரீம்ஸ்.....''

மாலதி ரிசீவரை வைத்துவிட்டுத் தன் பெற்றோர்களைப் பார்த்தாள்.

அவள் செய்தது எவ்வளவு பெரிய தவறு ?

''என்ன மாலதி..... மோகன் என்ன சொன்னார் ? ஏன் டின்னருக்கு வரலியாம்?'' என்று கேட்டார் சீனிவாசன்.

அதற்குப் பதில் சொல்லாமல், '' என்னை மன்னிச்சிடுங்க டாடி.... என்னை மன்னிச்சிடுங்க மம்மி....'' என்று அழத் தொடங்கி விட்டாள் மாலதி.

'பொய்யின் பெருமை என்ன ?'

''பொய்யினால் ஒருவன் அடையும் ஆதாயமெல்லாம் இதுதான் - அவன் உண்மையைச் சொல்லும் போதும், எவரும் நம்பமாட்டார்கள்.'' - அரிஸ்டாட்டில்

'நீங்கள் யாருக்கு அஞ்சுகிறீர்கள் ?'

''நான் இறைவனுக்கு அஞ்சுகிறேன். இறைவனுக்கு அடுத்தாற்போல், அவனுக்கு அஞ்சாதிருப்பவனைக் கண்டு அஞ்சுகிறேன்.'' - ஸாஅதி

'கிழவயது என்று எதை நினைக்கிறீர்கள் ?'

''நான் ஒரு நாளும் கிழவனாகமாட்டேன். எப்போதும் என் வயதைக் காட்டிலும் பதினைந்து வயது அதிகமாக இருப்பதைத்தான் நான் கிழ வயது என்பேன்.'' - பெர்னார்ட் பரூக்.

'கோபமடைந்த பெண் எதைப் போன்றவள் ?'

''கோபம் அடைந்த பெண் கலங்கிய சுனையைப் போன்றவள். கலங்கிய சுனையில் அழகில்லை; ஒளியில்லை; தெளிவில்லை; கவர்ச்சியில்லை.'' - ஷேக்ஸ்பியர்

'உத்தம மனைவியைப் பெற வழி என்ன ?'

'' உத்தம கணவனாக இருப்பதுதான் உத்தம மனைவியைப் பெற ஒரே வழி.'' -பிக்கன்ஸ்பாக்கர்

தொகுப்பு : கொ. வெ. தூரிகை





கடைசிப் பக்கம் கண்ணதாசன்

சட்டமும் தர்மமும்

சட்டம் பயமுறுத்துகிறது; தர்மம் கெஞ்சுகிறது.

கெஞ்சும்போது பணியாதவன், பயமுறுத்தினால் பணிந்து விடுகிறான்.

இந்த அவசரச் சட்டத்தில் எனக்கொரு மகிழ்ச்சி.

நமது வேதங்களும், சாஸ்திரங்களும் எவ்வளவு போதித்தன ; அது யாருக்குப் புரிந்தது ?

'அரசனை ஏமாற்றுவது தெய்வத்தை ஏமாற்றுவது போல்' என்கிறது சாஸ்திரம்.

நம்மில் பலரோ அரசனை மட்டும் ஏமாற்றவில்லை; தெய்வத்தையே நேரடியாக ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம்.

'புத்தி இது மகனே' என்று போதிக்கும்போது பலருக்குச் சிரிப்பு வரும். ஆனால், 'கத்தி இது மகனே' என்று காட்டும்போதுதான் புத்தி வரும்.

'இது வழியல்ல' என்று போர்டு போட்டிருக்கும்; இந்தியன் அந்த வழியாகப் போவான்.

'இங்கே நிறுத்தாதே' என்று எழுதியிருக்கும்; அங்கே நிறுத்துவான்.

'பிறர் பொருளைத் திருடாதே' என்று உபன்யாசகர் பேசிக் கொண்டிருப்பார் ; அங்கேயே இந்தியன் 'பிக்பாக்கெட்' அடிப்பான்.

'சர்க்கரை இல்லை' என்று கடைக்காரன் போர்டு போட்டிருப்பான்; தனியாகப் போய்க் கேட்டால் ஐந்து ரூபாய் கூட வாங்கிக் கொண்டு கொடுப்பான்.

ஒழுக்கத்தில் தனி மனித ஒழுக்கம், சமுதாய ஒழுக்கம் என்று இரண்டு வகை உண்டு.

'தனி மனித ஒழுக்கத்தைச் சட்டத்தின் மூலம் கொண்டு வர முடியாது' என்று நான் எழுதியிருக்கிறேன்; அதுவும் முடியும்போல் இன்று தோன்றுகிறது.

தனி மனித தர்மத்தை மொத்தமாகச் சேர்க்கும்போதுதான் சமுதாய தர்மம் உண்டாகிறது.

இந்திய சமுதாயத்துக்கு நடுநிலை உணர்வு கிடையாது.

ஒன்று, 'அல்ட்ரா வயலெட்'; அல்லது, 'இன்ஃப்ரா ரெட்'.

போனால் 'எல்லாமே எனக்கு வேண்டும்' என்று ஓடுகிறது ; இல்லை என்றால் 'ஒரு கோவணம்கூட எனக்கு வேண்டாம்' என்று குப்புறப் படுத்துக் கொள்கிறது.

இரண்டையும் இணைத்துச் சமப்படுத்தினால்தான் சராசரி சமுதாயம் உருவாகும். —தர்மம் இதைத்தான் சாதிக்க முயன்றது.

தர்மோபதேசம் தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகள் ஓடிவிட்டன.

அதைப் பலர் நம்பவில்லை; ஒப்புக்கொள்ளவில்லை; சிலரோ கேலியும் செய்தார்கள்.

தர்மத்தைக் கைவிட்ட மனிதர்களை இப்போது, சட்டம் பிடித்துக் கொண்டது.

சட்டம் பிடித்த பிறகுதான் தர்மத்தைப் பற்றிய புத்தி வருகிறது.

எந்த ஊருக்குப் போகிறோம் என்பது குதிரைக்குத் தெரிந்துவிட்டால் சாட்டையும், லகானும் தேவையில்லைதான். ஆனால் நமது குதிரைகளோ காட்டுக் குதிரைகள்!

மயிலே மயிலே என்றால் இறகு போடாது; இரண்டு அடி அடித்தால் இறகு உதிருகிறது.

இருநூறு ஆண்டுகளுக்கு முந்தி வரையில் இந்திய சமுதாயத்தில் இந்த அளவுக்குத் திருட்டுத்தனமும், தில்லுமுல்லும் இருந்ததில்லை; ஓரளவுக்கு இருந்தது. அதையே வெள்ளைக்காரன் அதிகம் என்று நினைத்தான்.

அவனது ஆதிக்கத்தின் கீழ் இருந்த காலனிகளில் இந்தியாவுக்கு மட்டும் சில விசேஷச் சட்டங்களைச் செய்தான்.

"குற்ற பரம்பரைச் சட்டம்", "ஜாமீன் வழக்குச் சட்டம்", "கடன் வாங்கியவன் திருப்பிக் கொடுக்கவில்லை என்றால் கைது செய்யும் சட்டம்" இவையெல்லாம் இந்தியாவுக்கு வெள்ளைக்காரன் அளித்த விசேஷப் பரிசுகள்.

காரணம் உலகத்திலேயே இந்தியன்தான் நாணயம் கெட்டவன் என்று அவன் கருதினான்.

அன்றைக்கே அப்படி என்றால், இன்றைக்கு எப்படி ?

என்னிடம் ஒருவர் வேலை பார்த்தார்.

அவர் தமக்கு ஐந்நூறு ரூபாய் கிடைக்கிறது என்றால், எனக்கு ஐயாயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்படுத்தத் தயங்கமாட்டார்.

எந்தத் தர்மத்தைப் போதித்து அவரைத் திருத்துவது ?

சட்டத்தால் தர்மத்துக்கொரு லாபம் உண்டு.

என்ன அது ?

அதாவது, அதுதான் தர்மத்தையே நினைவு படுத்துகிறது.

இப்போது பழைய தர்மோபதேசங்களை மீண்டும் பேச ஆரம்பியுங்கள்; கடைக்காரர்களெல்லாம் கைகட்டிக்கொண்டு கேட்பார்கள்.

அதையும் சிறைச்சாலையிலேயே போய்ப் பேசுங்கள்; 'ஓம், முருகா, ஸ்ரீகிருஷ்ணா' என்று உரத்த குரலில் உச்சரிப்பார்கள்.

இன்றைய சட்டம் அரசியல்வாதிகளுக்கு எப்படித் தோன்றுகிறதோ, எனக்குத் தெரியாது.

ஆன்மீகத்துக்கு இது பெருத்த லாபம்.

தூக்குமேடைக்குப் போகும் போதுதானே கொலை செய்யக் கூடாது என்ற தர்மம் கொலைகாரனுக்குப் புரிகிறது.

தர்மம் வலுவிழந்த இடத்தில் சட்டம் அதற்குத் துணை செய்கிறது.

நான் இன்றைய சட்டத்தை வரவேற்கிறேன், இந்தியாவின் சமுதாய தர்மத்தைக் காப்பதற்காக.

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

தேவைகளை சொந்தமாகப் பூர்த்தி
செய்வதை நாங்கள் வலியுறுத்துவது
எஃகுத் தயாரிப்புத் துறையுடன்
மட்டும் நிற்கவில்லை.

ஆதித்யபூரில் உள்ள எங்களது
மாபெரும் பராமரிப்புத் தொழிற் கூடம்
ஒன்றிலேயே நாங்கள் சிக்கலான
மிஷின்களையும் துணை பாகங்களையும்
சொந்தமாக உருவாக்குவதன் மூலம்
இவற்றின் இறக்குமதியைத் தடுத்து
ஆண்டுதோறும் தேசத்திற்காகப்
பெருமதிப்புள்ள அன்னியச்
செலாவணியை மீதப்படுத்துகிறோம்

ஆண்டுகள் பல உருண்டோடினும்,
நாங்கள் இளமை குன்றாது திறம்படச்
செயல்படுவதற்கு இது ஓர் சீரிய
எடுத்துக்காட்டாகும்

தேவைகளை சொந்தமாகப் பூர்த்தி
செய்யும் துறையில் நாங்கள்
வளருகிறோம்.

எஃகினை யொத்த உறுதியான குறிக்கோள்



டாடா ஸ்டீல்

TIL 8730



இதம் கனிந்த கோடை வாசமாம்,
இந்தியப் பெருமை பேசுமாம்,
தங்கத்தில் தகதக ஒளிவீசுமாம்,
குங்குமம் பூசுமாம் சிவந்த ரோசா,
சிங்காரச் சேலையடி டெரிகோனா
கட்டாவ்
டெரிகோஸா சேலைகள்
டெரீன்